REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 23 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 119 | Monday 23,May, 2022 | 16பக்கங்கள் | 40/-

## அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக அந்தனி அல்பனிஸ்



அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று தொழில் கட்சி சார்பில் போட்டியிட்ட அந்தனி அல்பனிஸ் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரு தசாப்த 06

---

சுமார் 4,000 பரீட்சை நிலையங்களில் 5,17,496 பரீட்சார்த்திகள்;

## GCE (O/L) பரீட்சைகள் இன்று ஆரம்பம் அனைத்து பூர்வாங்க ஏற்பாடுகளும் பூர்த்தி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் இந்த பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளது. குறித்த பரீட்சை 3,844 பரீட்சை நிலையங்களிலும் 542 இணைப்பு 06



சகலரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு பரீட்சை ஆணையாளர் கோரிக்கை

---

## புதிய பிரதமருடன் இணைந்து பணியாற்ற விரும்பும் ஜனாதிபதி

அவுஸ்திரேலிய பிரதமருக்கு வாழ்த்து தெரிவிப்பு



அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தனி அல்பனிஸ் உடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக இலங்கை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அந்தனி அல்பனிஸுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனை குறிப்பிட்டுள்ளார். 06

---

## O/L பரீட்சைக்கு எவருமே இடையூறு விளைவிக்காதீர்கள்

யுத்த காலத்தில் புலிகள் கூட தடை ஏற்படுத்தியதில்லை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாரதூரமான யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் கூட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகளால் பரீட்சைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்படவில்லை. யாழில் கூட இறுதிக் கட்ட யுத்தத்தின் போதும் அமைதியான முறையில் பரீட்சைகள் இடம்பெற்றன. எனவே நாட்டில் தற்போதுள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு இடையூறின்றி பரீட்சைகளை 06

---

சுமார் 02 பில். ரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிப்பொருட்களுடன்

# தமிழக நன்கொடை நாட்டை வந்தடைவு

இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லேயினால் அரசாங்கத்திடம் ஒப்படைப்பு



9,000 மெ.தொன் அரிசி, 50 மெ.தொன் பால்மா, சுமார் 26 மெ.தொன் மருந்துப் பொருட்கள் அடங்கலாக பல உதவிப்பொருட்கள் முதற்கட்டமாக வந்து சேர்ந்தது

இந்தியாவினால் நன்கொடையாக வழங்கப்படும் இரண்டு பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதி வாய்ந்த மனிதாபிமான உதவிப் 06



---

சமுர்த்தி பயனாளர், உதவி தேவைப்படுவோர் உட்பட

# 33 இலட்சம் குடும்பங்களுக்கு அரசாங்க நிவாரண உதவி

ரூபா 5,000 முதல் 7500 வரை நிதியுதவி வழங்க தீர்மானம்

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளிகள் ஆகியோருக்கு வேலைத்திட்டம் நடைமுறை

பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள சமுர்த்தி பயனாளர்கள் மற்றும் உதவி தேவையான 33 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் இம்மாதம் முதல் எதிர்வரும் இரு மாதங்களுக்கு 5000 முதல் 7500 ரூபா வரை நிதியுதவி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி 17 இலட்சத்து 65 000 சமுர்த்தி பெறுனர் குடும்பங்கள், 730 000 குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் 06

---

## குரங்கு அம்மை நோய் தொற்று குறித்து இலங்கையிலும் ஆய்வு

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் முயற்சியில்



உலகின் பல நாடுகளில் பரவியுள்ள குரங்கு அம்மை தொற்று நோய் தொடர்பான பரிசோதனையை மேற்கொள்ள மற்றும் நோய்த் தொற்றை கண்டறிவதற்கான வசதிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 06

---

பொருளாதார ஸ்திர தன்மைக்கே முதலிடம்;

## 2024 ஆம் ஆண்டுவரை தேர்தல் நடைபெறாது

கொள்கையளவில் அரசு தீர்மானம்

பொருளாதாரத்தை ஸ்திரபடுத்தும் வகையில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுவரை எவ்வித தேர்தலையும் நடத்தாமல் இருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே அடுத்த வருடம் முழுவதும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டங்களை செயற்படுத்த முன்னுரிமை வழங்குவதற்கு அரசாங்கம் 06

---

குறைவருமானத்தை கொண்ட கொழும்பு

## தொடர்மாடி மக்களுக்கு சமைத்த உணவு வழங்கவும்

பிரதமரிடம் மனோ கணேசன் கோரிக்கை



உணவு இல்லை, காஸ் இல்லை, மின்சாரம் இல்லை. இவற்றால் நாட்டிலேயே மிகவும் துன்புறுவது கொழும்பு தொடர்மாடி குடியிருப்புகளில் வாழும் மக்கள் தான். மாநகரத்தில் நாளாந்த வருமானம் பெற்று வந்த குடும்பங்கள், ஒருவேளை உணவுமின்றியும், 06

---

## ஹரீன், மனுஷவின் செயல் குறித்து வெறுப்புடன் சஜித்

அருவருக்கத்தக்க செயல் எனவும் கண்டனம்



எமது கட்சியின் தீர்மானத்தை மீறி அரசு பக்கம் சாய்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் இருவரினதும் இந்தச் செயற்பாடு மிகவும் அருவருக்கத்தக்கது என எதிர்க்கட்சித் 06

---

நுரைச்சோலை மின் உற்பத்தி வழமைக்கு;

## அடுத்த வாரம் முதல் தடையின்றி மின் விநியோகம் வழங்க ஏற்பாடு



மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர நம்பிக்கை தெரிவிப்பு

அடுத்த வாரத்தின் முற்பகுதியில் இருந்து தடையின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம், தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் நாட்டின் மின்சார தேவையினை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, கல்வி பொதுத் தராதர சாதாரண 06

---

அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கு

## இலங்கைப் பெண்கள் இருவர் தெரிவாகினர்

மிச்சேல் ஆனந்தராஜா, ராஞ்ச் பெரேரா



அவுஸ்திரேலியாவின் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை வம்சாவளியை சேர்ந்த இரண்டு பெண்கள் அந்நாட்டு சமஷ்டி நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 06

---

## சட்டம் ஒழுங்கை பாதுகாக்க இராணுவம் தயார் நிலையில்


உறுதி செய்யும் வர்த்தமானி ஜனாதிபதியால் வெளியீடு

சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக இராணுவம் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் வெளியிட்டுள்ளார்.

குறித்த வர்த்தமானி பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12வது பிரிவின் கீழ் (அத்தியாயம் 40) 06



---



இன்றிலிருந்து அடுத்த 10 நாட்களுக்குள்

**எரிபொருள் வரிசை முற்றுப்புள்ளிக்கு வரும்** 03



**எரிபொருள் பவுஸர் சாரதி மீது கொடூர தாக்குதல்** 03

யாழ். சுன்னாகத்தில் இருவர் கைது!



**வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் மூலம் வருமானம்** 03

2021ஆம் ஆண்டு மட்டும் 3,221 மில். ரூபா கிட்டியது

---

அரசியலமைப்பு திருத்தம் குறித்து பேச

## தமிழ் கட்சிகளுக்கு ஸ்ரீகாந்தா அழைப்பு



அரசியலமைப்பு சீர்த்திருத்தத்திற்கான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாட தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த அழைப்பு 06

---

எரிபொருள் நிலைய

## உரிமையாளரின் வீட்டுக்கு தீ வைப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



கெக்கிராவ இப்பலோகம திலக்கபுர பகுதியில் உள்ள எரிபொருள் நிலைய உரிமையாளர் ஒருவரின் வீட்டிற்கு சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது. இப்பலோகம பகுதியில் உள்ள அவருக்கு சொந்தமான எரிபொருள் நிலையத்தில், எரிபொருள் கிடைக்கவில்லை 06

---

## SLBC பணிப்பாளர் நாயகம் தொடர்பில் பொய் வதந்தி

அரச நிறுவனங்களை குழப்பவும் சிலர் முயற்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (SLBC) பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச நிறுவனங்களுக்குள் காட்டுச் சட்டத்தை முன்னெடுக்க அனுமதிக்கக் கூடாது எனவும், உள்ளக முரண்பாடுகளை உருவாக்கி அரச நிறுவனங்களில் நிர்வாகத்தை சீர்குலைக்கும் திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் 06



---

## ஜப்பானுடனான இலகு ரயில் திட்டமா?

பிரதமர் அலுவலகம் மறுப்பறிக்கை



ஜப்பானுடனான இலகு ரயில் போக்குவரத்தை (LRT) புனரமைக்க இலங்கை முயற்சிக்கவில்லை என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. எவ்வாறாயினும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள், எரிவாயு, மின்சாரம் போன்ற முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை 06

---

**விக்கல் வீராச்சாமி**



புதிய அமைச்சர்கள் எவருக்கும் சம்பளம் இல்லை எண்டு பிரதமர் தெரிவிச்சிருக்கிறார், அப்படி எண்டா யாராவது முன் வருவினமோ....

நிச்சயம் வருவினம், பதவி வந்தா பத்தும் வரும் எண்டது அவைக்கி நல்லா தெரியும், ஆனா அது இந்தப் பிரதமரோட சரிப்பட்டு வருமோ தெரியாது...!!!

# நகர்வலம்



## ரயிலுடன் ஜீப் வண்டி மோதி விபத்து

### மூவர் காயம்; நீர்கொழும்பில் சம்பவம்

**(நீர்கொழும்பு தினகரன் நிருபர் )**

நீர்கொழும்பு, பெரியமுல்ல ரயில்வே கடவையில் ரயிலுடன் ஜீப் வண்டியொன்று மோதியதில் பாரிய விபத்து இடம்பெற்றுள்ளது. இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் (21) நீர்கொழும்பு பெரியமுல்லயில் இடம்பெற்றுள்ளது.

அதாவது, பொதிகளை ஏற்றிக் கொண்டு கொழும்பு கோட்டையிலிருந்து சிலாபம் நோக்கி புறப்பட்டுச் செல்லும் ரயிலுடனேயே குறித்த ஜீப் வண்டி பெரியமுல்ல ரயில்வே கடவையில் மோதியுள்ளது . ஜீப் வண்டியில் அமர்ந்திருந்த நான்கு பேரில் மூவர் விபத்தில் சிக்குண்டு காயமடைந்துள்ளனர் . காயமடைந்த மூவரும் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும் ஆஸ்பத்திரிப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். விபத்தின் போது ஜீப் வண்டியில் சிக்குண்ட நபர்களை பிரதேசவாசிகள் மீட்டெடுத்தனர் .



விபத்தில் சிக்கிய நபர்கள் கட்டான பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர் . மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**புதிய பிரதமரின் அமைச்சரவையில்**

## தென் மாகாணத்திற்கு மூன்று அமைச்சர்கள்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அமைச்சரவையில் தென் மாகாணத்திற்கு மூன்று அமைச்சுக்கள் மற்றும் பிரதி சபாநாயகர் பதவியும் கிடைக்கப்பெறுள்ளது. இவர்களுள் மாத்தறை மாவட்டத்திற்கு ஒரு அமைச்சரும், காலி மாவட்டத்திற்கு இரு அமைச்சர்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன் பிரகாரம், எரிசக்தி அமைச்சராக மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகரவும், காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பதிரன பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராகவும், மனுஷ நாணயக்கார தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷ பிரதி சபாநாயகராக நியமனம் பெற்றுள்ளார்.

ஏற்கனவே, மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபாநாயகராக பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒட்டுமொத்தமாக தென் மாகாணத்துக்கு மூன்று அமைச்சர்களும் சபாநாயகர், பிரதி சபாநாயகர் பதவிகளும் கிடைக்கப்பெற்றுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## மாத்தறை மாவட்டத்தில் கடும் மழை; 33 வீடுகள் சேதம், 125 பேர் பாதிப்பு

### மாத்தறை மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

மாத்தறை மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த பலத்த மழை மற்றும் காற்றின் காரணமாக 7 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள 33 குடும்பங்களைச் சேர்ந்த 125 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 33 வீடுகள் சேதமடைந்துள்ளதாக மதிப்பீட்டின் மூலம் தெரிய வந்துள்ளதென மாத்தறை மாவட்ட செயலாளர் சட்டத்தரணி வை. விக்ரமசிறி தெரிவித்தார்.

திஹகொட பிரதேச செயலகப்பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 8 வீடுகள் சேதமடைந்துள்ளன. மாலிம்பட பிரதேச செயலக பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பிரிவில் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன. வெலிகம பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 3 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று வீடுகளும் சேதமடைந்துள்ளன. மேலும் திக்குவல்லை பிரதேச செயலகபிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதோடு அப்பிரிவில் 4 வீடுகள் சேதமடைந்துள்ளன. ஹக்மனை பிரதேச செயலகபிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு அப்பிரிவில் 7 வீடுகளும் பிடபத்தர பிரதேச செயலகபிரிவில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று வீடுகளும் சேதமடைந்துள்ளன.



புஹுல்வெல்ல பிரதேச செயலக பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 வீடுகள் சேதமடைந்துள்ளன. அதுரெலிய பிரதேச செயலகபிரிவில் இரண்டுவீடுகளும் சேதமடைந்துள்ளதாக மாவட்ட செயலக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## வன விலங்குகளினால் ஏற்பட்ட இழப்பு, சேதங்களுக்கு கொடுப்பனவு

**( திறப்பனை தினகரன் நிருபர்**

காட்டு யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளினால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு கோரி விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு பரிந்துரைக்கப்பட வேண்டிய நட்டஈடு குறித்து தீர்மானிக்கும் குழுக் கூட்டம் அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிக செயலாளர் சந்தியா அபேசேகர தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அனைத்து நஷ்டஈடுகளும் கடந்த ஜனவரி மாதம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் நாட்களில் நஷ்டஈடு கிடைத்தவுடன் வழங்கப்படும் எனவும் அக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதத்திற்கான விண்ணப்பங்களை ஆய்வு செய்யவும், இழப்பீடு வழங்குவதற்கும், விரைவில் ஒப்புதல் அளிக்கவும் இக் குழு கூடியது.

ஒரு உயிரிழப்புக்கு 900,000 ரூபாய் வழங்க குழு ஒப்புதல் அளித்தது. உடல் காயம் அடைந்த 5 பேருக்கு ரூ.175047 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### அங்கீகரிக்கப்பட்டோருக்கு நட்டஈடு

மேலும், நஷ்டஈடு கோரி 80 விண்ணப்பங்கள் பெறப்பட்டாலும், 75 விண்ணப்பங்களுக்கு இழப்பீடு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் தொகை 2830654 ஆகும். பல்வேறு குறைபாடுகள் மற்றும் முரண்பாடுகள் காரணமாக எஞ்சிய விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. மேலும் சில விண்ணப்பங்கள் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குழுவின் செயலாளரும், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருமான டபிள்யூ. எம். கே. தி. சந்திரரத்ன, உதவிப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு, கே. ரணவீர, அநுராதபுரம் மாவட்ட செயலகம். எம். பி. எச். ஹேரத் மற்றும் என். எல். வணிகசேகரம் உட்பட மற்றும் அதிகாரிகள் குழுவினர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

## அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் இருநாள் ஆளுமை விருத்தி செயலமர்வு







மாணவர் கற்றல் விருத்தி மற்றும் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் இருநாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்திற்கு, தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரியை எம்.பீ. நுஸ்ரா தலைமையிலான குழுவினர் வருகை தந்தனர்.

ஆசிரிய பயிலுநர் குழுவில் எம்.எல்.எப். ரிஷாதா, பீ.பவித்ரா, ஆர்.எப். றஸ்னியா, எம். என்.எப். நுஸ்லா, ஏ.எல்.ஏ.ஜீ. சஹீமா, கே. பிரசன்யா, ஆயிஷா ஷிரானி, எஸ்.ரம்யா, எஸ். ஸரன்யா ஆகியோர் பங்கெடுத்தனர்.

பாடசாலை அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் மற்றும் ஆசிரியர் குழாத்துடன் வெசாக் வார விசேட நிகழ்வுகளிலும் அவர்கள் பங்குபற்றி மாணவர்கள் மேற்படி தினத்தில் வெசாக் கூடுகளை கட்டும் பயிற்சிகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தியதோடு அவர்களை ஊக்கப்படுத்தினர்.

இருநாள் நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர்கள் இனங்காணப்பட்டு தனியாள் வேறுபாடுகளுக்கமைய எழுத்து, வாசிப்புத் திறன்களை விருத்தி செய்தல், ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தல், உடலியக்கச் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ள வழிகாட்டல் ஆகிய பரிகார செயற்பாடுகள் ஆசிரிய பயிலுநர்களால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மாணவர்கள் விருப்பத்துடன் மகிழ்ச்சியுடனும் பயிற்சிகளில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

## இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டும் தமிழக முதலமைச்சருக்கு நன்றிகள்

### உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத்



இலங்கை மக்களின் இன்றைய பொருளாதார கஷ்டத்தை உணர்ந்து இலங்கைக்கு நிவாரண கப்பலை அனுப்பியமைக்காக தமிழ் நாட்டு முதலமைச்சர் ஸ்டாலினுக்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) இலங்கை மக்கள் சார்பில் தனது நன்றியை தெரிவித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்திருப்பதாவது, இலங்கை மக்கள் தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்கிறார்கள். இதனை கருத்திற்கொண்டு நமது அயல்நாடான இந்தியா உதவ முன் வந்து பல உதவிகளை செய்து வருவதானது ஏனைய நாடுகளுக்கும் முன்மாதிரியாகும்.

அதே போல் இந்நிவாரணங்கள் இலங்கையின் வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கு இன மத பேதம் இன்றி வழங்கி வைப்பதில் இந்திய தூதரகம் அவதானம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைக்கிறோம். இலங்கையின் நிலையை கருத்திற்கொண்டு பல நாடுகளும் கடன் வழங்கி இலங்கைக்கு மேலும் சுமையை ஏற்படுத்தவே முயலும் நிலையில் தமிழ் நாட்டு அரசின் உணவு, மருந்து இலவச உதவிகள் மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதனை உதாரணமாகக்கொண்டு ஐரோப்பிய மற்றும் அரபு நாடுகளும் இலங்கைக்கு இலவச நிவாரண உதவிகளை அனுப்பி வைக்க வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி மேலும் கேட்டுக்கொள்கிறது.

## புத்தளம் ஸாஹிரா உயர்தர மாணவர்களின் கண்காட்சி

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் உயர்தர 13 ஆம் வருட கல்வி தொழில் பிரிவு மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாட ரீதியான வகுப்பறை கண்காட்சி அண்மையில் கல்லூரியின் அஸ்வர் மண்டபத்தில் நடைபெற்றது. கலையும் கைப்பணியும் பாடத்தின் பொருட்டு மாணவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு விற்பனை நிகழ்வும் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஐ.ஏ. நஜீம் தலைமையில் காட்சிக்கூடம் திறந்து வைக்கப்பட்டதோடு தரம் 6 தொடக்கம் 9 வகுப்பு வரைக்குமான மாணவர்களின் பார்வைக்காக காட்சிக் கூடமும் திறந்து வைக்கப்பட்டது.

## எரிகாயங்களுக்குள்ளான வயோதிப பெண் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

முந்தல் பெருக்குவற்றான் கிராம சேவகர் பிரிவு உட்பட்ட பகுதியில் உள்ள தோட்டமொன்றில் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிப பொண்ணொருவர் சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை (20) உயிரிழந்துள்ளார். உடப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெருக்குவற்றான் கிராம சேவகர் பிரிவில் உள்ள தனியாருக்குச் சொந்தமான தென்னந்தோட்டம் ஒன்றில் தங்கியிருந்த 67 வயதுடைய முந்தல் பகுதியைச் சேர்ந்த வயோதிப பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். முந்தல் பகுதியைச் சேர்ந்த வயோதிப தம்பதியினர், முந்தல் பெருக்குவற்றான் கிராம சேவகர் பிரிவில் உள்ள தனியாருக்கு சொந்தமான தென்னந்தோட்டம் ஒன்றில் வசித்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், குறித்த தினம் காலை வயோதிப பெண் சமயலறையில் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த கோது திடீரென அவரது உடலில் தீ பரவியுள்ளதாக கூறப்படுகிறது.

## 2022ஆம் ஆண்டிற்கான மாதிரி ஐக்கிய நாடுகள் சபை மாநாடு

**ருஸைக் பாரூக்**



2022 ஆம் ஆண்டிற்கான மாதிரி ஐக்கிய நாடுகள் சபை மாநாடு (Best Diplomates) இம்முறை ஐக்கிய அரபு அமீரகத்தில் மே மாதம் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெற்று வருகிறது. இந் நிகழ்வில் இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் மற்றும் களுத்துறை மாவட்டத்தின் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முப்தி ஆகிய இருவரும் பங்குபற்றுவதோடு மேலும், இந்த மாநாட்டில் 80 மேற்பட்ட சர்வதேச நாடுகளில் இருந்து 120 இளம் தலைவர்கள் கலந்து சிறப்பித்து வருகின்றனர்.

## சிங்கப்பூர் எழுத்தாளருக்கு வரவேற்பும் கலைந்துரையாடலும்



இனிய நந்தவனமும் இணைந்து சிங்கப்பூர் எழுத்தாளரும் மக்கள் மனம் இதழின் ஆசிரியருமான பிச்சினிக்காடு இளங்கோ அவர்களுக்கு வரவேற்பும் கலந்துரையாடலும் (21) திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்க அமைச்சர் (பொறுப்பு) பெ. உதயக்குமார் தலைமை நடைபெற்ற நிகழ்வில்

திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் வை. ஜவஹர் ஆறுமுகம் பிச்சினிக்காடு இளங்கோவை அறிமுகம் செய்து வைக்க திருச்சி பாட்சா பிரியாணி சென்டர் உரிமையாளர் முகம்மது அபூபக்கர் சித்திக் நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்

மேலும் நிகழ்வில் திருக்குறள் நாவை சிவம், பேராசிரியர் நெடுஞ்செழியன், ஆங்கரை பைரவி, மணப்பாரை சூர்யா கவிஞர் ஆறிவுச்செல்வன் மற்றும் திருச்சி பத்மஸ்ரீ விருதாளர்கள் சுப்ராயன், கிராமாலயா தாமோதரன் போன்றோர் கலந்துகொண்டனர்

நிகழ்வில். இறுதியில் நடந்த கலந்துரையாடலில் சிங்கப்பூர் பற்றி அனைவரும் கேட்ட கேள்விகளுக்கு நேர்த்தியான பதில்களை தந்து தனது ஆளுமையை வெளிப்படுத்தினார் பிச்சினிக்காடு இளங்கோ.

## ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலய மாணவர்கள்; பிரியாவிடையும் கௌரவிப்பும்

**ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் ஐந்து வரை கல்விகற்று இடைநிலைக் கல்விக்காக வேறு பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவமும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளியைத் தாண்டிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் பாடசாலை அதிபர் எம். இஸட். எம். இர்பான் தலைமையில் வெகுவிமரிசையாக ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசியபாடசாலையில் நடைபெற்றது. ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்திற்கு ஆரம்பக் கல்விக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்து இவ்வாறு இடைநிலைக் கல்விக்காக வேறு பாடசாலைகளுக்கு செல்கின்றனர்.

## அலரி மாளிகை செல்லாது அரச பணிகளில் ஈடுபட முடிவு

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகைக்கு வசிப்பதற்காக செல்லப் போவதில்லை என்ற தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

அவர் தமது தனிப்பட்ட இல்லத்தில் வசிப்பதுடன் அலரி மாளிகைக்கு செல்லாமல் கொழும்பு ப்ளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலகத்திலிருந்தே உத்தியோக பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் அலுவலகத்தின் செலவை நூற்றுக்கு 50 வீதமாக குறைப்பதற்கு தீர்மானித்து அதுதொடர்பான பணிப்புரைகளையும் ஏற்கனவே வழங்கியுள்ள நிலையில் செலவை குறைப்பது தமக்கும் பொருந்தும்

06

### ஹாபீஸ் நஸீரின் உடைமைகளை

## சேதமாக்கியதாக கைதான மாணவனுக்கு பரீட்சை எழுத அனுமதி

ஏறாவூரில் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் காரியாலயம், வீடு உறவினரின் வீடு ஹோட்டல், போன்றவற்றுக்கு தீ வைத்தமை மற்றும் ஆடைத் தொழிற்சாலை உடைத்து சேதப் படுத்திய சம்பவம் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் சனிக்கிழமை (21) 16 வயது சிறுவன் ஒருவர் உட்பட 15 பேர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.கடந்த (10) ஆம்திகதி இரவு பாராளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டின் ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள காரியாலயம், வீடு அவரது உறவினரின் வீடு, ஹோட்டல் என்பன தீக்கிரையாக்கப்பட்டன. மேலும் 3 ஆடைத் தொழிற்சாலைகள் சேதமாக்கப்பட்டன.

இது தொடர்பில் சனிக்கிழமை கைது செய்யப்பட்ட சிறுவனை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, அவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் க.பொ.தர சாதாரண பரீட்சைக்கு

06

## வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் மூலம் வருமானம்

### 2021ஆம் ஆண்டு மட்டும் 3,221 மில். ரூபா கிட்டியது

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் 2021ஆம் ஆண்டுக்குள் 3,221 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் கோவிட்19 தொற்றுநோய் பரவியதில் இருந்து அதன் செலவினங்களைக் குறைக்க வெளிவிவகார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது,

இலங்கை இராஜதந்திர பணிகளுக்கான கொடுப்பனவுகளை கடுமையாகக் குறைத்தல் மற்றும் இடைநிறுத்துதல் உட்பட்ட நடவடிக்கை மூலம், 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் இருந்து 1,314 மில்லியன் ரூபாவை வெளிவிவகார அமைச்சு சேமிக்க முடிந்ததாக அமைச்சு தெரிவித்துள்ளது. மூலதனச் செலவுகளைச் செய்யாதது, வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் 40 அதிகாரிகளை




06

## பொலிஸ்மா அதிபரிடம் ஐந்து மணி நேரம் வாக்குமூலம் பதிவு

பொலிஸ்மா அதிபர் விக்ரமசிங்கவிடம் சி.ஐ.டி 5 மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது. வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் முன்னிலையாகியிருந்தார்.



சுமார் 5 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியதை அடுத்து அவர் வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 9 ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டிய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத்

06

## பர்தா அணிந்து சா/த பரீட்சை எழுத மாணவிகளுக்கு அனுமதி

### முஸ்லிம் கவுன்ஸிலின் முயற்சி வெற்றி

**அஷ்ரப் சமத்**

இன்று ஆரம்பமாகவிருக்கும் க . பொ. த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகளுக்கு பர்தா அணிந்து பரீட்சை எழுத அனுமதி வழங்கப்படும் என்றும் முகத்தை மூடி பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் புதிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். சில பிரதேசங்களில் பர்தாவை அணிந்து பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என சில அதிகாரிகள் தெரிவித்திருப்பது தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஏ. எச் எம் . பௌசி ,கல்வி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். பரீட்சைக்குத் தோற்றும் மாணவிகள் மண்டபத்துக்கு பிரவேசிக்க முன் தலையை மறைத்திருப்பவர்கள் தமது இரு காதுகளையும் திறந்து காட்ட வேண்டும்.

## எரிபொருள் பவுஸர் சாரதி மீது கொடூர தாக்குதல்

### யாழ். சுன்னாகத்தில் இருவர் கைது!

யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருளை விநியோகித்து விட்டுத் திரும்பிய பவுஸர் மீதும் சாரதி மற்றும் உதவியாளர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



இந்த சம்பவம் சனிக்கிழமை (21) மாலை நடைபெற்றுள்ளது. இந்த சம்பவத்தின் சந்தேகத்தில் 26 வயதான சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கைதான சகோதரர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தனரென சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

## எரிவாயு விநியோகம் தொடர்பில் தொலைபேசி செயலி

### இன்று அறிமுகம்

எரிவாயு விநியோகம் மற்றும் எரிவாயு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை பற்றி நுகர்வோரையும் விற்பனை முகவர்களையும் தெளிவூட்டுவதற்கான தொலைபேசி செயலியொன்றை அறிமுகப்படுத்த லிட்ரோ எரிவாயு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த செயலி இன்று திங்கட்கிழமை அறிமுகப்படுத்தப்படுமென்று நிறுவனத்தலைவர் விஜித ஹேரத் கூறினார்.

இதன் மூலம் நுகர்வோரும் விற்பனை

06

### எரிபொருளை பதுக்கி வைத்துள்ளோரை பிடிக்க

## நேற்று முதல் நாடளாவிய ரீதியில் தேடுதல் ஆரம்பம்

பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை சட்டவிரோதமாக, பதுக்கி வைத்து விற்பனை செய்வோரை கண்டறிவதற்கான விசேட சுற்றிவளைப்புக்கள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை பெற்று அதனை பதுக்கி வைப்பதால் செயற்கை தட்டுப்பாடு ஏற்படுகின்றது.இதனால் பொது மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து பெற்றோல்

06

## கே.ஏ. பாயிஸின் ஓராண்டு நிறைவு; புத்தளத்தில் பல்வேறு நிகழ்வுகள்



முன்னாள் பிரதியமைச்சரும், புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவருமான கே.ஏ. பாயிஸ் காலமாகி இன்றுடன் (23.05.2022) ஓராண்டு நிறைவடைவதன் நிமித்தம் பல்வேறு நிகழ்வுகள் புத்தளம் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய புத்தளம் நகரசபைத்தலைவர் எம்.எஸ்.எம். ரபீக் தலைமையில் இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் மறைந்த பாயிஸுக்காக புத்தளம், வெட்டுகுளம் மஸ்ஜிதுல் பக்கா ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் அவரது அடக்கஸ்தலத்தில் விஷேட துஆ பிரார்த்தனை நகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பிரதேச உலமாக்கள், குடும்ப உறுப்பினர்கள் அடங்கலாக பொதுமக்களின் பங்குபற்றுதல்களுடன் ஸுபஹ் தொழுகையின் பின்னர் நடாத்தப்படுகின்றன. மேலும் புத்தளம் நகர சபைக்கு உட்பட 40 முன்பள்ளி பாடசாலைகளில் மறைந்த பாயிஸின் நினைவாக மரக்கன்றுகள் நடும் நிகழ்வு முற்பகல் 10.00 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம் அவரது மறைவையொட்டி மாணவர்கள் மத்தியில் நிகழ்த்தப்பட்ட கவிதைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளை உள்ளடக்கிய நூல் வெளியீட்டு விழா புத்தளம் கே.ஏ.பி கேட்போர் கட்டத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் போது நனசல நிறுவனம் மற்றும் ஆசி மகளிர் அமைப்பு என்பன புத்தளம் நகர சபையுடன் இணைந்து அளித்த சுயதொழில் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு

06

## தாமதமாக வந்தாலும் பரீட்சை எழுத வாய்ப்பு

பரீட்சைகள் சட்டத்துக்கமைய பரீட்சை ஆரம்பமாகி அரை மணித்தியாலம் தாமதமாகி வரும் மாணவர்களுக்கு வினாத்தாள்களை வழங்குவது வழமையாகும். எனினும் இம்முறை நாட்டிலுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டு க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பரீட்சைகள் ஆரம்பமாகி அரை மணித்தியாலத்துக்கும் மேலதிகமாக கால தாமதமாகி வருகை தந்தாலும் அவர்களுக்கு வினாத்தாள்களை வழங்குமாறு பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டீ.தர்மசேன தெரிவித்தார்.

தாமதமாகி வரும் மாணவர்கள் தொடர்பில் பரீட்சை திணைக்களத்துக்கு அறிவித்து , அதன் பின்னர் அவர்களுக்கு மேலதிக நேரத்தை வழங்குவது தொடர்பில் தீர்மானிக்குமாறும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

இம்முறை வழமைக்கு மாறானதொரு சூழலில் பரீட்சைகள் இடம்பெறுகின்றமையால் பரீட்சை கடமைகளில் ஈடுபடுவோரையும் , மாணவர்களையும் குறித்த நேரத்துக்கு முன்னரே

06

## பரீட்சை நிலைய பணியாளர்களுக்கு இ.போ.ச டிப்போக்களில் எரிபொருள்

க.பொ.த. சாதாரண தர பரீட்சை நிலைய ஊழியர்களுக்கு நேற்று முதல் எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பரீட்சை பணியாளர்களின் தனியார் வாகனங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்களில் டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



நேற்று (22) எந்த நேரத்திலும் இவ்வாறான ஊழியர்களுக்கு டீசலை இலங்கை போக்குவரத்து சபை டிப்போவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்கவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் க.பொ.த. சாதாரண தர பரீட்சை பணியாளர்களுக்கு வரிசையில் நிற்காமல் அவர்களுக்கு தேவையான பெற்றோலை

06

### ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கிய

## பிரதான சந்தேகநபர் சி.ஐ.டியினரால் கைது

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரின் தலையில் இரும்புக் கம்பியால் தாக்கிய குற்றச்சாட்டில் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவரின் உறவினரான சதா நாலக என்பவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஹோகந்தர பிரதேசத்தில் மறைந்திருந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

43 வயதான அஷந்த நாலக எனப்படும் சதா நாலக என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.சம்பவத்தின் போது அவர் பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்களுடன் ஸ்கூட்டரில் காலி முகத்திடலுக்கு வந்துள்ளார்.

மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது தீப்பிடித்து எரிந்த இராணுவ பஸ்ஸை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன் நிறுத்தியவர் இவர் என்பதும் இனங்காணப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 5ஆம்

06

## நாட்டில் சிலபகுதிகளில் காற்றுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காங்கேசந்துறையிலிருந்து புத்தளம், காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 6065 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்த கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.5 – 3.0 மீற்றர்

06

### இன்றிலிருந்து அடுத்த 10 நாட்களுக்குள்

## எரிபொருள் வரிசை முற்றுப்புள்ளிக்கு வரும்

### SMS, புதிய APP மூலமாக தகவல்கள்

எரிபொருள் நிலையங்களில் இருந்து எரிபொருளை பெறுவதற்கான நேரங்களை பொதுமக்களுக்கு வழங்க எரிசக்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் தாங்கிய லொறிகள் புறப்பட்டவுடன் மக்களுக்கு கையடக்க தொலைபேசி ஊடாக அறிவிப்பை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அவர் இதனை கூறியுள்ளார். தற்போது எரிபொருளுக்காக பல மணிநேரங்களாக மக்கள் காத்திருப்பதாகவும்,

06

### பரீட்சைக்கு தோற்றவுள்ள

## மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

பரீட்சை ஊழியர்களுக்கு நேற்று (22) முதல் எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், பரீட்சார்த்திகள் பாடங்கள் தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால் 0112 784 208 அல்லது 0112 784 537 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னதாக பரீட்சை மண்டபத்திற்கு வருவதே பொருத்தமானதாக இருக்கும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### நாணய மாற்று


| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 251.46 | 267.85 |
| கனடியன் டொலர் | 279.08 | 291.91 |
| யூரோ | 385.89 | 401.40 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 448.89 | 468.16 |
| சுவிஸ் பிராங்க் | 365.24 | 379.01 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 967.44 | கட்டார் ரியால் | 99.83 |
| குவைத் டினார் | 1,188.53 | சவூதி ரியால் | 97.24 |
| ஓமான் ரியால் | 947.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 21




# பரீட்சார்த்திகளின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்

கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. இம்முறை இப்பரீட்சைக்கு 05 இலட்சத்து 17 ஆயிரத்து 469 பேர் தோற்றுகின்றனர். அவர்களில் 04 இலட்சத்து 17 ஆயிரத்து 129 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகவும், ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 367 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் உள்ளனர்.

இப்பரீட்சையின் நிமித்தம் நாடெங்கிலும் 3844 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று 23 ஆம் திகதி ஆரம்பமாகும் இப்பரீட்சை எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது.

இலங்கையின் இலவசக் கல்விக் கட்டமைப்பில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் பரீட்சைகளில் ஒன்றாக இப்பரீட்சை அமைந்திருக்கின்றது. இந்நாட்டு இளம் பராயத்தினரின் எதிர்காலத்தை வடிவமைக்க வழிவகுக்கும் இப்பரீட்சை அவர்களது உயர்கல்விக்கான முதற் தடைதாண்டுதல் பரீட்சையாக விளங்குகின்றது. மாணவர் ஒருவரின் கல்விப் பயணப் பாதையைத் தீர்மானிக்கும் பரீட்சையாகவும் இப்பரீட்சை காணப்படுகின்றது.

இவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் இப்பரீட்சை இம்முறை இலங்கையின் முக்கியத்துவம் மிக்க காலகட்டத்தில் நடைபெறுகின்றது. அதாவது பொருளாதார, அரசியல் நெருகடிகளுக்கு நாடு முகம் கொடுத்திருக்கும் சூழலில் மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு நிலவி வரும் சூழலில் அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலைகளும் பெரிதும் அதிகரித்துள்ளன. அத்தோடு நாளாந்த மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது.

இவ்வாறான பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இப்பரீட்சைக்குத் தயாராகி தோற்றுகின்ற போதிலும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பரீட்சைக் காலத்திலும் நீடிக்கவே செய்கின்றன. அதாவது இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக எரிபொருள், எரிவாயு கோரி மணித்தியாலயக்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை நீடிக்கின்ற அதேநேரம், வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலைமைகளும் காணப்படுகின்றன. அத்தோடு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நாளாந்தம் இடம்பெறவே செய்கின்றன. இவை மக்களது இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடியனவாகவே உள்ளன.

அதன் காரணத்தினால் இந்நாட்டு இளம் பராயத்தினரின் எதிர்காலத்தை வடிவமைக்கக் கூடிய பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதேநேரம் தற்போதைய காலசூழலில் முன்னெடுக்கப்படும் எரிபொருள், எரிவாயு கோரிய ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் மக்களது இயல்பு வாழ்வுக்கும் குறிப்பாக பரீட்சார்த்திகளும் பரீட்சை மேற்பார்வையாளர்களும் பரீட்சை நிலையங்களுக்கு உரிய நேர காலத்தில் சென்று வர இடையூறாக அமைய வழிவகுக்கக் கூடாது.

ஏற்கனவே இடம்பெறும் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் அரச தனியார் ஊழியர்களில் பெரும் பகுதியினர் உரிய நேரகாலத்தில் கடமைக்குத் திரும்ப முடியாத நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர். அவ்வாறான நிலைமைக்கு பரீட்சார்த்திகளும் பரீட்சை மேற்பார்வையாளர்களும் உள்ளாக இடமளிக்கக் கூடாது.

இந்நிலையில்தான் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, தற்போதைய நாட்களில் கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சை எழுதும் மாணவர்கள் பயணம் செய்கின்ற வாகனங்கள் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு வருகை தருமாயின் அவ்வாகனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்குமாறு கேட்டுள்ளார்.

இதேவேளை தனியார் பஸ் ஊழியர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன, 'சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியம்' எனக் கோரியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன, பரீட்சார்த்திகளையும், பரீட்சை மேற்பார்வையாளர்களையும் பரீட்சை ஆரம்ப நேரத்திற்கு முன்னர் நேர காலத்தோடு பரீட்சை நிலையங்களுக்கு வருகை தருமாறு கேட்டுள்ளார்.

ஆகவே இந்நாட்டு எதிர்காலப் பரம்பரையினரின் எதிர்காலத்திற்கு ஒளியூட்ட வித்தூன்றும் இப்பரீட்சை பரீட்சார்த்திகளுக்கு இடையூறுகள் இன்றி நடத்தப்பட வேண்டும் என்பதில் ஒவ்வொருவரும் அக்கறை கொண்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது. அதனால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவப் பரம்பரையினரின் எதிர்கால நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். அதற்கேற்ப செயற்பட வேண்டிய பொறுப்பு அனைவருக்குமுரியது.

editor.tkn@lakehouse.lk

# தேடுதல் இன்றி மனிதனுக்கு அறிவு வந்து விடுவதில்லை

உலக புத்தக தினம் இன்று கொண்டாடப்படுகிறது. ஐரோப்பாவில் வாழ்ந்த தலைசிறந்த இலக்கியவாதியும், நாடக மேதையாகக் கருதப்படுகின்றவருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்ததும், இறந்ததும் இந்நாளில்தான் என்பதால் இந்த நாளை உலக புத்தக தினம் கொண்டாட தேர்ந்தெடுத்துள்ளனர்.

உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு கலாசாரங்களைப் பற்றி விழிப்புணர்வு பெறுவதற்கு புத்தகம் ஒரு சிறந்த கருவியாக விளங்குகிறது. இதனால், ஷேக்ஸ்பியர் உள்ளிட்ட புகழ் பெற்ற எழுத்தாளர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு




நாளை போற்றும் வகையில் ஏப்ரல் 23 ஆம் திகதியை உலக புத்தக தினமாக யுனெஸ்கோ அறிவித்திருந்தது.

அனைவருக்கும் வாசிக்கும் உரிமை, அனைத்து மக்கள் வாழ்விடங்களிலும் நூலக உரிமை, உலகில் உள்ள அனைத்து அறிவுச் செல்வங்களையும் அவரவர் தாய்மொழியில் பெறுதல், தத்தமது தாய்மொழியில் இலக்கியச் செல்வங்களைப் பாதுகாத்து ஆவணப்படுத்துதல், புத்தகங்களுக்கும், வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல் என்பன உள்ளிட்ட 10 கட்டளைகளை அனைத்து நாடுகளிலும் நிறைவேற்றுவதன் மூலம் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை விரிவாக்க முடியும்.

மேற்கூறிய 10 விடயங்களையும் நிறைவேற்ற உறுதி ஏற்கும் வகையில் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

கடந்த கால தலைமுறைகளின் வீரியமான விழுமியங்களையும், எழுச்சி மற்றும் வீழ்ச்சி மிகுந்த காலங்களையும் எழுத்து வடிவில் கடத்தும் ஆவணங்கள் புத்தகங்கள் ஆகும். படித்துப் பாதுகாக்கப்பட வேண்டிய காலப்பெட்டகமாக புத்தகங்கள் விளங்குகின்றன. அவை காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட தொகுப்பு அல்ல; வரலாற்று நிகழ்வுகளையும் இன்றைய செய்திகளையும் எழுத்தின் வழியே எதிர்கால தலைமுறைக்குக் கொண்டு செல்ல பதிவுசெய்யப்பட்ட பொக்கிஷங்கள் ஆகும்.

## அறிவைப் பெருக்கவும், அடுத்த சந்ததிக்கு தகவல்களை கொண்டு செல்லவும் புத்தகங்களே கைகொடுக்கின்றன

'துப்பாக்கியிலிருந்து வெளியேறும் தோட்டாவை விட வீரியமான ஆயுதம் புத்தகம்' என்று கூறியுள்ளா ர் மார்ட்டின் லூதர்கிங். ஒவ்வொரு புத்தகமும் ஒரு படைப்பாளியின் எண்ணங்களையும் உணர்வுகளையும் கற்பனைகளையும் கனவுகளையும் அச்சு வடிவில் தொகுக்கப்படும் எழுத்துக் களஞ்சியம் ஆகும். விதைக்குள் ஒளிந்திருக்கும் விருட்சம் போல் சமூகம் மற்றும் தனிமனித ஒழுக்கத்துக்கான கருத்துகளைப் புத்தகங்கள் தன்னுள் புதைத்து வைத்துள்ளன.

அறிவுசார் சொத்துகளான இவற்றைப் பாதுகாக்கும் வகையிலும் அவற்றை வளர்க்கும் நோக்குடனும் யுனெஸ்கோ நிறுவனம் ஆண்டுதோறும் ஏப்ரல் 23ம் தினத்தை உலக புத்தக தினமாகக் கொண்டாடுகிறது. உலக இலக்கியத்துக்கான ஒரு குறியீடாக விளங்கும் இந்நாள், 1995 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிலுள்ள கட்டலோனியாவில்தால் முதன்முதலில் கொண்டாடப்பட்டது. இந்நாளில் ஆண்களும் பெண்களும் புத்தகங்களையும் ரோஜா மலர்களையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வர்.

உலகப் புத்தக தினம் என்ற ஒரு தினத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை, சர்வதேச பதிப்பாளர் சங்கம் தான் யுனெஸ்கோவுக்கு முதன்முதலில் பரிந்துரைத்தது. புத்தக உரிமைக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று ரஷ்யப் படைப்பாளிகள் கருதியதால், இன்றைய தினமானது உலகப் புத்தகம் தினம் மட்டுமல்லாது புத்தக உரிமை தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

'புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டின், புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்' என்று பாரதிதாசன் கூறியுள்ளார். நாட்டில் மட்டுமல்ல ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புத்தகசாலை அமைப்பது அவசியம்.

தேடுதல் இன்றி வாழ்க்கையில் எந்த உச்சமும் கிடைத்து விடுவதில்லை. அப்படிப்பட்ட தேடுதலின் ஆரம்பப்புள்ளியே புத்தகம்தான். புத்தக வாசிப்பு என்பது ஓடும் நதியைப் போன்றது. ஒரு புத்தகம் இன்னொரு புத்தகத்துக்கு நம்மை அழைத்துச் செல்லும். அப்படிப்பட்ட புத்தக நதியில் மூழ்கி புத்தம் புதிய சுகானுபவங்களைப் பெற அனைவரும் முன்வர வேண்டும்.

எஸ். ரவிகுமார்...

# கல்முனை பிரதேச மக்களுக்கு ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷன் ஆற்றும் சமூகநலப் பணிகள்

சாய்ந்தமருது டொக்டர் எஸ். நளிமுதீன் எழுதிய "அரசியல் அறம் ஏ.ஆர்.எம்' கவிதை நூல் வெளியீடும் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் ஏற்பாட்டில், அதன் ஸ்தாபகத் தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளீமுடீன் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழித்துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் நூல் ஆய்வுரை வழங்கியதுடன், அறிஞர் சித்திலெப்பை ஆய்வு மன்றத் தலைவர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா மற்றும் இஸ்லாமிய ஆசிரியர் சங்க தலைவரும் எழுத்தாளருமான ஆசிரியர் ஜெஸ்மி எம். மூஸா, கவிதாயினி டொக்டர் புஸ்பலதா லோகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நூலின் முதற்பிரதியை மறைந்த முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களின் பாரியார் சுஹாரா மன்சூர் பெற்றுக் கொண்டார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், கல்முனை வடக்கு உபபிரதேச செயலாளர் டி.ஜே. அதிசயராஜ், சாய்ந்தமருது ஜும்மாப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், கலை, இலக்கிய, ஊடக பிரமுகர்கள், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். எம்.மன்சூர் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட முன்னாள் பிரதிநிதி ஏ.எல். ஏ.அஸீஸ், கல்முனை மாநகர சபை பிரதி முதல்வரும், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களின் புதல்வருமான ரஹ்மத் மன்சூர் ஆகியோர் நவீன தொழினுட்பத்தின் வாயிலாக வாழ்த்துச் செய்தியை தெரிவித்தனர்.



கல்முனை தொகுதியின் மக்கள் பிரதிநிதியாக, மிகவும் நீண்ட காலம் தமிழ்_ முஸ்லிம் மக்களின் நல்லிணக்கத்திற்கும் ஒற்றுமைக்கும் பாலமாக பணியாற்றிவர் மர்சூர் ஆவார். கல்முனை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக, முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராக, வர்த்தக வாணிபத்துறை அமைச்சராக அவர் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கு செய்த சேவைகள் இன்றும் இப்பிரதேச மக்களால் நினைவு கூரப்படுகின்றன. கல்முனை தொகுதியின் அபிவிருத்தியை தனது முழுமூச்சாக கருதி செயலாற்றிய மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் தனது அபிவிருத்தி செயற்பாடுகளின் போது இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ பெரியார்களின் ஆலோசனைப்படியே அவற்றை முன்னெடுத்தார்.

தான் ஆரம்பித்த அபிவிருத்திப் பணிகளை இடையில் கைவிடாது அதனை நிறைவு செய்து மக்களின் பாவனைக்காக கையளிப்பதில் ஆற்றிய பங்களிப்பு என்றும் மறக்க முடியாத ஒன்றாக உள்ளது. தான் மரணித்த பின்னும் தனது பணி மக்களிடையே தொடர வேண்டும் என்பதால் அவரின் மனைவி மற்றும் வாரிசுகளினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு பலவிதமான வாழ்வாதார உதவிகள் , ஏழை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல், வைத்தியசாலைகளில் நிலவும் குருதி குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் இரத்த தான முகாம்களை ஒழுங்கு செய்தல் போன்ற பலவிதமான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. மர்ஹூம் மன்சூர் மரணித்தும் மக்களிடையே வாழ்கின்றார் என்பதை இப்பணிகள் நினைவு கூருகின்றன.



எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# தனது சொந்தப் பணத்தில் சமூகநல பணிகள் புரியும் மட்டக்களப்பு நடராஜா ஞானச்சந்திரன்

தனது சொந்தப் பணத்தில் மற்றவர்களுக்கு உதவி செய்வதை இலக்காகக் கொண்டு வாழ்ந்து வரும், மட்டக்களப்பு முதலியார் வீதியில் வசித்து வரும் நடராஜா ஞானச்சந்திரன் சிறந்த ஒரு சமூக செயற்பாட்டாளராவார். மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையம், மட்டக்களப்பு கிறீன் கார்டன் ஹோட்டல் என்பவற்றுக்கு முதல் உரிமையாளராக அவர் இருந்தவர்.

தனக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாகவும் இவைகளை கண்காணிப்பதற்கு எவருமில்லாததாலும் அவற்றை மற்றவர்களுக்கு விற்று விற்றார். மட்டக்களப்பில் லயன்ஸ் கழகம், மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம் என பல்வேறு சமூக சேவை அமைப்புக்களில் முன்னிலை அங்கத்தவராக இருந்து சமூகப் பணி செய்தவர்.



தனது இலட்சியம் மற்றவர்களுக்கு உதவி செய்வதேயாகும் என அவர் தெரிவிக்கின்றார். இவரது மனைவி ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியராவார். இவரது இரு பிள்ளைகள் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.

இவர் வைத்திருந்த ராஜாஸ் புத்தக நிறுவனத்தினால் கிழக்கு மாகாணத்திலுள்ள மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பயனடைந்துள்ளார்கள். இப்பிரதேசத்தில் இவரைப் பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது.

தனக்குச் சொந்தமான காணியொன்று மட்டக்களப்பு கல்லடியில் உள்ளதாகவும், அந்தக் காணி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். அந்தக் காணி தனக்கு மீண்டும் கிடைக்குமானால் அக்காணியையும் மட்டக்களப்பில் பொது அமைப்புகளுக்கு அன்பளிப்பு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். அவ்வாறு காணி கிடைக்குமானால் பொதுத் தேவைகளுக்காக பகிர்ந்தளிப்பதுடன் முதியோர்களுக்கு உதவும் சங்கத்துக்கு பகிர்ந்தளிக்கவுள்ளதாகவும் இவர் குறிப்பிடுகின்றார்.

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# கொரோனா தணிந்ததும் மற்றொரு அச்சுறுத்தலாக குரங்கு அம்மை!



ஐரோப்பிய நாடுகளில் குரங்கு அம்மை நோய் தொற்று வேகமாக பரவுகின்றது. உலக நாடுகள் முழுவதும் கொரோனா பாதிப்பில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளாக முடங்கிய பொருளாதார நடவடிக்கைகள் தற்போது தான் மீண்டும் தொடங்கி உள்ளன. இந்நிலையில் தான் தற்போது குரங்கு அம்மை எனும் தொற்று ஐரோப்பா நாடுகளில் பரவ தொடங்கி உள்ளது. நாளுக்கு நாள் இதன் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவது இன்னொரு நோய் உலகம் முழுவதையும் அச்சுறுத்துகிறதா என்ற எண்ணத்தை தோற்றுவித்துள்ளது.

இதை உறுதி செய்யும் வகையில் தான் உலக சுகாதார அமைப்பும் எச்சரிக்கை விடுத்துள்ளது. குரங்கம்மை தொற்று மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் அதிகமாக பரவுகிறது. இந்த நோய் ஆபிரிக்காவின் கொங்கோவில் 2019 இல் கண்டறியப்பட்டது. ஆபிரிக்க நாடுகளில் பரவிய இந்த நோய் கனடா, பிரிட்டன், பெல்ஜியம், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

கண், காது, மூக்கு உள்ளிட்ட பகுதிகள் உள்ள மியூகோஸ் திசுக்கள் மூலமாக பரவக்கூடும் என்பதால் குரங்கம்மை பாதிப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தி உள்ளது. கடந்த 10 நாட்களில் மட்டும் 12 நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவியுள்ளது. எதிர்வரும் நாட்களில் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அனைவரும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலும் குரங்கு அம்மை நோய் பரவி உள்ளது.

# புத்தளம் வரலாற்றில் அழியாத தடம் பதித்தவர் கே.ஏ. பாயிஸ்

முன்னாள் பிரதியமைச்சரும், புத்தளம் நகரசபையின் முன்னாள் தலைவருமான மறைந்த கே.ஏ. பாயிஸின் ஒரு வருட நினைவு தினம் இன்று (23.05.2022) ஆகும். புத்தளம் மாவட்டத்தின் புத்தளம் பிரதேசத்தில் தனித்துவம்பெற்றகே.ஏ.பிஆகியமூன்றெழுத்துகளால் அவர் குறிப்பிடப்பட்டார்.

புத்தளம் பிரதேசத்தில் இந்த மூன்றெழுத்துகளையும் அறியாதவர்கள் எவரும் இருக்க மாட்டார்கள். வறிய குடும்பத்தில் பிறந்த கே.ஏ பாயிஸ் பாடசாலையில் படிக்கும் காலம் முதலே ஏழை எளிய மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் அதிக அக்கறை கொண்டவராவார். இதற்கான அடிப்படையாக அவர் கல்வியையே கருதினார்.

புத்தளம் ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவரான இவர், தாம் கல்வி கற்கும் போது எதிர்நோக்கிய கணிதம், விஞ்ஞானம், உள்ளிட்ட பல பாடங்ளுக்கான ஆசிரிய பற்றாக்குறையால் புத்தளமும் புத்தளத்தைச் சூழவுள்ள பிரதேசங்களும் கல்வியில் தொடர்ந்தும் பின்தங்கி வருவதை நேரில் கண்டார். இதனையிட்டு பெரிதும் கவலையடைந்தார்.

அதனால் உயர்தர வகுப்பு மாணவராக இருக்கும் போதே அரசியலில் ஆர்வம் கொண்ட இவர், கல்வியை நிறைவு செய்த பின்னர் புத்தளத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான டொக்டர் ஐ.எம். இல்லியாஸ் ஊடாக அரசியலில் பிரவேசித்தார். மு.காவின் ஸ்தாபகத் தலைவர் மறைந்த எம்.எச்.எம் அஷ்ரஃபின் அரசியலில் ஈர்க்கப்பட்ட இவர், அவரது அரசியல் பாசறையில் வளர்ந்தார். அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற உயர்பதவியையும் அடைந்தார்.

இந்நிலையில் 1997 களில் புத்தளம் நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு புத்தளம் நகரசபைத் தலைவரானார். அதன் பின்னர் புத்தளம் நகர சபையின் தலைவர் பதவியை மூன்று தடவைகள் இவர் வகித்துள்ளார். அத்தோடு 2004_ 2010 வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினரான இவர் கால்நடைகள்வள பிரதிமைச்சராகப் பதவி வகித்தார்.

புத்தளம் நகரினதும் புத்தளம் மாவட்டத்தினதும் முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் அதிக அக்கறை கொண்ட இவர், கல்வி அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தினார். அத்தோடு புத்தளம் நகரை இலங்கையில் அபிவிருத்தி அடைந்த நகர்களில் ஒன்றாகவும் முன்னணி நகராகவும் கட்டியெழுப்பவதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார். குறிப்பாக கல்வி அபிவிருத்திக்கு முக்கிய இடமளித்தார்.

புத்தளம் தொகுதியிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர் மற்றும் வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்காக வரலாற்று முக்கியத்துவம் மிக்க நடவடிக்கையை மேற்கொண்டார். அதனடிப்படையில் வடமேல் மாகாண சபையின் அன்றைய முதலமைச்சர் அத்துல விஜேசிங்கவுடன் 'அதுல_பாயிஸ்' ஒப்பந்தத்தைச் செய்தார். அதன் ஊடாக புத்தளத்திலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர், வளப்பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டன.

அந்த வகையில் புத்தளம் ஸாஹிரா கல்லூரியின் ஆரம்பப் பிரிவாக இருந்த பாடசாலையை தனியொரு பாடசாலையாக வடமேல் மாகாண சபையின் அங்கீகாரத்தோடு ஸைனப் பாடசாலையாக உருவாக்கினார். இதன் பயனாக இப்பாடசாலையில் நிலவிய ஆசிரியர் பற்றாக்குறையும் வளப்பற்றாக்குறையும் பெரிதும் நிவர்த்திக்கப்பட்டன. அதன் விளைவாக ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது.

மேலும், தாம் உள்ளிட்ட மாணவப் பரம்பரை கற்கும் போது எதிர்கொண்ட கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைக்கு எதிர்காலப் பரம்பரையும் முகம் கொடுக்கக் கூடாது எனக் கருதி அவ்வாறான ஆசிரியர்களை உருவாக்கும் நோக்குடன் புத்தளம் ஜனாதிபதி விஞ்ஞான கல்லூரிக்கு வித்தூன்றினார். அதன் பயனாக கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் மாத்திரமல்லாமல் மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும் கூட உருவாக்கும் மையமாக இன்று இக்கல்லூரி விளங்குகிறது.

## இன்று முதலாவது நினைவு தினம் (23.05.2022)

அதேநேரம் புத்தளம் பிரதேச மக்களுக்கு உயர்கல்வி வாய்ப்பை திறந்த பல்கலைக் கழகத்தின் ஊடாகப் புத்தளம் பிரதேசத்திலேயே பெற்றுக் கொடுக்கும் வகையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கிளையொன்று புத்தளம் நகரில் அமைக்கப்படவும் வழிவகை செய்தார்.

அதேநேரம் புத்தளம் பிரதேச இளம் பராயத்தினரின் விளையாட்டு திறன்களை வெளிப்படுத்தவும் ஊக்குவிக்கவும் துணை புரியும் வகையில் சகல வசதிகளையும் கொண்ட புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கு புத்தளம் நகரில் அமைக்கப்பட வழி சமைத்தார். ஒரே சமயத்தில் 16 விளையாட்டுக்களை நடத்தக் கூடிய வசதிகள் இவ்விளையாட்டரங்கில் உள்ளன. நீச்சல் தடாகம், உள்ளக விளையாட்டரங்கு, மெய்வல்லுனர் போட்டி, உதைப்பந்தாட்டம் உள்ளிட்ட பல விளையாட்டுகளுக்கும் இங்கு வசதிகள் உள்ளன. புத்தளம் நகருக்கான கேட்போர் கூடத்தையும் அவர் பெற்றுக் கொடுத்துள்ளார்.

புத்தளம் நகரை அழகுபடுத்துவதிலும் சுத்தமாக வைப்பதிருப்பதிலும் அவர் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார். பல வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்தார். இதன் பயனாக வடமேல் மாகாண சபை நடத்திய சுத்தமான நகர் போட்டியில் புத்தளம் நகரசபை முதலிடமிடத்தைப் பெற்றுக் கொள்ள வழிவகுத்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்திற்கும் அநுராதபுரம் உள்ளிட்ட வடமத்திய மாகாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான புத்தளம் ஊடான பயணப் பாதையில் புத்தளத்தில் அமைக்கப்பட்டிருக்கும் 'கொழும்பு பேஸ்' தான் ஒரேயொரு கரையோர மைதானம் ஆகும்.

இதுவும் கே.ஏ.பி. யின் சிந்தனையில் உருவான அபிவிருத்தித் திட்டமாகும்.

புத்தளத்தை பிராந்திய வர்த்தக மையமாக உருவாக்குவதிலும் அவர் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார். 'அல்பா' என்ற பெயரில் சகல வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு பாரிய 'சொப்பிங் மோலை' அமைப்பதற்கு நடவடிக்கை ஆரம்பித்தார். அதன் பணிகள் தற்போது நிறைவுறும் தறுவாயில் உள்ளன.

புத்தளத்தை சூழவுள்ள எந்தப் பிரதேசத்தைத் சேர்ந்தவரும் தமது தேவைகளையும் வசதிகளையும் புத்தளம் நகரில் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப வசதிகளை ஏற்படுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது.



புத்தளம் நகர மக்கள் நீண்ட காலமாக முகம் கொடுத்துவரும் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும் அவர் நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

காலாவி ஆற்றிலிருந்து புத்தளத்திற்கு குடிநீரைக் கொண்டு வர ஏற்பாடு செய்தார். இத்திட்டத்தின் ஊடாக புத்தளம் நகர மக்கள் மாத்திரமல்லாமல் புத்தள நகருக்கு வெளியே வாழும் மக்களும் நன்மை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

புத்தளம் நகரினதும் புத்தளம் பிரதேசத்தினதும் முன்னேற்றத்திற்காக அயராது உழைக்கக் கூடியவராக இருந்தார் மறைந்த பாயிஸ். மக்கள் சேவையின் நிமித்தம் எந்த வேளையிலும் தொலைபேசி அழைப்புக்கு பதிலளிக்கக் கூடியவராக இருந்தார் அவர்.

அரசியலில் உயர்பீடங்களுடன் நெருக்கமான உறவை இவர் பேணி வந்ததன் பயனாக புத்தளம் துரித அபிவிருத்திப் பாதையில் பயணிக்க ஆரம்பித்தது. அத்தோடு பிரதேசத்தில் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதிலும் அவர் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்.

அத்தோடு புத்தளம் மாவட்டத்தில் அரசியலுக்கு பலரை அவர் அறிமுகம் செய்தார். அவ்வாறு அறிமுகப்பட்டவர்களில் ஒருவரான எனக்கு அரசியலைக் கற்றுத் தந்தவரும் அவரேயாவார்.

இவ்வாறு அளப்பரிய சேவையாற்றி வந்த கே.ஏ.பி எவரும் எதிர்பார்த்திராத சமயத்தில் கடந்த வருடம் இதே தினத்தில் (23.05.2021) திடீரென காலமானார். அவரது இழப்பு புத்தளத்திற்கு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். அவர் புத்தளத்திற்காக ஆற்றியுள்ள சேவைகள் புத்தளம் வரலாற்றில் அழியாத்தடம் பதித்துள்ளன.

**எம்.எஸ்.எம். ரபீக் ...**
புத்தளம் நகரசபைத் தலைவர்

# சட்டத்தரணியாக அரை நூற்றாண்டு பணியாற்றியுள்ள எம்.எம்.சுஹைர்

சட்டத்தரணி எம்.எம்.சுஹைர் 1972 மே 23 அன்று அப்போதைய பிரதம நீதியரசர் எச்.என்.ஜி பெர்னாண்டோ மற்றும் நீதியரசர் சி.பி.வல்கம்பய ஆகியோர் முன்பாக உச்சநீதிமன்றத்தின் சட்டத்தரணியாகப் பதிவு செய்யப்பட்டு 50 வருடங்களை பூர்த்தி செய்துள்ளார். 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பு பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வாவினால் உருவாக்கப்பட்ட புதிய குடியரசு அரசியலமைப்பின் கீழ் சட்டத்தரணிகளாக சத்தியப்பிரமாணம் செய்த முதல் சட்டத்தரணிகளாக உபாலி குணரத்னவும் எம். எம். சுஹைறும் உள்ளார்கள்.

இலங்கை சட்டக் கல்லூரியின் (1968_ 1970) முன்னாள் மாணவர் சுஹைர் ஆவார். அந்த நேரத்தில் அதன் புகழ்பெற்ற அதிபராக மறைந்த R. K. W குணசேகர இருந்தார். சட்டக் கல்லூரியில் அவர் ஆசியா அறக்கட்டளை உதவித்தொகை விருதை வென்றார். இது 1968 முதல் 1970 வரையிலான அவரது சட்டக் கல்விக்கான முழுச் செலவையும் உள்ளடக்கியது. அவர் 1970 இல் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் சங்கத்தின் ஆசிரியராகவும், சட்ட மாணவர்களின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1971 இல் முஸ்லிம் மஜ்லிஸ் இல் அங்கம் வகித்தார்.

அவர் வழக்கறிஞர் எஸ். சர்வானந்தாவின் கீழ் பயிற்சி பெற்றார். பின்னர் அவர் இலங்கையின் தலைமை நீதிபதி ஆனார் மற்றும் வழக்கறிஞர் மால்கம் பெரேரா பின்னர் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியானார்.



ஜுஹைர் 2001 இல் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார் மற்றும் உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்குகள், அடிப்படை உரிமைகள் வழக்குகள் மற்றும் ரிட் விண்ணப்பங்களைக் கையாள்வதில் தீவிர நடைமுறையில் உள்ளார்.

சுஹைர் 1973 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டத்தரணியாகச் சேர்ந்தார். சுஹைர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் குற்றவியல் மேன்முறையீட்டை வாதிடுவதைக் கண்ட நீதியரசர் பத்மநாதன் இராமநாதனால் அவர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சேர ஊக்கப்படுத்தப்பட்டார்.

சுஹைர் பத்து வருடங்கள் அரச சேவையில் இருந்தார். முதல் ஐந்து வருடங்கள் சிவில் தரப்பிலும், இரண்டாவது ஐந்து வருடங்கள் குற்றவியல் தரப்பிலும் பணியாற்றினார். அவர் இலஞ்ச வழக்குகள், கொலை வழக்குகள் மற்றும் பயங்கரவாத தடுப்பு வழக்குகளில் உயர்நீதிமன்றத்தில் தோன்றினார். மற்றும் குற்றவியல் மேல்முறையீடுகளிலும் அரசு தரப்பில் ஆஜரானார். அவர் 1981 இல் மூத்த அரசு வழக்கறிஞராக பதவி உயர்வு பெற்றார். ஆனால் ஜூலை 1983 கலவரத்திற்குப் பிறகு 1983 இல் அதிகாரபூர்வமற்ற பட்டிக்குத் திரும்பினார்.

அதிகாரபூர்வமற்ற பட்டியில் அவர் முக்கியமாக குற்றவியல் வழக்குகள் மற்றும் மேல் நீதிமன்றங்களில் உள்ள ரிட் விண்ணப்பங்களைக் கையாள்வதில் விரிவான நடைமுறையைக் கொண்டிருந்தார். 1994 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அப்போதைய தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் ஏற்பாட்டினால் தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவர் பல பாராளுமன்றக் குழுக்களில் பணியாற்றினார்.

23 ஜூலை 2001 அன்று அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா தலைமையில் எஸ். எஸ்.ஸஹாபந்து பி.சி மற்றும் எம். சுஹைர் பி.சி ஆகியோரைக் கொண்ட இன வன்முறை (1981_ 1984) தொடர்பான உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்தார். ஜூலை 1983 இனக்கலவரத்தை ஆணைக்குழு விசாரித்தது.

2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில், சுஹைர் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் (SLRC) தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். கொழும்பு சாஹிரா கல்லூரியின் ஆளுநர்கள் சபையின் தலைவராகவும் அவர் பணியாற்றினார். அவர் 2006 இல் ஈரானுக்கான இலங்கையின் தூதுவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

சுஹைர் வெலிகம அரஃபா மத்திய கல்லூரி, செயின்ட் ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு சாஹிரா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். தற்போது சுஹைர் தனது சட்டப் பயிற்சியைத் தொடர்கிறார்.

# துறைநீலாவணையில் சமயசமூக பணியாற்றிய பெருந்தகை அமரர் சீனித்தம்பி பூபாலப்பிள்ளை

இவ்வுலகில் மனிதனாகப் பிறந்த அனைவரும் சமுதாய உணர்வுகளுக்கு மதிப்பளித்து பொறுப்புணர்வுடன் சமூகப்பணியாற்ற வேண்டும்.இவ்வாறு பணியாற்றியவர்களுள் ஒருவர்தான் மட்டக்களப்பு, துறைநீலாவணை கண்ணகை அம்மன் ஆலய அறங்காவல் சபையின் முன்னாள் வண்ணக்கர் (தலைவர்) அமரர் சீனித்தம்பி பூபாலப்பிள்ளை.

மட்டக்களப்பு, துறைநீலாவணையில் 18.07.1929 இல் பிறந்த அன்னார், தொண்ணூற்று மூன்று வருட காலம் சிறப்புற வாழ்ந்து 14.04.2022 அன்று காலமானார். இவ்வூர் மக்கள் மத்தியில் சிறந்த சமயப் பணியாற்றிய ஒருவராக அவர் என்றும் மதிக்கப்படுவார் என்பது திண்ணம்.

துறைநீலாவணை மெதடிஸ்த மிஸன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்ற அவர், தமது பெற்றோரின் விருப்பத்தின் பேரில் விவசாயம் செய்வதில் அதீத ஈடுபாடு காட்டிய கடின உழைப்பாளி ஆவார். தனது இளமைக் காலம் தொடக்கம் இறுதி மூச்சு வரை தீவிர தமிழினப் பற்றாளராக இருந்தார். கொண்ட கொள்கை மாறாத ஒருவர் அவர். தனது வாலிப பருவத்தில் இருந்தே தமிழர்களின் பாரம்பரிய உடை அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் எம்.பியுமான அமரர் சீ.மூ. இராசமாணிக்கத்துடன் இணைந்து அவர் பணியாற்றியிருந்தார். துறைநீலாவணை மக்களின் ஏகோபித்த வேண்டுகோளின் பேரில் துறைநீலாவணை கண்ணகை அம்மன் ஆலய அறங்காவல் சபை வண்ணக்கராக (தலைவர்) தெரிவு செய்யப்பட்ட அவர், சுமார் இருபது வருட காலம் வண்ணக்கராகவிருந்து தொட்ட பணிகளை துலங்க வைத்தார்.

**அன்னார் சிறந்த கலாரசிகர். அம்மனின் வருடாந்த திருச்சடங்கு இடம்பெறும் காலங்களில் கலா மன்ற பிரதிநிதிகளை அணுகி சமய, சமூக சீர்திருத்த நாடகங்களை பிறர் மனங்களை காயப்படுத்தாமல் அரங்கேற்றுமாறு கூறி ஒத்துழைப்பு வழங்கியவர்.**



1978ஆம் ஆண்டு சூறாவளியினால் பெரிதும்சேதமடைந்த துறைநீலாவணை கண்ணகை அம்மன் ஆலயத்தை தனது தலைமைத்துவத்தின் கீழ் துரிதமாக புனரமைப்பு செய்து கண்ணகை அம்மனின் வருடாந்த திருச்சடங்கு தடையின்றி இடம்பெற உழைத்து வெற்றியும் கண்டார்.

அன்னார் சிறந்த கலாரசிகர். அம்மனின் வருடாந்த திருச்சடங்கு இடம்பெறும் காலங்களில் கலா மன்ற பிரதிநிதிகளை அணுகி சமய, சமூக சீர்திருத்த நாடகங்களை பிறர் மனங்களை காயப்படுத்தாமல் அரங்கேற்றுமாறு கூறி ஒத்துழைப்பு வழங்கியவர். தமிழ் இலக்கிய உலகில் தனது காத்திரமான கவிதைகளால் பேசப்படும் கவிஞர் ஜீவா ஜீவரத்தினம் துறைநீலாவணைக்கு பெருமை சேர்த்தவர் ஆவார். அவரது தலைமையில் 'பெண்ணால் உலகெய்தும் பேறு' எனும் தலைப்பில் 1988 ஆம் ஆண்டு கவின்மணி அழகரெத்தினம் அரங்கில் கவிஞர்களான செ.குணரெத்தினம், பாண்டியூரன், துறையூர்.கே. செல்லத்துரை, மு.சடாட்சரன், துறையூர் எஸ். கனகசபை, அக்கரைப்பாக்கியன், பொன். சிவானந்தன், அக்கரை மாணிக்கம் ஆகியோரை வரவழைத்து வண்ணக்கவியரங்கு படைக்க வழிவகை செய்ததோடு இக் கவிஞர்களைப் பாராட்டி பணமுடிப்பு வழங்கிய பெருமகன் அமரர் சீனித்தம்பி பூபாலப்பிள்ளை. அன்னார் சமூக ஒற்றுமைக்காகவும், ஊரின் ஐக்கியத்திற்காகவும், சமயப் பணிக்காகவும் அளப்பரிய சேவையாற்றிய ஒருவர்.



**செல்லையா. பேரின்பராசா...**
(துறைநீலாவணை நிருபர்)

## உரிமையாளரின்...

என்ற ஆதங்கத்தில் குறித்த வீட்டிற்கு தீ வைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்துள்ளனர். தீ வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எரிபொருள் நிலைய உரிமையாளரின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் வீட்டினுள் இருந்துள்ளனர்.

எனினும், பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸார் இணைந்து அவர்களை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

குறித்த பிள்ளைகளில் ஒருவர், இன்று ஆரம்பமாகவுள்ள கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ளதுடன், அவரின் பாடசாலை உபகரணங்கள் தீயில் எரிந்துள்ளதாகவும், வீட்டிற்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 2024 ஆம் ஆண்டுவரை...

திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்க பிரதமர் ரணில் விக்ரமசிங்க அங்கு விஜயம் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இலங்கை நெருக்கடிக்கான தீர்வை முன்னிறுத்திய பன்னாட்டு ஒத்துழைப்பு மையத்தை நிறுவுதல், கொழும்பில் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாக அமெரிக்கர், இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடனும் கலந்துரையாடலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## ஹரீன், மனுஷவின் செயல்...

தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசின் நல்ல கருமங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்துகொண்டு ஆதரவு வழங்கும் எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் நாம் ஏற்கனவே முடிவெடுத்திருந்தோம். இந்நிலையில், ஹரீன் பெர்னாண்டோவும், மனுஷ நாணயக்காரவும் எமது கட்சியின் முடிவை மீறிச் செயற்பட்டுள்ளதால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நிலையில், ஹரீனுக்கும் மனுஷவுக்கும் அமைச்சுப் பதவிகளை அரசு வழங்கியுள்ளதால் அரசுக்கான எமது ஆதரவு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி கூடி பரிசீலிக்கும் என்றார்.

## 33 இலட்சம் குடும்பங்களுக்கு...

முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளர்கள் உட்பட 33 இலட்சம் பேர் பயனடையும் வகையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. முதல் கட்டமாக அடுத்த வாரம் மே மாத உதவித்தொகையை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 300 மில்லியன் அமெரிக்க டொலர்களில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி பயனாளிகளுக்கு மூன்று மாத காலத்திற்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. பிரதமர் அலுவலகம் மற்றும் நிதி அமைச்சின் பணிப்புரையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தை வழிநடத்துவதில் சமுர்த்தி அமைச்சும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் பாரிய பங்காற்றுகின்றன. (பா)

## குரங்கு அம்மை நோய் தொற்று...

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை எதிர்ப்பு சக்தி, ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்ர தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை எதிர்ப்பு சக்தி அறிவியல் மற்றும் உயிரணு ஆய்வு நிறுவகத்தில் அது தொடர்பான பரிசோதனையை மேற்கொள்ள முடியும் என அவர் ட்விட்டர் பதிவொன்றின் மூலம் பதிவிட்டுள்ளார்.

மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் குரங்கு அம்மை தொற்று அடையாளம் காணப்பட்டது. அந்த நோய் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயும் பரவத்தொடங்கியுள்ளது. இதனால் உலக சுகாதார அமைப்பு லண்டன் நகரில் அவசர கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. இதுவரையில், ஐரோப்பாவில் 80க்கும் அதிக குரங்கு அம்மை நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

## தமிழக நன்கொடை ...

பொருட்கள் நேற்றைய தினம் நாட்டை வந்தடைந்துள்ளது. 9,000 மெ. தொன் அரிசி, 50 மெ. தொன் பால்மா மற்றும் 25 மெ.தொன்னுக்கும் அதிகமான மருந்து பொருட்கள் அடங்கிய கப்பல் நேற்று முற்பகல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நாட்டை வந்தடைந்துள்ள இந்த உதவிப் பொருட்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வெ ளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் கையளித்தனர். இந்நிகழ்வில் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கடந்த18ஆம் திகதி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த உதவிப்பொருட்களை சென்னை துறைமுகத்திலிருந்து கொடியசைத்து அனுப்பிவைத்தார். தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் 40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால் மா மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய பாரிய உதவித் திட்டத்தின் கீழ் இது முதற்தொகுதியாக அனுப்பி வைக்கப்படுகின்றது. அத்துடன் இந்த பங்களிப்பானது 5.5 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிக பெறுமதியானதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இத்தொகுதி உதவிப் பொருட்கள் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணங்கள் உள்ளடங்கிய நாடு முழுவதுமுள்ள பயனாளர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும். அத்துடன் சமூகத்தில் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பயனாளிகளுக்கு இந்த உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடர்மாடி மக்களுக்கு ...

உணவு சமைக்க வழியுமின்றியும் தவிக்கிறார்கள்.

குறிப்பாக, வடகொழும்பின் பின் தங்கிய நகர தோட்ட குடியிருப்புகளில் வாழ்ந்த மக்கள், எமது ஆட்சிக் காலத்தில் சுமார் 13,000 தொடர்மாடி இல்லங்களில் குடியமர்த்தப்பட்டார்கள். இந்த குடும்பங்களை அடையாளம் கண்டு, இவர்களுக்கும், கொழுப்பு நகரின் பின் தங்கிய குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கும், பங்கீட்டு அட்டைகள் வழங்கி, அவர்களுக்கு சமைத்த உணவு வழங்குங்கள்.

இதற்காக, கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள பாரிய சமையலறை மற்றும் கொழும்பு மாநகரசபைக்கு சொந்தமான பயன்படுத்தபடாத சமையலறைகள் ஆகியவை பயன்படுத்தலாம்.

இராணுவ சமையல் பணியாளர்களை பணியில் அமர்த்தி இயல்பு நிலைமை திரும்பும்வரை இந்த திட்டத்தை முன்னெடுங்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் கொழும்பு எம்பி மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## அடுத்த வாரம் முதல்...

தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை கருத்திற்கொண்டு நேற்று மின் துண்டிப்பை அமுல்படுத்தாதிருப்பதற்கு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின் உற்பத்திக்குத் தேவையான டீசலை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜெனரேட்டர்களுக்கு எரிபொருள் வழங்குவதை மின்உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை வழங்குவது பலருக்கு வாய்ப்பாக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தற்பொழுது 3மணித்தியாலங்களும் 40 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது. இதனை அதிகரிக்க நேரிடும் என பரவலாக கூறப்பட்ட நிலையில் மின்வெட்டை நிறுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. (பா)

## சட்டம் ஒழுங்கை...

வெளியிடப்பட்டுள்ளது.

பொது அமைதியைப் பேணுவதற்கு ஆயுதப்படைகளைத் தயார் நிலையில் வைத்திருக்கும் வகையில் ஜனாதிபதி குறித்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

## SLBC பணிப்பாளர்

அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மஹிந்தவின் DGயை ஊழியர்களை துரத்தியதாக சமூக ஊடகங்கள் மற்றும் பல்வேறு இணையத்தளங்களில் பொய்யான செய்திகள் பரப்பப்பட்டதாகவும் தான் ராஜினாமா செய்யவில்லை எனவும் இந்த சம்பவம் குறித்து நியாயமான விசாரணை நடத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். தற்போதைய நெருக்கடியான சூழலுக்கு மத்தியில் காட்டுச் சட்டத்தை அமுல்படுத்தும் சிலரின் முயற்சிகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். 9 ஆம் திகதி தாக்குதலுடன் தொடர்புள்ள சில தொழிற்சங்கத்தினரே நிறுவனத்திற்குள் குழப்பம் ஏற்படுத்தி நிறுவனத்தை வீழ்த்த முயற்சிக்கின்றனர். என்னை துரத்தியதாக பொய்வதந்தியை பரப்பிவருகின்றனர் என்று தெரிவித்துள்ள அவர், இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்பட்டு நிறுவனங்களில் சரியான வழிமுறைகளை திறம்பட பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

## அவுஸ்ரேலியாவின்...

காலத்திற்கு பின்னர் தொழில் கட்சியில் இருந்து அவுஸ்ரேலியாவின் பிரதமராக ஒருவர் தெரிவாகியுள்ளார். இந்த தேர்தலில் லிபரல் கட்சி தலைவர் ஸ்கொட் மொரிசன் மற்றும் தொழில் கட்சி தலைவர் அந்தனி அல்பனிஸ் ஆகியோருக்கு இடையில் போட்டி நிலவியிருந்தது. அவுஸ்ரேலியாவில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மொத்த 151 உறுப்பினர் இடங்களில் 76 இனை கைப்பற்ற வேண்டியது அவசியமாகும். தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அந்தனி அல்பானிஸ் தலைமையிலான தொழில் கட்சி 72 இடங்களை கைப்பற்றியதுடன், 55 இடங்களை ஸ்கொட் மொரிசன் கட்சி பெற்றுக்கொண்டது.

## தமிழ் கட்சிகளுக்கு ...

விடுக்கப்பட்டுள்ளது.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையே அதிகாரப் போட்டிகள் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் உட்கட்சிப் பூசல்களும் மேலெழுந்து நிற்கின்றன.

20வது அரசியலமைப்பு சீர்த்திருத்தம் இல்லாது ஒழிக்கப்பட்டு 19வது அரசியலமைப்பின் உள்ளடக்கங்களை வலுப்படுத்துவதற்காக 21வது அரசியலமைப்பு சீர்த்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இனநெருக்கடி விவகாரத்தில், சமஷ்டி என்று அழைக்கப்படும் இணைப்பாட்சி முறையை அரசியல் தீர்வாக முன்வைக்கும் தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு அரசியலமைப்பு உருவாக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா கோரியுள்ளார்.

## புதிய பிரதமருடன்...

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை பேணுவதற்கும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கும் புதிய பிரதமருடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சித்தலைமையிலான கூட்டணி அதிக ஆசனங்களை வென்றுள்ளது. 151 ஆசனங்கள் கொண்ட நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் தொழிலாளர் கட்சிக் கூட்டணி 73 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

இதனால் தொழிலாளர் கட்சியின் தலைவர் அந்தனி அல்பானீஸ் அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளார். சுமார் ஒரு தசாப்த காலத்தில் அவுஸ்திரேலிய தொழிலாளர் கட்சி ஆட்சியமைக்கவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

அவுஸ்திரேலியர்கள் "மாற்றத்திற்காக வாக்களித்துள்ளனர்" என்று அல்பானீஸ் மகிழ்ச்சியுடன் ஆதரவாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

## இலங்கைப் பெண்கள்...

னர். தொழிற்கட்சியின் சார்பில் விக்டோரியா மாநிலம் மெல்பேர்னின் Higgins தொகுதியில் போட்டியிட்ட இலங்கை வம்சாவளியை சேர்ந்த மருத்துவரான மிச்சேல் ஆனந்தராஜா வெற்றி பெற்றுள்ளார். அவர் 56.1 வீத வாக்குகளை பெற்றுள்ளார். அதாவது 30 ஆயிரத்து 46 வாக்குகளை பெற்று வெற்றிப் பெற்றுள்ளார்.

மிச்சேல் ஆனந்தராஜா தனது சிறுவயதில் பெற்றோருடன் அவுஸ்திரேலியாவில் குடியேறியவர்.

அதேவேளை அவுஸ்திரேலியா சமஷ்டி பொதுத் தேர்தலில் விக்டோரிய மாநிலத்தில் வசிக்கும் மேலும் மூன்று இலங்கையர்கள் போட்டியிட்டனர்.

இவர்களில் தொழிற்கட்சியின் சார்பில் ஹொல்ட் தொகுதியில் போட்டியிட்ட கேசன்ட்ரா பெர்னாண்டோ வெற்றி பெற்றுள்ளார்.

இவர் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ராஞ்ச் பெரேராவை எதிர்த்து போட்டியிட்டார். 57.5 வீதம் என்ற அடிப்படையில், கேசன்ட்ரா பெர்னாண்டோ 40 ஆயிரத்து 187 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

லிபரல் கட்சியின் வேட்பாளரான ராஞ்ச் பெரேரா 29 ஆயிரத்து 723 வாக்குகளை மாத்திரமே பெற்றார்.

லிபரல் கட்சியின் வேட்பாளரான ராஞ்ச் பெரேரா 29 ஆயிரத்து 723 வாக்குகளை மாத்திரமே பெற்றார்.

கேசன்ட்ராவும் தனது 11 வயதில் பெற்றோருடன் அவுஸ்திரேலியாவில் குடியேறியவர்.

அதேவேளை விக்டோரியா மாநிலத்தில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இலங்கையரான விரோஷ் பெரேரா 17 ஆயிரத்து 385 வாக்குகளை பெற்று தோல்வியடைந்தார்.

இவரை எதிர்த்து போட்டியிட்ட தொழிற்கட்சி வேட்பாளர் கிளஸ் அன்ட்ரூ 33 ஆயிரத்து 604 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

## O/L பரீட்சைக்கு...

நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரிடமும் கேட்டுக் கொள்வதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள், பரீட்சை நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களும் எந்த வித தடையுமின்றி பரீட்சை நிலையங்களுக்கு சமூகம ளிப்பதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். பரீட்சைக் கடமைகளில் ஈடுபடவுள்ள அதிகாரிகளுக்கு அத்தியாவசிய சேவை கடிதத்தை வழங்குமாறு பிரதேச செயலகங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கடிதம், தொழில் அடையாளஅட்டை , பரீட்சை கடமை கடிதம் மற்றும் மாணவர்களாயின் அவர்களது பரீட்சை அனுமதி அட்டை என்பவற்றைக் கொண்டு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

தற்போதுள்ள பெரும் சிக்கல் எரிபொருள் பிரச்சினையே. அந்த வகையில் பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கொள்வனவில் முன்னுரிமையளிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பில் ஒன்பது மாகாணங்களினதும் ஆளுநர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் 1190 எரிபொருள் நிலையங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நிலையங்களிலும் எமது உத்தியோகத்தர்கள் பத்து அல்லது பதினைந்து பேரளவிலேயே எரிபொருளுக்காக வருகை தருவர்.அவர்களுக்கு முன்னுரிமையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (ஸ)

## GCE (O/L) பரீட்சைகள் இன்று...

மத்திய நிலையங்களிலும் நடைபெறவுள்ளது.

இந்தமுறை பரீட்சைக்கு 407,129 பாடசாலை பரீட்சார்த்திகளும், 110,367 தனியார் பரீட்சார்த்திகளும் அடங்களாக 517,496 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

கொவிட்19 தொற்றுறுதியான பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு விசேட பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு, இந்த பரீட்சைக்கு 590 விசேட தேவையுடையவர்களும் தோற்றவுள்ளனர்.

இந்த நிலையில், பரீட்சைக்கு தேவையான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.இந்த நிலையில் பரீட்சார்த்திகள் தங்களது பரீட்சைக்குரிய ஆவணங்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனியார் பரீட்சார்த்திகள் கல்வி அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.இதேவேளை, கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சை பணிக்குழாமினர் பரீட்சை மண்டபங்களுக்கு செல்வதற்காக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் டிப்போக்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் மற்றும் பணிக்குழாமினரின் வாகனங்களுக்கான டீசலை விநியோகிக்கும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

அத்துடன் வரிசைகளில் காத்திருக்காது நாடளாவிய ரீதியாகவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலை பெற்றுக் கொள்ள வாய்ப்பு வழங்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பொதுமக்களை கோரியுள்ளார். பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் உரிய சேவைகள் இடம்பெறும் என தொடர்ந்து திணைக்களம் அறிவித்துள்ளது. மாணவர்களுக்கு பரீட்சை நிலையங்களுக்கு செல்ல இடைஞ்சல் ஏற்படுத்த வேண்டாம் எனவும் அவர்களை வீதியில் கண்டால் வாகனத்தில் ஏற்றிச் சென்று பரீட்சை நிலையங்களில் விடுமாறும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை இடம்பெறும் தினங்களில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பரீட்சைகள் ஆணையாளர் மாணவர்கள் நேர காலத்தோடு பரீட்சை நிலையங்களுக்கு செல்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

பொது போக்குவரத்து சேவைகளை உரிய வகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தடையின்றி அந்த சேவையை பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபை உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பானுடனான...

வழங்கப்படும் என்று பிரதமர் அலுவலகம் வலியுறுத்தியது.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட பிரதமரின் செயலாளர் சமன் ஏகநாயக்க இதனை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"இந்த விடயம் தொடர்பில் எந்தவொரு தரப்பினருடனும் கலந்துரையாடல் நடத்தப்படவில்லை எனவும், இலங்கையில் நிலைமை சீராகும் வரை அதற்கு முன்னுரிமை வழங்கப்பட வாய்ப்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தீர்க்க எங்களுக்கு இன்னும் அழுத்தமான பிரச்சினைகள் உள்ளன. உணவு நெருக்கடி உருவாகி வருகிறது, எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு ஆகியவற்றை நாங்கள் வழங்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உள்கட்டமைப்பு திட்டங்கள் தற்போதைய முன்னுரிமை பட்டியலில் அதிகமாக இல்லையெனவும்" அவர் கூறியுள்ளார்.

## அலரி மாளிகை செல்லாது... (03ஆம் பக்கத் தொடர்)

என்பதை வெளிப்படுத்துவதற்காக அவர் அலரி மாளிகைக்குச் செல்லாமல் ப்ளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலகத்திலிருந்து கடமைகளை செய்வதற்கு தீர்மானித்துள்ளார். அதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அலரிமாளிகையில் குடியிருப்பதற்காக செல்லவில்லை என்றும் தேவையான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக மட்டுமே அலரி மாளிகையை உபயோகப் படுத்தியதாகவும் பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## சேதமாக்கியதாக கைதான... (03ஆம் பக்கத் தொடர்)

தோற்றவுள்ள சிறுவனை அழைத்துச் சென்று பரீட்சை எழுத அனுமதிக்குமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

## எரிவாயு விநியோகம் ... (03ஆம் பக்கத் தொடர்)

முகவர்களும் குறித்த பிரதேசத்தில் பகிர்ந்தளிக்கப்படும் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை பற்றிய சரியான தகவல்களை அறிந்து கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

டொலர் விவகாரம் காரணமாக கடந்த சில மாதங்களாக நாடுமுழுவதும் கோஸ் தட்டுப்பாடு காணப்படுவதோடு பிரதானமாக மேல் மாகாணத்தில் கடுமையான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் பல நாட்களாக கேஸ் பெற வரிசையில் நிற்கும் நிலை உருவாகியுள்ளது.இந்த நிலையில் தினமும் 80 ஆயிரம் சிலிண்டர்களை விநியோகிக்கவும் அதில் மேல்மாகாணத்தில் 60 வீதமானவற்றை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு கேஸ் விநியோகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.(பா)

## நேற்று முதல் நாடளாவிய... (03ஆம் பக்கத் தொடர்)

மற்றும் டீசல் இன்றி வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு பதுக்கி வைக்கப்படும் எரிபொருள் தொகை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த செயற்பாட்டை தடுக்கும் வகையில் விசேட சுற்றிவளைப்புகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்படுவதாக பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

## பரீட்சை நிலைய... (03ஆம் பக்கத் தொடர்)

பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும், பரீட்சார்த்திகள் பாடங்கள் தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால் 0112 784 208 அல்லது 0112 784 537 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.நாட்டில்தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னதாக பரீட்சை மண்டபத்திற்கு வருவதே பொருத்தமானதாக இருக்கும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நாட்டில் சிலபகுதிகளில்... (03ஆம் பக்கத் தொடர்)

உயரம் வரை மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

## பிரதான சந்தேகநபர்... (03ஆம் பக்கத் தொடர்)

திகதி பாராளுமன்றத்திற்கு முன்பாக இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தின் போது இந்த நபர் போராட்டக்காரர்களுக்கு எதிராகவும் கருத்து தெரிவித்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

## தாமதமாக வந்தாலும்... (03ஆம் பக்கத் தொடர்)

பரீட்சை மண்டபங்களுக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ஏதேனுமொரு காரணத்துக்காக மாணவர்கள் கால தாமதமாக பரீட்சை மண்டபத்துக்கு வருகை தந்தால் அவர்களை திருப்பி அனுப்பாது பரீட்சையை எழுதுவதற்கு அனுமதிக்குமாறு சகல அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மாணவிகள் வழமையை போன்ற தமது சீருடையை அணிந்து செல்ல முடியும். மாறாக முகத்தையும் முழுமையாக மறைக்கும் வகையிலான சீருடையை அணிந்து சென்றால் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று அவர் குறிப்பிட்டார்.

## பர்தா அணிந்து... (03ஆம் பக்கத் தொடர்)

என்பதும் ,முகத்தை திறந்தே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்றும் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் பர்தாவை அகற்றி விட்டே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கிலிருந்து சில பெற்றோர் முஸ்லிம் கவுன்சிலின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர். இது தொடர்பில் முஸ்லிம் கவுன்சில் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்ததாக முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்தார்.

## பொலிஸ்மா அதிபரிடம்... (03ஆம் பக்கத் தொடர்)

திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்காக அவர்கள் இவ்வாறு முன்னிலையாகியிருந்தார்.இது தவிர அலரி மாளிகையில் 9 ஆம் திகதி கூடிய ஆளும் தரப்பு எம்.பிக்கள் உட்பட பலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதோடு இரு எம்.பிக்கள் உட்பட பலர் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## கே.ஏ. பாயிஸி... (03ஆம் பக்கத் தொடர்)

சான்றிதழ் வழங்கும் வைபவமும் வறுமை கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு குடிநீர் இணைப்பை இலவசமாகப் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மறைந்த பாயிஸ் தொடர்பான விஷேட சொற்பொழிகளும் இவ்வைபவத்தில் இடம்பெறவிருக்கின்றன.

## எரிபொருள் வரிசை... (03ஆம் பக்கத் தொடர்)

இதனை தவிர்ப்பதற்காக குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் உள்ள எரிபொருள் இருப்புக்கள் குறித்த தகவல்களை வழங்கக்கூடிய மொபைல் போன் செயலி உருவாக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இதன்படி, அடுத்த 10 நாட்களில் குறித்த செயலி அறிமுகப்படுத்தப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதன் மூலம் எரிபொருள் விநியோகம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என பெற்றோலிய கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

## வெளிநாடுகளிலுள்ள.. (03ஆம் பக்கத் தொடர்)

மாற்றமின்றி இலங்கைக்கு இடமாற்றம் செய்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பணியகங்களைத் தற்காலிகமாக மூடுவதற்கான செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் போன்ற செலவினங்களைக் குறைக்க மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், சி. $10.2 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் 2021 ஆம் ஆண்டில் 3,221 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதுடன், வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவு ரூ. 675 மில்லியன் என அமைச்சு தெரிவித்துள்ளது.

# சர்வதேச செய்திகள்

## அரசுகள் உணவு மானியம் வழங்க சர்வதேச நாணய நிதியம் அழைப்பு

சமூகத்தில் உள்ள ஏழைகளுக்கு உணவு மற்றும் வலுசக்தி செலவுக்காக அரசுகள் மானியம் வழங்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் உலக நாடுகளைக் கேட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் உலகெங்கும் இருக்கும் மக்கள் பாதிப்படைந்திருப்பதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலக்குவைக்கப்பட்ட முறையில் மக்களுக்கு நேரடியாக மானியங்களை வழங்குவதன் மூலம் உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத் தலைவர் கிறிஸ்டாலினா ஜோர்கிவா தெரிவித்தார்.

பல நாடுகளும் சில உதவிகளை வழங்குகின்றபோதும் அது போதுமானதாக இல்லை என்ற விமர்சனம் எழுந்துள்ளது.

வாழ்க்கைச் செலவு நெருக்கடி வரும்போது, 'இரு தரப்பினருக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். ஒருவர் மிக ஏழை மக்கள், அவர்கள் அதிகரித்திருக்கும் உணவு மற்றும் வலுசக்தி விலைகளுடன் தற்போது போராடும் சமூகத்தின் பிரிவினர்களாவர்' என்று ஜோர்கிவா சுட்டிக்காட்டினார்.

இரண்டாவது தரப்பினரான உக்ரைன் போரினால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் வர்த்தகங்களுக்கு உதவ வேண்டும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச பொருளாதாரத்தை நிலைப்படுத்துவது மற்றும் சுபீட்சத்தை மேம்படுத்துவதற்கு அரசுகளுடன் பணியாற்றுவதற்கு சர்வதேச நாணய நிதியம் பங்காற்றி வருகிறது.



எவ்வாறாயினும் இந்த ஆண்டில் உணவு விலை சாதனை அளவுக்கு அதிகரித்திருப்பது மற்றும் எண்ணெய் மற்றும் எரிவாயு விலையும் வேகமாக உயர்ந்திருப்பதன் காரணமாக அந்த நிறுவனம் பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று மற்றும் உக்ரைன் போர் ஆகிய இரு பாதிப்புகள் இதற்கு காரணமாக உள்ளது. குறிப்பாக ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகள் பயிர்கள் மற்றும் உர ஏற்றுமதிகளின் பிரதான நாடுகளாக உள்ளன.

உலகப் பொருளாதாரத்தில் இந்தப் பொருட்களின் முக்கியத்துவத்தால், பல நாடுகளில் பல தசாப்தங்களில் இல்லாத அளவு வருடாந்த பண வீக்கம் உச்சம் பெற்றுள்ளது. இது பிரிட்டனில் 9 வீதமாகவும், அமெரிக்காவில் 8.3 வீதமாகவும் பதிவானதோடு ஐரோப்பிய வலயங்களில் 7.4 வீதத்தைத் தொட்டது.

விலைகள் அதிகரிப்பதை குறைப்பதற்கு மத்திய வங்கிகள் வட்டி வீதத்தை அதிகரித்து வருகின்றன. இதனால் ஏற்படக்கூடிய பொருளாதார மந்தநிலை பற்றி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அதிக கடன் செலவுகளைக் கொண்ட அரசுகள் பெருந்தொற்று காலத்தில் பெற்ற பாரிய கடன்களை மீளச்செலுத்துவதில் ஏற்பட்டிருக்கும் தாக்கம் பற்றி ஜோர்கிவா கவலை வெளியிட்டுள்ளார்.

எவ்வளவு பணத்தை செலவிடுவது மற்றும் அதனை எதற்காக செலவிடுவது என்பது பற்றி அரசுகள் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ஜெர்மனியில் இந்த வாரத்தில் இடம்பெற்ற ஜி7 நாடுகளின் நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் வாழ்க்கைத் தரங்கள் வீழ்ச்சியடைவதன் பிரச்சினைகள் முக்கிய அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

ஏழு செல்வந்த நாடுகளின் இந்தக் கூட்டத்தில், 'உலகளாவிய ரீதியிலும், தமது சொந்தப் பொருளாதாரங்கள் மற்றும் மக்கள் தொகையிலும் போரின் தாக்கத்தை குறைக்க, தேவையான இடங்களில் நன்கு இலக்கு வைத்து ஆதரவை வழங்குவதன் மூலம் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவதற்கு' தீர்மானிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக, வாழ்க்கைச் செலவைக் குறைக்க, அரசாங்கங்கள் பல்வேறு தலையீடுகளைச் செய்து வருகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எண்ணெய் விலையை குறைக்கும் முயற்சியாக கையிருப்பில் இருந்த எண்ணெய்யை விடுவித்ததோடு, ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் நாடுகள் எரிவாயு விலையை குறைத்தமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று இந்த பிரச்சினை அவுஸ்ரேலிய தேர்தலில் பெரும் தாக்கத்தை செலுத்தியது. சரியான அரச உதவிகள் இல்லாத பட்சத்தில் இலங்கையில் இடம்பெற்றுள்ள ஆர்ப்பாட்டங்கள் ஏனைய நாடுகளிலும் இடம்பெறக் கூடும் என்று ஜோர்கிவா கவலை வெளியிட்டார்.

## பிரதமர் மோடிக்கு பௌத்த மதம் மீதுள்ள காதலால் லும்பினியில் இந்திய பௌத்த மையம் அமைப்பு

### நேபாள அதிகாரி



லும்பினியில் இந்திய சர்வதேச புத்த கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மையத்தின் அடிக்கல் நடுவதை பாராட்டிய லும்பினி மேம்பாட்டு அறக்கட்டளையின் அதிகாரி ஒருவர், பிரதமர் மோடியின் தனிப்பட்ட ஆர்வம் மற்றும் பௌத்த மதத்தின் மீதான அன்பினால் இது சாத்தியமானது என்றும் தெரிவித்துள்ளார். மியான்மார் மற்றும் கனடா ஏற்கனவே புனித நகரத்தில் மடங்களைக் கட்டியுள்ளன. லும்பினி டெவலப்மென்ட் டிரஸ்டின் (எல்டிடி) தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் தலைவர் டாக்டர் ஹரி தோஸ் ஏஎன்ஐயிடம் கூறுகையில், புத்தர் பிறந்த இடத்தில் இந்திய கலாச்சார மையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளது.

"இந்திய அரசாங்கம் தற்போது எடுத்துள்ள ஒரு நல்ல முயற்சி இது. தாய்லாந்து, மியான்மார், இலங்கை, கம்போடியா, கனடா மற்றும் பிற நாடுகள் உட்பட பல நாடுகள் ஏற்கனவே லும்பினியில் மடங்களைக் கட்டியுள்ளன" என்று டாக்டர் தோஸ் கூறினார். "நாங்கள் நீண்ட காலமாக இந்திய அரசு மற்றும் நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகத்திடம் (பௌத்த கலாச்சார மையம்) இதற்கான கோரிக்கை விடுத்து வருகிறோம். ஆனால் அவர்கள் இதை கவனிக்கவில்லை. பிரதமரின் தனிப்பட்ட ஆர்வம் மற்றும் பௌத்த மதத்தின் மீதான அன்பின் காரணமாக இந்திய அரசும் தயாராக உள்ளது.


சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2021 ஒக்டோபர் 31ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2022 மே 27ம் திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை மற்றும் தம்புள்ளை | 2021 ஒக்டோபர் 31ம் திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், குருணாகலை நகரக்கிளை, இல. 36, நீர்க்கொழும்பு வீதி, குருணாகலை |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08


## ரஷ்யா - சீனா உறவு குறித்து மேற்குலக நாடுகள் கவலை



உக்ரைன் போருக்கு எதிராகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ள சூழலில் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டுவரும் வளர்ச்சி குறித்து மேற்குலக நாடுகள் பெரிதும் கவலை கொண்டுள்ளதாக ஜப்பானிய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உக்ரைன் மீதான போருக்கு எதிராக மேற்குலக நாடுகள் விதித்துள்ள கடுமையான பொருளாதார தடைகளால் ரஷ்யா பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சூழலில் அந்நாட்டுடன் சீனா உறவை வளர்ப்பது நிலைமை சிக்கலாக்கலாக்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

உக்ரைன் போருக்கு எதிராக ரஷ்யா மீது கடுமையான அழுத்தத்தைப் பிரயோகிப்பது குறித்து சர்வதேச சமூகம் கலந்துரையாடி வருவதோடு இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகளும் இது தொடர்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுமுள்ளன. இந்நிலையில், சீனாவும் ரஷ்யாவும் தங்களுக்கிடையிலான உறவில் சாத்தியமான மறுசீரமைப்பை மேற்கொள்வது கவலைகளை ஏற்படுத்துவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

## வழக்கத்திற்கு மாற்றமாக ஸ்பெயினில் கடும் வெயில்



ஸ்பெயினில் வழக்கத்திற்கு மாறாக வெப்பநிலை அதிகரித்துள்ளது. சில பகுதிகளில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைத் தொட்டுள்ளது.


பொதுவாக மே மாதம் வெப்பநிலை இவ்வளவு அதிகமாக இருக்காது என ஸ்பெயினின் தேசிய வானிலை மையம் ட்விட்டரில் தெரிவித்தது. 10 வட்டாரங்களில் அதிக வெப்பநிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அதிகாரபூர்வமாக உறுதிசெய்யப்பட்டால், இதுவே ஸ்பெயினில் மே மாதத்தில் பதிவாகிய முதல் வெப்ப அலையாகலாம் எனக் கூறப்பட்டது.

கடந்த 20 ஆண்டுகளில், இதுவே மிக வெப்பமான மே மாதம் என தேசிய வானிலை மையத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார். காலநிலை மாற்றத்தால் வெப்ப அலை அடிக்கடி நிழ்வதோடு மற்றும் மிகத் தீவிரமடைந்துள்ளது.

வடக்கு ஆபிரிக்காவில் இருந்து வரும் சூடான காற்றே ஸ்பெயினின் சூடான காலநிலைக்குக் காரணமாகும். ஆண்டின் இந்தக் காலப்பகுதியில் சராசரி வெப்பநிலை 15 செல்சியசுக்கு அதிகம் பதிவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## குரங்கம்மையை கட்டுப்படுத்த சுகாதார அமைப்பு வழிகாட்டல்



உலக சுகாதார அமைப்பு குரங்கம்மை பரவுவதைத் தடுப்பது எப்படி என்ற வழிகாட்டியைத் தயாரித்து வருகிறது.

வரும் கோடைக் காலத்தில் குரங்கம்மை மேலும் பரவலாம் என்ற அச்சம் நிலவுகிறது. தற்போது பரவும் குரங்கம்மை, கொவிட்–19 போன்றது அல்ல என்று உலக சுகாதார அமைப்பின் மூத்த ஆலோசகர் கூறினார்.

கொவிட்–19 போல் அது அவ்வளவு எளிதில் பரவக்கூடியது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகெங்கும் 12 நாடுகளில் சுமார் 80 பேருக்கு குரங்கம்மை நோய்த் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு இன்னும் தொற்று நோய்க்கு ஆளானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று எச்சரித்துள்ளது.

இஸ்ரேல், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் அண்மையில் பாதிக்கப்பட்டுள்ளன. நோர்வேயில் இருந்து வெளிநாடு திரும்பிய பயணி ஒருவருக்கு குரங்கம்மை இருந்துள்ளது.

## இஸ்ரேலிய சுற்றிவளைப்பில் பலஸ்தீனர் சுட்டுக் கொலை

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் இஸ்ரேலிய துருப்புகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது பதின்ம வயது பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இதில் 17 வயதான அஜ்மல் அல் பயித் என்பவரே கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 18 வயது இளைஞர் ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய படையினர் ஜெனின் நகருக்கு வெளியில் இருக்கும் அகதி முகாமுக்குள் நுழைந்ததை அடுத்த மோதல் வெடித்ததாகவும் அல் பயிதின் உடலின் மேற் பகுதியில் பல துப்பாக்கி குண்டுகள் பாய்ந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.


### விசேட அட்டோர்ணி தத்துவ அதிகாரத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல்

மொறட்டுவை, லக்ஷபதிய, கனகரத்ன பிளேஸ், இல. 01 என்ற இடத்தில் குடியிருந்த தற்போது ஆஸ்திரேலியா, ஹெம்டன் பார்க் விஜசி, 180 ஏகேட்ரீட் ட்ரைவ் எனும் இடத்தில் குடியிருக்கும் முதுதந்திரி பஸ்தியன்லாகே சாந்தினி லலிதா பர்ணாந்து ஆகிய நான் 2007.04.06ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் பாரிஸ்டர் மற்றும் சொலிசிட்டர் ஆகிய திருமதி. சந்த்ரா வீரகோன் என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட விசேட அட்டோர்ணி தத்துவ பத்திரம் மூலம் கொழும்பு-10, மருதானை, டீன்ஸ் வீதி, இல. 440, என்ற இடத்தில் குடியிருக்கும் விஜயசுந்தர முதியன்செலாகே லக்ஷ்மன் என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அட்டோர்ணி தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கிறேன்.

மேலும், குறித்த **விஜயசுந்தர முதியன்செலாகே லக்ஷ்மன்** என்பவர் மேற்படி அட்டோர்ணி தத்துவ பத்திரம் மூலம் இதன் பின் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புகூற மாட்டேன் என அறியத்தருகின்றேன்.

**முதுதந்திரி பஸ்தியன்லாகே சாந்தினி லலிதா பர்ணாந்து.**



சீட்டிலுக்கப்பட்ட திகதி 20.05.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4761
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,577,010.00
அச்சிடப்பட்ட திகதி : 13.05.2022
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 6 6 0 8 5 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,417,919.00

திகதி 21.05.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4762
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,903,620.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 1 6 0 9 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,929,323.00

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 14.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1246
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,579,840.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 3 1 4 7 5 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,311,799.60

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /13
சீட்டிழுப்பு இலக்கம் : 791
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,425,040.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 33 41 45 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,729,363.60

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /14
சீட்டிழுப்பு இலக்கம் : 792
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,203,420.00
வெற்றி இலக்கினம் Q வெற்றி இலக்கங்கள் 15 17 29 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,886,444.40

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0070
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,823,760.40
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 13.05.2022
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 13 24 32 40
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0071
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,386,000.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 14.05.2022
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 06 14 47 48
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.05.13 சீட்டிழுப்பு இலக்கம் 3003
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,595,920.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 15 55 61 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,217,416.56

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.05.14 சீட்டிழுப்பு இலக்கம் 3004
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,977,700.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 06 31 32 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,529,766.56

கோடி 23+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1109
டிக்கட் அச்சிடப்பட்ட திகதி : 2022.05.13
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,169,780.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 252,079,490.00
ஆங்கில எழுத்து X சுப்பர் நம்பர் 01 வெற்றி எண்கள் 16 17 71 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1110
டிக்கட் அச்சிடப்பட்ட திகதி : 2022.05.14
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,606,460.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 252,157,738.00
ஆங்கில எழுத்து K சுப்பர் நம்பர் 24 வெற்றி எண்கள் 35 41 52 73
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 மே 23
திங்கட்கிழமை

## வவுனியா ஓமந்தையில் எரிபொருள் கோரி ஏ9 வீதியினை வழிமறித்து போராட்டம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா ஓமந்தை பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக ஏ9 வீதியினை வழிமறித்து நேற்று முன்தினம் (21.05) இரவு 8.45 மணியளவில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் மூன்று எரிபொருள் மீள்நிரப்பு நிலையங்களில் பெற்றோல் வழங்கப்பட்டிருந்த போதிலும், 4ம் கட்டை மற்றும் இறம்பைக்குளம் ஆகிய எரிபொருள் மீள்நிரப்பு நிலையங்களில் பெற்றோல் நிறைவடைந்து விட்டதுடன், ஓமந்தை ஐஓசி நிறுவனத்தின் எரிபொருள் நிலையத்தில் மாத்திரம் எரிபொருள் வழங்கப்பட்டு வந்தது. அங்கு இரவு 8.30 மணியளவில் பின்னர் எரிபொருள் வழங்க முடியாது என தெரிவித்து எரிபொருள் விநியோகத்தினை இடைநிறுத்தியுள்ளனர்.

இதனால் ஆத்திரமுற்ற பொது மக்கள் ஏ9 வீதியினை வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக ஏ9 வீதியின் போக்குவரத்து சுமார் ஒரு மணிநேரம் முற்றாக பாதிப்படைந்தது. பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரருடன் கலந்துரையாடி நிலமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

## விலைபோகும் தமிழ் எம்பிக்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்

### யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ்

**கோப்பாய் குறூப் நிருபர்**

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டுமா? தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை விலை பேசி விடலாம் என்ற எண்ணம் மாற வேண்டும் என யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தெரிவித்தார்.



கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற புதிய ஆட்சி மாற்றத்திற்கான மக்களின் பங்களிப்பு என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் இருக்கின்ற ஒற்றையாட்சி அரசியலமைப்பு மாற்றம் அடைய வேண்டும் என்பது என்னுடைய எதிர்பார்ப்பாகும்.

ஆனால் இலங்கையில் இருக்கின்ற ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை மாற்றி விட்ட பின்னரும் தரகர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை விலை பேசி எதை வேண்டுமானாலும் செய்து விடலாம் என்ற எண்ணம் தற்போது எழுந்துள்ளது.

மூன்றில் இரண்டு வேண்டுமா தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை விலை பேசுவதற்கு தரகர்கள் இருக்கிறார்கள். அதனை அவர்கள் விலைபேசி பெற்றுக் கொடுப்பார்கள்.இவ்வாறான நிலையில் எமது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் விலைபேசி விடலாம் என்ற எண்ணம் மன வேதனையை தருகிறது.

எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் எப்படி வளர்ந்தார்கள் எப்படி அரசியலுக்கு வந்தார்கள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது தொடர்பாக மக்கள் அவதானம் செலுத்த வேண்டும்.

எமது கலை கலாச்சாரம் விழுமியங்கள் தொடர்பில் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் முறையாகப் போதிக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில் நான் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த போது சமூக நீதி என்ற பாடத்திட்டத்தை நடாத்தி குறித்த பாடத்திலே கட்டாயம் சித்தி அடைய வேண்டும் என்ற நடைமுறையை உருவாக்கினோம்.

ஆகவே விலை பேசி வாங்கி விடலாம் என்ற எண்ணத்தில் செய்யப்படுபவர்களுக்கு விலை போக தயாராக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை இனி வரும் காலங்களில் மக்கள் தெரிவு செய்யக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்மராட்சி மட்பாண்ட தொழிலாளருக்கு வாழ்வாதார உதவி



**சாவகச்சேரி விசேட நிருபர்**

தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபடும் கைப்பணியாளர்களுக்கு, அவர்கள் தமது தொழிலை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உதவியாக (19/05/2022) வியாழக்கிழமை வாழ்வாதார உதவிப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. பாரம்பரிய மற்றும் கிராமியக் கைத்தொழில் கிராம அபிவிருத்தி இணைந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை ஆகியன தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் குறித்த மட்பாண்ட கைத்தொழிலுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்திருந்தன. தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் சர்வேஸ்வரன் தலைமையில் மட்டுவில் பகுதியில் இடம் பெற்ற இந் நிகழ்வில் அதிதிகளாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு வாழ்வாதார உதவிக்கான இயந்திரங்களைக் கையளித்திருந்தனர். மட்டுவில் மத்தி, மட்டுவில் தெற்கு மற்றும் கொடிகாமம் இராமாவில் பகுதியைச் சேர்ந்த கைவினைஞர்களுக்கு கைப்பணிச் சங்கங்கள் ஊடக பிரதேச செயலகத்தின் கண்காணிப்பின் கீழ் குறித்த உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டெங்கு காய்ச்சலினால் பாடசாலை மாணவன் மரணம்

**யாழ்.விசேட நிருபர்**

டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார் .

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வு பகுதியைச் சேர்ந்த கருணாகரன் ஆரோன் (வயது11) என்ற யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவனே உயிரிழந்தார்.

கடந்த 18 ஆம் திகதி காய்ச்சல் காரணமாக அவர் பனடோல் உட்கொண்டுவிட்டு இருந்துள்ளார்.

அந்நிலையில் கடந்த 19 ஆம் திகதி மீண்டும் வயிற்றோட்டம் வாந்தி ஏற்பட்டு மாணவன் பாதிக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் .

அங்கு சிகிச்சை பயனின்றி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.



கொடைவள்ளல் S.K.T நாதனின் நிதிப்பங்களிப்பில் "சிறைக் கைதிகளும் மனிதர்களே" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் உள்ள தமது உறவுகளை பார்வையிட வரும் மக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் காத்திருப்போர் மண்டபம் ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண சிறைச்சாலை முன்றலில் திறந்து வைக்கப்பட்டது.

## யாழில் தொடரும் வாள்வெட்டுக் குழுவின் கொடூரம்: 5 பேர் அதிரடி கைது!

யாழ். அளவெட்டி பகுதியை சேர்ந்த இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த 5 பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரியவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாள்வெட்டு சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை (17.05 .2022) மாலை 6.30 மணியளவில் சண்டிலிப்பாய் தொட்டிலடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.



குறித்த சம்பவத்தில் யாழ். அளவெட்டி பகுதியைச் சேர்ந்த இளைஞன் தலையில் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை வாள்வெட்டை மேற்கொண்டவர்கள் திருட்டு மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்தியே தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கீழான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில்கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த இருவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த இருவர் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் என ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதிக்கு நன்றி கூறிய யாழ்ப்பாணத்தார்!

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக மக்கள் எரிபொருளுக்காக காத்திருக்கும் நிலையில் நபர் ஒருவர் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு நன்றி கூறிய முகநூல் பதிவு சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.

அவரது பதிவில்,

கனம் ராஜபக்ஷ குடும்பத்திற்கு யாழ்ப்பாணிஸ் ஆகிய நாங்கள் உங்கள் மீது கொண்ட அன்பின் காரணமாக உங்களிற்கெதிராக #go_gotta போன்ற எந்தவொரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.

இதற்கு நன்றிக் கடனாக நீங்கள் கடந்த இரண்டு மாதத்திற்கு மேலாக மற்ற மாவட்டங்களைப் போல் அல்லாமல் ஓரளவேனும் எரிபொருட்களை கிடைக்க செய்தீர்கள்.

இதற்காக ராஜபக்ஷ குடும்பத்திற்கு தமிழ் மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என குறித்த நபர் பதிவிட்டுள்ளார்.

## புதிய அரசியல் கட்சியாக அகில இலங்கை இளைஞர் முன்னணி

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு இளைஞர்களை உள்ளடக்கி இராசையா விக்டர்ராஜ் தலைமையில் அகில இலங்கை இளைஞர் முன்னணி என்ற கட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

இக் கட்சியினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதில் தூய்மையான அரசியல் நேர்மையான செயல்பாடுகள் தற்சார்பு பொருளாதாரம் இவற்றை குறிக்கோளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி இல்லாத உரிமையும், உரிமை இல்லாத அபிவிருத்தியும் பயனளிக்காது என்றும் மத்தியில் உள்ள அரசாங்கம் எதுவானாலும் ஒரு இணக்கத்தை ஏற்படுத்தி எமது மக்களுக்கான தேவையை நிறைவேற்றுவதற்கும் கட்சி உரிய ஆக்க பூர்வமான பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் பெற்றோலுக்கு நீண்ட வரிசை



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெறுவதற்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, அச்சுவேலி உட்பட யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டனர்.

பரீட்சை கடமையில் ஈடுபடுவோர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்டவர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்பட்டன.

இதனால் பல இடங்களிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருட்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கினாலும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காலை நேரத்தில் மூடப்பட்டே காணப்பட்டது.

## கடற்கரை கரையோர பகுதி தூய்மையாக்கும் நடவடிக்கை

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து நடுக்குடா வரையிலான கடற்கரை கரையோர பகுதி தூய்மையாக்கும் நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை (22) காலை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அவ் அமைப்பின் தலைவர் வி.ஸ். சிவகரன் தலைமையில் குறித்த தூய்மையாக்கல் நடவடிக்கை இடம் பெற்றது.

இதன் போது மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் கலந்து கொண்டு தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து நடுக்குடா கடற்கரை வரையிலான கரையோரப்பகுதியை சிரமதானம் மூலம் சுத்தப்படுத்தினார்கள்.



இதன் போது கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் உள்ளிட்ட கழிவுப்பொருட்கள் அப்பகுதியில் இருந்து அகற்றப்பட்டன.

அகற்றப்பட்ட கழிவுப்பொருட்கள் மன்னார் பிரதேச சபையின் உதவியுடன் அப்பகுதியில் இருந்து கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு13, ஜெயந்திநகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியன் சுவாமி ஆலய வைகாசி விசாக தங்கரத தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. சிவஸ்ரீ ரகுநாத் குருக்கள் வசந்த மண்டபத்தில் வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான்க்கு கிரியைகளை நடத்திவைத்து அலங்கார தீபாராதனை காண்பிப்பதையும் ஸ்ரீ சிவசுப்பிரமணியன் சுவாமி தங்கரதத்தில் வீதி வலம் வருவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம்.

## மானுடவியல்

(தொடர்)

### காரி நாயனார்



72

அவர்கள் தந்த பெருநிதிக் குவைகளைக் கொண்டு சிவனுக்குப் பல கோயில்கள் கட்டினார். எல்லாருக்கும் மன மகிழும் இன்ப மொழிப்பயனை இயம்பினார். சிவனடியார்களுக்குப் பெருஞ் செல்வங்களை மிகுதியாக வழங்கினார். இறைவரது திருக்கயிலை மலையினை என்றும் மறவாதிருந்தார். தமது புகழ் விளங்கி இடையறாத அன்பினாலே சிவனருள் பெற்று உடம்புடன் வடகயிலை மலையினைச் சேர்ந்தார்.



### காரைக்கால் அம்மையார்

**குலம்:** வணிகர்
காலம்: கி.பி. 300 -500
பூசை நாள்: பங்குனி சுவாதி
அவதாரத் தலம்: காரைக்கால்
முக்தித் தலம்: திருவாலங்காடு

வரலாறு சுருக்கம்:
எவ்வாறு கண்ணப்ப நாயனார் மற்றும் கழறிற்றறிவார் நாயனார் சிவபக்தியே ஒரு பதிவில் விளக்கம் தர இயலாதோ அதே போல் காரைக்கால் அம்மையாரின் சிவபக்தியே ஒரு பதிவில் விளக்கம் தர இயலாது. இரு தனித் தனிப் பதிவாக அறியலாம் முதல் பகுதியில் காரைக்கால் அம்மையார் மாங்கனி பெற்றதை காணலாம்.

இளமைக் காலம்:
காரைக்கால் அம்மையார் மூன்று பெண் நாயன்மார்களில் ஒருவரும், மூத்தவருமாவார்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

# இறைவனுடன் இரண்டறக் கலந்த சற்குருநாதர் ராம்ஜி சுவாமிகள்





அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று வாச்சிக்குடா ஸ்ரீ இராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தின் ஸ்தாபகரும் காயத்திரி சித்தர் டாக்டர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் மானசீக சீடருமான சற்குருநாதர் ராம்ஜி சுவாமிகள் மலேசியாவில் இறைவனுடன் இரண்டறக்கலந்து சமாதியடைந்தார்.

சுவாமிகள் சமாதியடைந்ததை முன்னிட்டு அவரது ஆத்மா சாந்தி வேண்டிய பிரார்த்தனை வழிபாடுகள் அக்கரைப்பற்று வாச்சிக்குடா ஸ்ரீ இராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தின் குருதேவர் பீடத்தில் நடைபெற்றது. ஆலய பரிபாலகர் நல்லதம்பி கந்தசாமியின் தலைமையில் இடம்பெற்ற ஆத்மா சாந்தி வேண்டிய பிரார்த்தனை வழிபாடுகளில் சுவாமியின் அடியவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது காயத்திரி மந்திரம் ஸ்ரீ இராம ஜெயம் போன்ற மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு சுவாமி ஜியின் ஆத்மா சாந்தி வேண்டிய பிரார்த்தனைகள் நடைபெற்றன.

இதேநேரம் சுவாமி ஜியின் இறுதிக் கிரியை நிகழ்வுகள் மலேசியாவில் இருந்து நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டதுடன் இதனை பார்வையிட்ட பக்தர்கள் கண்ணீர் மல்க சுவாமிக்கு விடைகொடுத்தனர்.

சுவாமியின் அஸ்தி இலங்கைக்குக் கொண்டுவரப்படுவதுடன் ஆஞ்சநேயர் ஆலயத்தின் சமாதி அமைக்கப்பட்டு விசேட வழிபாடுகள் விரைவில் இடம்பெறும் என ஆலய பரிபாலகர் நல்லதம்பி கந்தசாமி பக்தர்கள் முன்னிலையில் கூறினார்.

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**

## சைவ மஞ்சரி



சைவம் தழைக்க வித்திட்ட சமய குரவர்களில் ஒருவரான திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரது குருபூஜை திருக்கோயில் வினாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் பணிப்பாளர் கண். இராஜரெத்தினம் தலைமையில் நடைபெற்ற போது....

படங்கள் காரைதீவு குறூப் நிருபர்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19076) அம்பிகையின் அம்சமாக இமயமலையில் அமைந்திருக்கும் ஏரியின் பெயர் என்ன?**
மானசரோவர்

**19077)திருநாவுக்கரசர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?**
81 (எண்பத்தி ஒன்று)

**19078) பதிகம் என்பதன் பொருள் என்ன?**
பத்து அல்லது 11 பாடல்கள் சேர்ந்த தொகுப்பு

**19079) சைவ சித்தாந்தத்தை விளக்கும் முழுமையான சாத்திர நூல் எது?** சிவஞானபோதம்

**19080) உலகைப் படைக்கும் போது ஈசன் ஒலிக்கும் உடுக்கையின் பெயர் என்ன?**
டமருகம் அல்லது துடி

**19081) அனுபூதி என்பதன் பொருள் என்ன?** இறைவனுடன் இரண்டறக் கலத்தல்

**19082) உலகத்துக்கே அரசியாக இருந்து ஆட்சி புரியும் அம்பிகை யார்?** மதுரை மீனாட்சி

**19083) மதுரை மீனாட்சியம்மையின் பெற்றோர் யார்?**
மலையத்துவஜ பாண்டியன், காஞ்சனமாலை

**19084) மீனாட்சிக்கு பெற்றோர் இட்ட பெயர் என்ன?**
தடாதகைப் பிராட்டி

**19085) பழங்காலத்தில் மதுரை எவ்வாறு அழைக்கப்பட்டது.** நான்மாடக்கூடல், ஆலவாய்

**19086) மீனாட்சியம்மன் கோயில் தலவிருட்சம் எது?** கடம்ப மரம்

**19087) மீனாட்சி எதுவாக இருப்பதாக ஐதீகம்?** கடம்பவனக் குயில்

**19088) மீனாட்சி கல்யாணத்தை நடத்திவைக்கும் பெருமாள் யார்?**
திருப்பரங்குன்றம் பவளக்கனி வாய்ப்பெருமாள்

## நாதப் பிரம்ம யோகம் - 20



புராதனமான தந்திர சாஸ்திரத்தில் மந்திரம் மூலம் ஏகாக்கிரப்படுத்தப் பட்ட சப்தம் அதீதமான சக்தியை உருவாக்குவதால் இதன் மூலம் உருவாகும் அதிர்வுகளை உடல் தாங்கமுடியாமல் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்படுகிறது. இந்த ஆபத்துக்கள் இல்லாமல் நாதத்தைப் பயன்படுத்துவதற்கு வேத மந்திரங்களில் சாஸ்திரீய சங்கீதங்களின் ராகங்களை இணைத்து பாடுவது பரிந்துரைக்கப்படுகிறது. இந்த முறை பசுவின் பாலை கறந்து குடிப்பது போன்றோ, காயத்ரி ஜெபத்தைப் போன்றோ உள்ள உயர்ந்த நாத அனுபவத்தினைப் பெறுவதற்கு இருக்கும் ஓர் எளிய முறை.

நாதம் என்பது எமது ஆன்மாவில் உள்ளது. நாம் அதை எமது வாழ்க்கையுடன் இணைத்தால், உறுதியாக அனுமதிக்கப்பட்டால் நாம் எப்போதும் ஆன்மீகத்தன்மையை இழக்கமாட்டோம்.

நாம் இசைச் சுரங்கள் என்பது நாத சாதனையாகும். இந்த நாத சாதனை ஒருவனை நித்தியமான பிரம்மத்தின் அட்சரத்தை அனுபவிக்கும் ஓர் உயர்ந்த பகுதிக்கு கொண்டு செல்லும்.

இந்திய பாரம்பரிய இசை மனதின் அக உணர்வில் ஆழமான பாதிப்பினை ஏற்படுத்துகிறது. வேத மந்திரங்கள் சுலோகங்களாக குரலின் மூலம் நன்கு வெளிப்படுத்தப் படக் கூடியவை.

ரிஷிகளால் இவற்றை பாடும் முறைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. வேதங்களைப் பாடுவதற்குரிய சிறப்பான ஸ்வரங்கள் இருக்கின்றன. வேத மந்திரங்களை பாடுவதற்குரிய முறைகள் இருக்கின்றன.

மறையியல் அறிவினை வெளிப்படுத்தும் மூன்று வேதங்களை வேத த்ரயி என்று கூறுவார்கள்.

வேதத்தின் உள்ளடக்கம் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ரிக் வேதம் மறையியல் அறிவு, மற்றும் பிரார்த்தனை மந்திரங்களைக் கொண்டிருக்கிறது.

இறைவனுடைய நித்திய சக்திகள் மற்றும் தெய்வீக நற்பண்புகளின் தோற்றம் மற்றும் விரிவாக்கம் பற்றிக் கூறுகிறது. யஜுர் வேதத்தில் வேதத்தில் தத்துவம், அறிவியல் மற்றும் யாகம் செய்யும் முறைகள், யக்ஞம், ஆகிய மந்திரங்கள் உள்ளன. சாம வேதம் என்பது ஸ்வரங்கள், இசை மற்றும் அனைத்து வேத கீர்த்தனைகளுக்குமான மந்திரங்கள் அடங்கிய மந்திரங்களின் தொகுப்பாகும்.

அதர்வ வேதம் பிரம்ம ஞான மந்திரங்களைக் கொண்டுள்ளது உச்சநிலை இறுதி ஆன்மீக அறிவு.

வேத த்ரயி காணப்படும் மந்திரங்களைக் கொண்டு வேத அறிவியலுக்கும் ஆன்மீகத்திற்குமான சாதனை முறைகள் வகுக்கப்படுகிறது.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்







கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதி, ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வைகாசி திருவிழா தேரோட்டத்தின் போது ( 21.05.2022) விநாயகப் பெருமான், கௌரி அம்பாள் மற்றும் வள்ளி, தெய்வானை சமேத கதிர்வேலாயுத சுவாமிகள் சிறப்பு அலங்காரத்துடன் முத்தேர்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பதை படங்களில் காணலாம்.
(படங்கள்: வட கொழும்பு தினகரன் நிருபர்)




# பதுளை மாவட்டத்திலுள்ள கலைஞர்களுக்கு இலவச ஆயுள் காப்புறுதி

(ஹாலிஎல விஷேட நிருபர் )

தேசிய ம ரபுரிமை, கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய கலை மேம்பாட்டுக்கான அமைச்சின் அனுசரணையில், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பதுளை மாவட்டத்தில் கலைஞர்களுக்கு காப்புறுதி வழங்கும் நிகழ்வு பதுளை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

பதுளை மாவட்ட கலாசாரப்பிரிவின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது. பதுளை மாவட்டத்தில் 13 கலைஞர்களுக்கு காப்புறுதி பாதுகாப்பு வழங்கப்பட்டது. இதன்மூலம்,ஒருவருக்கு தலா ரூ 20 லட்சம் காப்பீட்டுத் தொகை கிடைக்கவுள்ளது.

பிரதேச செயலகங்களூடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு காப்புறுதிச் சலுகைகள் வழங்கப்படும்.



இந்த காப்புறுதியை "சொப்ற்லொஜிக் இன்ஸூரன்ஸ் கம்பனி" வழங்குகிறது.

தேசிய பாரம்பரியம், கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய கலை மற்றும் கைவினை ஊக்குவிப்பு அமைச்சு இதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளது.

இது, விபத்து மற்றும் மருத்துவ காப்பீட்டு திட்டமாக செயல்படுகிறது. 18 80 வயதுக்குட்பட்ட குறைந்த வருமானம் கொண்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகப் பாதுகாப்பு தேவைப்படுபவர்கள் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக கலைத் துறையில் செயல்படுவோர் இதற்குத் தகுதியடையவர்களாவர்.

ஆயுள் காப்பீடு, குடும்ப உறுப்பினர்களுக்கான மருத்துவக் காப்பீடு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 நோய்களுக்கான மருத்துவக் காப்பீடு, அத்துடன் மருத்துவமனையில் அனுமதித்தல் மற்றும் அம்பியுலன்ஸ்களை வழங்குதல் என்பவற்றுக்கு இந்தக் காப்பீடு இலவசமாக வழங்குகிறது."சொப்ற்லொஜிக் இன்ஸூரன்ஸ்" முழு மற்றும் பகுதியளவு குறைபாடுகளுக்கு இந்த கலைஞர் காப்புறுதியை வழங்குகிறது.

கலைஞர்கள் மத்தியில் உரையாற்றிய பதுளை மாவட்ட மேலதிக செயலாளர், இவ்வாறானதொரு நிகழ்வில் பங்குபற்றியமை பெரும் பாக்கியம் என தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்தில் கலைஞர்கள் மிக முக்கியமான பங்குதாரர்கள். எனவே, அவர்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் பாராட்டப்படாவிட்டாலும், சமூகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மக்கள் மனதில் நல்ல பதில் இல்லாதது பல்வேறு மோதல்களை உருவாக்குகிறது. கலை மற்றும் அழகியல் மூலம் இந்த நிலைமைகளை கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த விபத்துக் காப்புறுதித் திட்டம் இலங்கை முழுவதும் அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலும் பல கலைஞர்களுக்கு விரைவில் காப்புறுதி வழங்கப்படவுள்ளதாக பதுளை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## மாணவனை காணவில்லை



(அவிசாவளை நிருபர்)

எட்டியாந்தோட்டை புனித மரியாள் தேசியக் கல்லூரியில் தரம் 11இல், கல்விபயிலும் புஷ்பராஜ் கிஷோத்திரன் எனும் மாணவன் காணாமல்போயுள்ளார்.

தனியார் வகுப்புக்கு செல்வதாக கூறிவிட்டு (21) சென்றவர், இன்னும் வீடு திரும்பவில்லை என பெற்றோர் தெரிவித்தனர். இவர், எட்டியாந்தோட்டைமீபிட்டிகந்ததோட்டத்தை சேர்ந்தவர். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் 0776146216, 0783761663 மற்றும் 0714148152 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# சேதனப்பசளை தட்டுப்பாட்டால் தேயிலை உற்பத்திகள் பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சேதனப்பசளை தட்டுப்பாடு காரணமாக தேயிலை உற்பத்தியில் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சலுகை அல்லது மானிய விலையில் சேதனப்பசளையை பெற்றுத்தந்தால்,தேயிலை உற்பத்தியை அதிகரித்து அந்நியச்செலாவணியை ஈட்டிக்கொள்ள முடியுமென்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இதிபற்றி அவர் கள் மேலும் தெரிவித்ததாவது,

தேயிலைத்தூள், ஒரு கிலோவின் விலை சந்தையில் 900 ரூபா முதல் 1000 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் தமக்கு ஒரு கிலோ பச்சைக் கொழுந்துக்கு 83 ரூபா மட்டுமே வழங்கப்படுகிறது. இதற்குமுதல் பச்சை கொழுந்து ஒரு கிலோவின் விலை 100 ரூபாவுக்கு மேல் கிடைத்தது. எனினும், தற்போது கிடைக்கும் தொகை மிகக்கு குறைவானது. அதிலும் கிடைக்கும் 83 ரூபாவிலும் 03 ரூபாவை போக்குவரத்து செலவுக்காக தேயிலைக் கொழுந்து சேகரிப்போர் அல்லது தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் அறவிடுகின்றனர்.

அதேபோல், தேயிலைத்தூளின் விலை அதிகரிப்பு தமக்கும்,பொது மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இதன் விலை அதிகரிப்புக்கு ஏற்ப பச்சைக் கொழுந்தின் விலையும் அதிகரிக்கப்படாமை அநீதியான செயல் எனவும் சிறுதேயிலைத் தோட்ட உரிமையா ளர்கள் தெரிவிக்கின்றனர்.

## பஸ்ஸுக்கு வெளியே தலையை நீட்டிய குழந்தை உயிரிழப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த குழந்தை வீதிக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியில் மோதி, உயிரிழந்தது. இச்சம்பவம் மாவனெல்லை பகுதியில் (21) இடம்பெற்றது.

பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த இக்குழந்தை திடீரென ஜன்னலுக்கு வெளியில் எட்டிப் பார்த்த சமயம், பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியில் மோதி விபத்துக்குள்ளானது. இதில், பலத்த காயத்துக்குள்ளான குழந்தை மாவனெல்லை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சைப்பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மாவனெல்லை – ரம்புக்கணை வீதியில் கிரிகல சந்திக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உஸ்ஸாபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த மூன்றரை வயது குழந்தையே, இவ்வாறு உயிரிழந்தது.

## மலையகத்திலுள்ள சில நகரங்களில் பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை

(மஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்)

மஸ்கெலியாவில், கடந்த மூன்று தினங்களாக கோதுமைமாவை பெற்றுக்கொள்ள முடியாமல் நுகர்வோர்அவதிப்படுவதைக்காண முடிகின்றது.

பெருந்தொகை கோதுமை மாவை, ஒரே ஒரு குறிப்பிட்ட கடைக்காரர் மாவு (முகவர்) எனக் கூறிக்கொண்டு குடோனில் பதுக்கி வைத்துள்ளார். விலை ஏற்றத்தின் பின்னர் இந்நபர்,கோதுமைமாவை தாராளமாக ஏனைய கடைகளுக்கு விநியோகிப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மூன்று நாட்களாக இவர், மாவை பதுக்கி வைத்ததாலே இந்த அவல நிலை ஏற்பட்டதாகவும் மக்கள் கவலைப் படுகின்றனர்.

கடந்த சில மாதங்களாக அன்றாட பொருட்கள் விலை உயர்வால், பல லட்சம் ரூபாவை இவ்வாறான பதுக்கல் வியாபாரிகள் சம்பாதித்துள்ளனர்.

இதனால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுகுறித்து கவனம் செலுத்த வேண்டுமென பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தெமோதரையில் 50 ஏக்கர் வனப்பகுதி தீயில் எரிந்து சேதம், சூழலுக்கும் பாதிப்பு

( ஹாலிஎல விஷேட நிருபர் )

தெமோதரை புகையிரத நிலையத்தைச் சுற்றியுள்ள ஐம்பது ஏக்கர் இயற்கைக்காடு இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. தீயை கட்டுப்படுத்துவதற்கு பிரதேச மக்கள் எடுத்த எந்த முயற்சியும் பலனளிக்காது, காட்டுப்பகுதி முற்றாக அழிந்துள்ளது.

நாட்டின் ரயில் பாதையில் தனித்துவமான ரயில் இணைப்பாகக் கருதப்படும், நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடமாகவும் தெமோதரை புகையிரதப் பாதை கருதப்படுகிறது. இந்தப்பகுதியே, தீயினால் பெரும் சேதமடைந்துள்ளது.

தெமோதரை புகையிரத நிலையத்தின் அமைவிடத்தை அண்மித்த மிகவும் கவர்ச்சிகரமான இந்தக்காடு, பொழுது போக்கு,வேட்டையாடுதல் மற்றும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் போன்ற காரணங்களால் பாழடைந்துள்ளது.

இந்த தீயினால் மலைத் தொடரின் பசுமையான தாவரங்கள் எரிந்து, சுற்றியுள்ள நீரேந்து பகுதிகளின் வனப்பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.




## தேசிய உற்பத்திகளை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சிறிய மற்றும் நடுத்தர தேசிய உற்பத்தியாளர் சங்கம்

(அக்குறணை குறூப் நிருபர்)

தேசிய உற்பத்திகளை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுப்பதனூடாக எமது பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சரிவை படிப்படியாகக் குறைக்க முடியுமென சிறிய மற்றும் நடுத்தர தேசிய உற்பத்தியாளர் சங்கம் தெரிவிக்கிறது.

கண்டியில் இடம் பெற்ற (22) ஊடக சந்திப்பின்போதே இச்சங்கம் இதனைத் தெரிவித்தது அதன் தேசிய அமைப்பாளர் அமில சஞ்சீவ விஜேசிங்க இது பற்றி மேலும் தெரிவித்தாவது,

இன்று ரூபா மதிப்பிறக்கம் உட்பட ஏனைய பல காரணிகளால் மூலப்பொருள் விலைகள் அதிகரித்துள்ளன. இது, எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற பல காரணங்களால் உள்ளூர் உற்பத்திகள் பாதிப்படைந்துள்ளன. இதனை உடன் நிவர்த்திக்க வேண்டும்.

அதிகளவான சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டு நிறுவனங்கள் கடன்களைப் பெற்றே தொழிலில் ஈடுபட்டு வந்தன. பொருளாதார மந்த நிலை காரணமாக கடன் சுமை அதிகரித்துள்ளது. வட்டிவீதம் உயர்ந்துள்ளது. எனவே உள்ளூரில் உற்பத்தி செய்ய கூடியவற்றை ஊக்குவிப்பதன் மூலம் இதனைக் குறைக்க முடியும். உதாரணமாக ஏலம், கறுவா, சாதிக்கா போன்ற வாசனைத் திரவிய உற்பத்திகள் மற்றும் பல சரக்கு பொருட்கள் போன்றவற்றை உள்ளூரில் உற்பத்தி செய்ய முடியும். இவற்றை பாரிய அளவில் இறக்குமதி செய்யத் தேவையுமில்லை.

எனவே, தேசிய உற்பத்தியை அதிகரிப்பதனூடாக இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வைப் பெற முடியும் என்றார். மேற்படி அமைப்பின் செயற்பாட்டு அங்கத்தவர் அசித்த பராக்கிரம பண்டார தெரிவித்தாவது, தேசிய உற்பத்தியை அதிகரிப்பதனூடாக உள்ளூர் தேவை நிறைவடைவதுடன், அபரிமிதமான உற்பத்தியை ஏற்றுமதி செய்து, டொலர் பிரச்சினைக்கும் ஓரளவு தீர்வைப் பெறமுடியும் என்றும் தெரிவித்தார்.

## இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து சிவப்பு எச்சரிக்கை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடரும் மழையால், பரந்தளவில் மண்சரிவு அச்சுறுத்தல் ஏற்படலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, குருவிட்ட, எஹலியகொடை, கலவான எலபாத்த, பெல்மதுள, எஹலியகொடை, கஹவத்த நிவித்திகலை, இம்புல்பே, கொடக்கவெல, பலாங்கொடை, கிரியெல்ல, கஹவத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் அறிவுறுத்தல்களுக்கிணங்கவே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலக இடர் முகாமைத்துவ மற்றும் கிராம சேவை அதிகாரிகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர். இப்பிரதேசங்களில், வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை கலவான, பெல்மதுளை, இரத்தினபுரி பிரதேச செயலக பிரிவுகளுக்கு சிவப்பு அடையாள எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களுக்கு அண்மித்த பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள பிரதேச செயலகப் பிரிவிலும் மண்சரிவு அச்சுறுத்தல் நிலவுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

# க,பொ,த,சாதாரண தர மாணவர்களுக்கு பிரவேச அட்டைகள் விநியோகம்

க.பொ.த சாதாரண தர பரிட்சையில் இன்று (21) தோற்றும் மாணவர்களுக்கு பிரவேச அட்டைகள் கடந்த வார இறுதியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மினுவாங்கொடை கல்வி வலயத்திலுள்ள கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு பிரவேச அட்டை வழங்கும் வைபவம் அல் அமான் அதிபர் எம்.ட.எம் ஆஸீம் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

கல்லொழுவை ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவரும் நிழாமியா அரபிக் கல்லூரியின் ஸ்தாபக தலைவருமான அல் ஹாஜ் ஏ.எச்.எம் முனாஸ் மாணவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி அனுமதி அட்டைகளை வழங்கினார். நிகழ்வில் மினுவாங்கொடை கல்வி வலய தமிழ் மொழி மூல பாடசாலைகளின் கல்வி பணிப்பாளர் ஏ.ஏ.எம் ரிஸ்வி, அல்அமான் அதிபர் எம்.ட.எம் ஆஸீம், பிரதி அதிபர் றிம்ஸான், பகுதி தலைவர் சஸ்றீன், ஆசிரியர் அஷ்ஷேக் உபைதுல்லாஹ் ஆகியோரும் உரையாற்றினர். மேலும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் மினுவாங்கொடை கிளை தலைவர் மௌலவி அஷ்ஷேக் பாஹிருதீன் ( தீனி) விசேட துஆ பிரார்த்தனை நடத்தினார்.






# கிழக்கின் குரல்



# கல்முனை கல்வி மாவட்டத்தில் 114 நிலையங்களில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை,

## சீரான போக்குவரத்துக்கு பரீட்சார்த்திகள் கோரிக்கை.

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, திருக்கோவில் ஆகிய நான்கு கல்வி வலயங்களை உள்ளடக்கிய கல்முனை கல்வி மாவட்டத்தில், இம்முறை மொத்தம் 114 நிலையங்களில் பரீட்சார்த்திகள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள், ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளரும், பிரதம பரீட்சை உத்தியோத்தருமான ஏ.ஜி.பஸ்மில் தெரிவித்தார்.

க.பொ.த சாதாரண தரப்பரீட்சை 2021(2022), இன்று (23) திகதி திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகி எதிர்வரும் ஜூன் 01 ஆம் திகதி புதன்கிழமை நிறைவு பெறவுள்ளது. பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கை பரீட்சைத் திணைக்களம் முன்கூட்டியே மேற்கொண்டுள்ளது.

பரீட்சை நிலையங்கள் மற்றும் அதன் சுற்றுப்புற பாதுகாப்புக் கடமையில் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஆகையால், பரீட்சை நிலையங்களுக்கு அருகாமையில் தேவையின்றி நடமாடுதல். கூட்டமாக நிற்றல், ஏனைய பரீட்சைக்குப் பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகள் என்பவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்திலுள்ள பரீட்சார்த்திகள் குறித்த நேரத்திற்கு இலகுவாக பரீட்சை நிலையத்தை சென்றடைவதற்கும், பரீட்சை முடிவுற்றதன் பின்னர்; இலகுவாக வீடு திரும்புவதற்கும் ஏற்றவகையில் இலங்கை போக்குவரத்துச் சபை கடந்த வருடங்களைப்போன்று,இம்முறையும் சீரான பஸ்சேவையை நடாத்தி உதவ வேண்டுமென பரீட்சார்த்திகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பிராந்திய இணைப்பு நிலையம் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்கவுள்ளது. 11 பிரதேச இணைப்பு நிலையங்களும் தொழிற்படவுள்ளன.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல்களும் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

# யானை தாக்கியதில் குடும்பஸ்தர் பலி

மணல்சேனை நிருபர்

கொக்கட்டிச்சோலை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட அடைக்கல் பிரதேசத்தில், யானையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

இச்சம்பவம் (21) இடம் பெற்றதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர். பன்சேனை கன்னன்குடா பிரதேசத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான (40) வயதுடைய வடிவேல் குணராசா என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

தனது வீட்டிலிருந்து அடைக்கல் பிரதேசத்திற்கு மேய்ச்சலுக்கு சென்ற மாடுகளை அழைத்து வரச்சென்றபோது, மறைந்திருந்த யானை இவரைத் தாக்கியது. இதில், சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

மீனிபிடித்தலில் ஈடுபட்டவர்கள், சடலத்தை மீட்டெடுத்து வீட்டுக்கு கொண்டு வந்ததாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைய, சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தை பார்வையிட்ட பின்னர், பிரேத பரிசோதனைக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# இந்து எழுச்சி பேரணியுடன் பாண்டிருப்பில் திருஞான சம்பந்தர் குருபூஜை வழிபாடுகள்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்



இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் எற்பாட்டில்,பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் இந்து இளைஞர் மன்றம் இணைந்து நடத்திய திருஞான சம்பந்தர் குருபூசை தினம் மற்றும் இந்து எழுச்சி பேரணி ஆகியன நேற்று ஞாயிற்றுக்கிழமை பாண்டிருப்பு கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் க.மேனன் தலைமையில் நடைபெற்றது.

பாண்டிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட திருஞானசம்பந்தர் திருவுருவச் சிலை, ஊர்வமாக விழா நடைபெறும் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன்போது கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அறநெறிப்பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், ஆலய குருமார்கள், இந்து ஆலயங்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள், இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் தேவாரங்கள் இசைத்தபடி, நந்திக் கொடியை ஏந்தியவாறு பேரணியாக சென்றனர்.

இங்கு சம்பந்தர் திருவுருவச் சிலைக்கு விஷேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றதுடன், திருஞான சம்பந்தர் அருளிய திருநெடுங்களத்து இடர்,களையும் பதிகமும் பாடப்பட்டன. மேலும், கல்முனை வடக்கில் இயங்கும் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களால் நடனம், பேச்சு, நாடகம், கதாப்பிரசங்கம் போன்ற ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டன. குருபூஜைக்கு வருகைதந்திருந்த அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு திருஞான சம்பந்தர் திருவுருவப்படம் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில்,அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் உட்பட ஆலயங்களின் பிரதமகுருமார், அறடிநறிப்பாடசாலை ஆசியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கான ஒழுங்கமைப்பை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜ் மேற்கொண்டிருந்தார்.



சாய்ந்தமருது பிரதேச அரசசேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சனிக்கிழமை (21) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் தலைவர் எம்.ஐ.ஏ.ஜப்பார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், அம்பாறை மாவட்ட அரச சேவை ஓய்வூதியர்கள் நிதியத்தின் செயலாளர் ஏ.உதுமாலெப்பை, பிரதேச செயலக உத்தியோகத்தர்களான ஏ.சி.எம்.பளீல், ஏ.சி.முஹம்மட், ரி.சாஜிதா ஆகியோர் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.
(படம்: கல்முனை விஷேட நிருபர்)

# வெயிலில் பல மணிநேரம் காத்திருந்தும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாக கவலை



தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை கிண்ணியா பகுதியிலுள்ள எழிலரங்கு மைதானத்தில் சிலிண்டர் எரிவாயு நேற்று (22) விநியோகிக்கப்பட்டது. இதற்காக,மக்கள் காலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். பல மணி நேரங்கள் காத்திருந்த போதும் பலர், ஏமாற்றமடைந்து வெறுங்கையுடன் வீடு திரும்பியதாக தெரிவிக்கின்றனர்.

நூற்றுக்கணக்கான மக்கள் எரிவாயு பற்றாக்குறையால், பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர். ஆனாலும் சிலருக்கு சிலிண்டர் கிடைக்கப்பெறவில்லை வெயிலில் பல மணி நேரங்கள் காத்திருந்தமை பெரும் ஏமாற்றமளித்ததாவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வீடுகளில் சமைப்பதற்கு கூட எரிவாயு இல்லை. எரி வாயுக்காக காத்திருந்த தாய் ஒருவர் இதன் போது, மிகக் கவலையுடன் தனது ஆற்றாமையை தெரிவித்தார்.

இதில், சுமார் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், பெண்கள் என பலர் எரிவாயுவை பெற நீண்ட வரிசையில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீதிக்கு குறுக்கே மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளதால் பெரும் ஆபத்து

பள்ளிக்குடியிருப்பு தினகரன் நிருபர்



இறக்காமம் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் வீதியிலுள்ள மின் கம்பங்கள் வீதிப் போக்குவரத்துக்கு பாதிப்பேற்படும் வகையில் அமைந்துள்ளன. இவற்றை அகற்றி பாதை ஓரமாக நடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறக்காமம் ஆலையடிச் சந்தியிலிருந்து, இறக்காமம் ஜும் ஆ பள்ளிவாசலுக்குச் செல்லும் மேற்படி வீதியில், இவ்வாறு இரண்டு மின் கம்பங்கள் பாதைக்கு குறுக்கே உள்ளன. இதில் ஒரு மின் கம்பத்தின் அடிப்பகுதி சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் வீதி விபத்துக்கள் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே,மேற்படி மின் கம்பங்களை அகற்றி பாதை ஓரமாக நடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிழக்கு மாகாண மக்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைக்கு இன்னும் வரவில்லை

ஆ.நிதாகரன்



இந்நிகழ்வில் உரையாற்றிய செயலாளர் கோபாலரெட்னம் கூறியதாவது,

கிழக்கு மாகாணத்தில் மக்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலமைக்கு வரவில்லை எனவும், உற்பத்தியை அதிகரித்து வாழ்வாதாரத்தை உயர்த்தும் பணிகளில் மக்கள் ஈடுபட வேண்டும் என்றும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பதவியுயர்வு பெற்ற மூத்ததம்பி கோபாலரெட்ணம் தெரிவித்தார்.

தேற்றாத்தீவு பாலமுருகன் ஆலயமுன்றலில் இடம்பெற்ற, அவருக்கான கௌரவிப்பு விழாவில் (21) உரையாற்றும்போதே இதனை அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மக்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைமைக்கு இன்னும் வரவில்லை. இந் நிலைமை ஏற்படாதிருக்க உற்பத்தியின் மூலம் வாழ்தாரத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு மனிதனுக்கு பிரச்சினை வருமாக இருந்தால், இன, மத பேதமின்றி தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

தீர்க்க முடியாவிட்டாலும் வழிகளைக்காட்டியாவது சரிசெய்ய வேண்டும் என்றார்.

தேற்றாத்தீவு ஆலய நிருவாக சபை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரி சங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளைநாயகம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். தேற்றாத்தீவு ஆலய நிருவாக சபையினர் மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தினர், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# ஆலையடிவேம்பில் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம்

வாச்சிக்குடா விஷேட நிருபர்

ஆலையடிவேம்பு பிரதேசத்தில்,இரண்டு மாதங்களின் பின்னர் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன.

தர்மசங்கரி மைதானத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன. சிலிண்டர் கேஸ் வழங்கப்படவுள்ளதாக தகவல் வெளியானதால், இரவு பத்து மணிமுதல் குறித்த இடத்தில் மக்கள் குவியத்தொடங்கினர்.எனினும் காலை எட்டு மணிக்கே சிலிண்டர்களை பெற்றுச்சென்றனர்.

12.5 கிலோ எரிவாயு சிலிண்டர்கள்5000ரூபாவிற்கும்ஐந்துகிலோ எரிவாயு சிலிண்டர்கள் 2100 ரூபாவிற்கும் வழங்கப்பட்டன.

இதேநேரம் 300 எரிவாயு சிலிண்டர்கள் மாத்திரம் வழங்கப்பட்டதால், காத்திருந்த அதிகளவான பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

இதேநேரம் நேற்றும் அங்கு மக்கள் கூடியிருந்தனர். எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படாததால் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது.

# வீட்டுவாசலை மரணம் வந்து தட்டும் வரை காத்திருக்காது, விழிப்புடன் இருங்கள்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

வீட்டுவாசலை மரணம் வந்து தட்டும் வரை காத்திருக்காது, அனைவருமாக ஒன்றித்து டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த முன்வர வேண்டுமென பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஜீ.சுகுணன் மட்டக்களப்பு மக்களிடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் டெங்கு தாக்கம் அதிகரித்தவாறு இருப்பதை கருத்திற்கொண்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஜீ.சுகுணன், பாடசாலைகளுக்கு கள விஜயம் மேற்கொண்டுஊடகங்களுக்குகருத்துதெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில், டெங்கு நோயின்தாக்கம் மிக வேகமாக அதிகரிக்கும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்திலும் இதன் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் டெங்கு தாக்கம் அதிகமுள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களுக்குள் 422 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். இளவயது மரணங்கள் இரண்டும் சம்பவித்துள்ளது. மட்டக்களப்பு நகர் பகுதியில் மாத்திரம் 240 பேர் டெங்கு நோயாளர்களாக அடயாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனைக்கருத்திற்கொண்டு, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் மட்டக்களப்பு நகர் பகுதியிலுள்ள சாதாரண தர பரீட்சை நடைபெறவுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் பரீட்சை நிலையங்களுக்கு கள விஜயம் மேற்கொண்டார். டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான இடங்களாக இதன்போது இனங்காணப்பட்ட பாடசாலை நிருவாகத்திற்கு சிவப்பு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டதுடன், அடுத்த கள விஜயத்தில் டெங்கு பரவும் ஆபத்துள்ள இடங்கள் என இனங்காணப்பட்ட பகுதிகள் துப்பரவு செய்யப்படாவிட்டால்,பாரபட்சம் பாராது உச்சக்கட்ட சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். இதன்போது மட்டக்களப்பு மண்முனை வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி வைத்தியகலாநிதி இளையதம்பி உதயகுமார், பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

### உயிர் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்கான பெறுகை அறிவித்தல்

1. தினமின, தினகரன் மற்றும் டெயிலிநியுஸ் பத்திரிகைகளில் 2022.02.18 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

| | அம்சம் | BES அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (மில்லியன் ரூபாவில்) |
|---|---|---|---|
| 01. | Procurement of 03 Nos. Incinerators | 12,500.00 ரூபா | 62.5 |
| 02. | Procurement of 02 Nos. Pressure Swing Absorption Oxygen Generation Plant | 20,000.00 ரூபா | 119 |

2. பெறுகை அறிவித்தலின் விளக்கம் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.
3. விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதியானது 2022.05.30 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதுடன் அதே திகதியில் அதாவது 2022.05.31 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு திறத்தல் நடைபெறும்.
4. விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று, அவைகளை பரீட்சித்து விலைமனுக்கோரல் ஆவணத்தை கொழும்பு-10, போசணை மற்றும் சுதேச மருத்துவம், சுகாதார அமைச்சு, உயிர் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பணிப்பாளரிடமிருந்து கையேற்றுக் கொள்ளலாம்.

   (தொலைபேசி: 011-2691916. தொலைநகல்: 011-2698317).
5. முன்னைய விளம்பரத்தில் வழங்கப்பட்ட ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர் / அமைச்சு பெறுகைக் குழு,**
**சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு,**
**இல.: 26, 1 ஆம் மாடி,**
**'மெடிஹவுஸ்' கட்டிடம்,**
**சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10.**

---

HDFC BANK
உங்கள் வீட்டு வங்கி

## கேள்வி கோரல் அறிவித்தல்

### இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி பின்வரும் ஆதனங்களை விற்பனை செய்வதற்காக உடனடியாக கேள்வி அழைப்பு விடுக்கப்படுகிறது.

| | குறியீட்டு இலக்கம் | காணியின் விஸ்தீரணம் | காணியின் பெயர் | கிராமம் | பிரதேச சபை | மாவட்டம் | காணியின் விபரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 0200004142 | 1 ரூட் 29.18 பேர்ச்சஸ், இருமாடி வீட்டுடன் (லொட் இல.1) | மீகஹவத்தை | மாபோதல ஹொரம்பெல்ல | மினுவங் கொடை | கம்பஹா | கம்பஹா மினுவங்கொடை வீதிக்கு அருகாமையில் வசிப்பதற்கு கூடிய இருமாடி வீடு மற்றும் மதிப்புமிக்க காணி |
| 2 | 603500001189 | 1 ரூட் 7.40 பேர்ச்சஸ், வீட்டுடன் (லொட் இல. C) | படகந்த வத்தை | பலவல (படல்கமை) | திவுலபிட்டிய | கம்பஹா | கொடதெனியாவ நீர்கொழும்பு பிரதான வீதிக்கு முன்பாக வீடு மற்றும் மதிப்புமிக்க காணி |
| 3 | 202500000137 | 1 ரூட் 39.33 பேர்ச்சஸ், இருமாடி, வீட்டுடன் (லொட் இல. 215) | பல்லுகெதரலந்த ஹேன்யாய | யகுன்னாவ | மெதகம | மொனராகல | பிபில- மொனராகல விதியில் யகுன்னாவ கிராமத்தில் அமைந்துள்ள மதிப்புமிக்க காணி |

விலை மனுக்களை சமர்ப்பிக்கும் பொழுது சம்பந்தப்பட்ட கேள்வி கோரல் பத்திரத்தினை பூர்த்தி செய்து பணம் செலுத்திய பற்றுச் சீட்டினை (ஒரு ஆதனத்திற்காக மீளச் செலுத்தப்படாத கேள்வி கோரல் கட்டணமாக ரூபா 2,500/- மற்றும் மீளச் செலுத்தப்படும் கேள்வி கோரல் கட்டணமாக 10,000/- ரூபாவும்) இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சம்பந்தப்பட்ட குறியீட்டு இலக்கத்தினையும் கேள்வி கோரல் என்ற வாசகத்தினையும் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக 2022/06/22 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**முகாமையாளர் (நிர்வாகம்)**
**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி**
**சேர்-சித்தம்பலம் ஏ.காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085**
**கொழும்பு - 02.**

**விசாரணைகள்: 011-2356800**
**011-2356888**
**071-5881713**
**071-5881702**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு

### சப்ரகமுவ மாகாண சபை

### சப்ரகமுவ மாகாண பாடசாலைகளின் செயற்பாட்டு அறைகளுக்கான தளபாட உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

சப்ரகமுவ மாகாண பாடசாலைகளின் செயற்பாட்டு அறைகளுக்குத் தேவையான தளபாட உபகரணங்களை வழங்குவதற்காக கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | விபரங்கள் | எண்ணிக்கை | கேள்விப் பிணை முறி (இலங்கை ரூபாவில்) |
|---|---|---|---|
| 01 | கணனி கதிரைகள் | 800 | 72,000.00 |
| 02 | கணனி (மடிக்கணனி) மேசைகள் | 800 | 96,000.00 |
| 03 | ஆசிரியர் மேசைகள் | 30 | 12,000.00 |

i. கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டிய தினம்: ஒப்பந்தம் கையளிக்கப்படும் நாள் முதல் 60 நாட்களுக்குள்
ii. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) முறையின் கீழ் இடம்பெறும்.
iii. ஒரு கேள்விதாரர் தமது விருப்பத்தின் பிரகாரம் ஒரு உருப்படிக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கு கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் நீங்கள் விலைகளைச் சமர்ப்பிக்கும் உருப்படிக்கு இயைபாக முழு அளவையும் வழங்குதல் வேண்டும்.

02. இது தொடர்பில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சப்ரகமுவ மாகாண சபையின் கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சிலிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் (தொலைபேசி இல. 045-2222542 / 045-3466960) 2022-05-23ஆம் திகதி முதல் 2022-06-10ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பாக்கலாம்.

03. 2022-05-23ஆம் திகதி முதல் 2022-06-10ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரிக்கு எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றை விடுத்து 3500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-06-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சப்ரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெறும். ஏதாவது தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் இந்த கூட்டத்தை நேரடியாக நடத்த முடியாமல் போனால் Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு எதிர்பார்க்கும் கேள்விதாரர்கள் 2022-06-01ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் வேண்டுகோள் கடிதமொன்றை தொலைநகல் மூலம் (தொலைநகல் இலக்கம்: 045-2228042) அல்லது மின்னஞ்சல் (edusabaram@gmail.com) ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டம் தொடர்பான (Zoom Link) தகவல்கள் உங்களுக்கு மின்னஞ்சல் செய்யப்படும்.

05. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2022-06-13ம் திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கும் பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் அல்லது இந்த அமைச்சின் பிரதான கணக்காளரின் அறைக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மரத் தளபாட உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான கேள்வி - GEMP 2022'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றவுடன் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். (கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்வதானால் அதன் பொருட்டு கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்)

06. **கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**செயலாளர்,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**

07. அனைத்து கேள்விகளும் 2022-08-12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

08. கேள்வியுடன் இங்கு முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு ''செயலாளர், கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி'' எனும் பெயரில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி கோரலின் பெயர் ''பாடசாலை மரத் தளபாட உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான கேள்வி - GEMP 2022"" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதை கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியானது 2022-06-13ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். யாராவது ஒரு கேள்விதாரர் கேள்விப் பிணை முறிக்கு பதிலாக குறித்த தொகையை அமைச்சுக்கு வைப்புச் செய்வதற்கு உத்தேசித்தால் இயைபுடைய தொகையை அமைச்சின் செயலாளரின் பெயரில் மேற்குறிப்பிடப்பட்ட விடயத்தைக் குறிப்பிட்டு பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியைச் சமர்ப்பிப்பதன் மூலம் மேற்கொள்ளலாம்.

09. இந்த கேள்வி கோரல் தொடர்பில் எழும் எந்தவொரு விடயம் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவின் தவிசாளரைச் சாரும்.

**சுஜானி ஆர். விஜேதுங்க,**
**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**

2022-05-23.

**தொலைபேசி: 045-2222542**

---

## INVITATION FOR BIDS (IFB)

## MANTHAI WEST PRADESHIYA SABHA, ADAMPAN, MANNAR DISTRICT

*LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP PT-II) - PROJECT ID: P 163305*

[1]. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of the Local Development Support Project (LDSP PT-II). Part of this loan will be used for payments under the contract named below.

[2]. The Chairman, Local Authority Procurement Committee (LAPC), on behalf of Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S.No. | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs. Mn) | ICTAD Minimum Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period up to | |
| 01 | MN/MWPS/LDSP/PT-11/2021 | Construction of Vehicle Park Service Place at Manthai West Pradeshiya Sabha - Adampan | 1.039 | C8 (Building) | 11000.00 | 13/09/2022 | 91 Days |

[3]. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

[4]. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have required valid CIDA registration in Highway Construction & Building Construction for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

[5] Qualification requirements to qualify for contract award is given in Section 5 of the Schedule in the Bidding Document.

[6]. Interested bidders may obtain further information from **Chairman, Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar.** [Telephone No: **023 205 1854** Fax No: **023 205 0853**] and inspect the bidding documents at the address **Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar from 09.00 Hrs to 15.00 Hrs.**

[7]. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar** from **23.05.2022 until 13.06.2022 from 09.00 Hrs to 15.00 Hrs.** upon payment of a non refundable fee of **Three Thousand Rupees. (Rs.3, 000.00) for each work.** The method of payment will be **by cash.**

[8]. Bids shall be delivered in duplicate to the address at **Chairman, Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar** on **or before 14th June 2022 at 10.30 Hrs.** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

[9]. Bids shall be valid up to **16th August 2022 respectively.**

[10]. All bids shall be accompanied by a "Bid Security", as mentioned in the table above. Bid Security shall be valid upto the date mentioned in the table above, shall be same as Schedule Clause 16.

[11]. The pre-bid meeting will be held on **06.06.2022** at **10.30 Hrs** at the **Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar.**

*The address (es) referred to above is (are):*

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC).**

**Manthai West Pradeshiya Sabha,**
**Adampan, Mannar.**
**[Fax No: 023 205 0853]**
20.05.2022

## சிறு விளம்பரம்

### வேலைவாய்ப்பு

325

தொழில்துறை
பொது

தெஹிவளையில் அமைந்துள்ள பிரபலமான Catering Service நிறுவனத்திற்கு அனுபவமுள்ள அனுபவமற்ற kitchen helpers உடன் வேலைக்கு தேவை. உணவு தங்குமிடம் இலவசம். சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். 077 2655252, 077 2613231, 077 0412989. 031790

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

**NSB**

# தேசிய சேமிப்பு வங்கி
# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல: NSB/PT/ITE/2022/11**

இங்கு காட்டப்பட்டுள்ள கேள்விக்கு இயைபான பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதன்மை உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் அல்லது அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | 100 எண்ணிக்கையான 5KVA (Three Phase) UPS இயந்திரங்கள் |
| பெறுகை முறை | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | ரூபா 12,000.00 |
| சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி | ரூபா 450,000.00 |
| விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2022-06-14 பி.ப. 3.00 மணி |
| கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம் | 2022-06-15 மு.ப. 10.00 மணி |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2022-05-23ஆம் திகதியிலிருந்து 2022-06-14ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் கேள்வி திறக்கப்படும் திகதியிலிருந்து ஆகக் குறைந்த காலப்பகுதியான 120 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வங்கி உத்தரவாதத்துடன்/விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (வழங்கல்) பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – மேல் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

---

## நிறுவனத்தின் பெயரை மாற்றுவதற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(2)ன் படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்பு நிறுவனம் 05 மே 2022 அன்று அதன் பெயரை மாற்றியுள்ளதை இதன் மூலம் அறிவித்துள்ளது.

நிறுவனத்தின் முன்னாள் பெயர்:
**களம்பு சென்டர் ஃபோர் கொக்னிட்டிவ் கம்பியூட்டிங் (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: **PV94178**

பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி:
**மட்டம் 3, இல 11, காசல் வீதி, கொழும்பு 04**

நிறுவனத்தின் புதிய பெயர்:
**கியுபொக்ஸ் கோர்ப் (பிரைவட்) லிமிட்டட்**

அக்கவுண்டிங் சிஸ்டம்ஸ் செக்டேரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட், மட்டம் 03, இல11, காசல் வீதி, கொழும்பு 04.

---

## 2023 ஆண்டிற்காக வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்
# பன்னல பிரதேச சபை

1987 இல. 15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாண கௌரவ ஆளுநரான ராஜா கொல்லூரே அவர்களால் 2020.10.29ம் திகதி மற்றும் இல. 2199/15 எனும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் அமுலாக்கும் விதி இல. 6 இன் பிரகாரம் பன்னல பிரதேச சபையின் தலைவரான என்னால் 2023ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் பொதுமக்களிடமிருந்து கோரப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன். உங்களது 2023 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனை அல்லது ஆலோசனைகளை 2022 ஜூன் 30ம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்குமாறு தபாலில் அல்லது கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவித்துக்கொள்கிறேன்.

**எல்.எம்.எஸ்.கே. ரஞ்சித் லங்சகார**
**தலைவர்,**
**பன்னல பிரதேச சபை.**

**2022.05.19ம் திகதி**
**பன்னல பிரதேச சபையில்**

---

**SriLankan Airlines** oneworld

## சிறிலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் (PB 67)
### பொதுக் கூட்டம் பற்றிய அறிவித்தல் - 27 மே 2022 அன்று மதியம் 3 மணிக்கு ஒரு கலப்பின கூட்டமாக திட்டமிடப்பட்டுள்ளது

சிறிலங்கன் எயார்லைன்ஸின் வருடாந்த பொதுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பு, பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கையின் மென் பிரதி மற்றும் மார்ச் 31, 2021 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் என்பன பங்குதாரர்களுக்கு 29 ஏப்ரல் 2022 அன்று அனுப்பி வைக்கப்பட்டன.

நாட்டில் நிலவும் நிலைமையைக் கருத்தில் கொண்டும், நிறுவனத்தின் 43வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்காகவும், மிஹிலக மதுரா, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் (BMICH), பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 7 இனை மையமாகக் கொண்டு, வருடாந்த பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. பங்குதாரர்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தில் நேரில் கலந்துகொள்ள அல்லது மெய்நிகர் சந்திப்புத் தளத்தைப் பயன்படுத்தி பங்கேற்க விருப்பம் உள்ளது.

பங்குதாரர்கள் இன்று முதல் மெய்நிகர் கூட்டத்தை அணுகுவது மற்றும் பதிவு செய்வது பற்றிய கூடுதல் தகவல்களை https://www.srilankan.com/virtualAGM ஐ அணுகுவதன் மூலம் பெறலாம்.

மெய்நிகர் பிளாட்ஃபார்மைப் பயன்படுத்தி கூட்டத்தில் கலந்துகொள்ளும் எங்கள் பங்குதாரர்களுக்கு தனிப்பட்ட கூட்டத்தில் பங்கேற்பது போல ஒப்பிடக்கூடிய உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்காக மெய்நிகர் வருடாந்த பொதுக் கூட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி
**சிறிலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்**

திருமதி. தல்றின் திருக்குமார்
**கம்பனிச் செயலாளர்/கூட்டாண்மை செயலகச் சேவைகள் தலைவர்**

மின்னஞ்சல்: comsec@srilankan.com
2022 மே 23ஆம் நாளன்று

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB III)

**மாநகர சபை, அக்கரைப்பற்று உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத்திட்டத்தின் கீழான செயற்திறன் ஒதுக்கீடு அக்கரைப்பற்று மாநகர பூங்காவினுள் உள்ளக வீதி மற்றும் வாகனத்தரிப்பிட வசதிகள் கட்டமைத்தல்**

**ஒப்பந்த இல: LDSP/EP/AM/AKP/MC/PT-01/2022/01**

01. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு அக்கரைப்பற்று மாநகர பூங்காவினுள் உள்ளக வீதி மற்றும் வாகனத்தரிப்பிட வசதிகள் கட்டமைத்தல் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தில் கீழுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியினை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அக்கரைப்பற்று மாநகர சபையின் சார்பில் உள்ளூர் நிர்வாக பெறுகைக்குழு. தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

03. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடைபெறும். (04. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் அக்கரைப்பற்று மாநகர சபை, பெறுகைக்குழு தலைவரிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் (தொ.இல/ தொ.நகல் :- 067-2277275/067-2280024) (மின்னஞ்சல் - municipal.akp@gmail.com) என்பதோடு 2022 மே 23 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜூன் 13 வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை எந்தவொரு வேலை நாட்களிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

05. தகைமைத் தேவைகள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 5 இல் வழங்கப்பட்டுள்ளது.

06. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் தடுப்புப்பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக சாலை கட்டுமானத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவினை செலுத்தி 23 மே 2022 முதல் 2022 ஜூன் 13 வரை வேலை நாட்களில் 09:00 மணி முதல் 13.00 மணி வரை அக்கரைப்பற்று மாநகர சபையின் தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

08. விலைமனுக்களை 14 ஜூன் 2022 அன்று 13.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு அசல் மற்றும் நகல் பிரதிகளில் தயாரித்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள். விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்றபின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனுபிணை ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

09. விலைமனுவிற்கு முந்தைய கூட்டம் 07 ஜூன் 2022 அன்று 11:00 மணிக்கு அக்கரைப்பற்று மாநகர சபையில் நடைபெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் விலைமனுவிற்கு முந்தைய கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

| இல | ஒப்பந்த இல | பணி விபரம் | மதிப்பிடப் பட்ட சிவில் செலவு (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவை யான தரம் | விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியில் இருந்து விலைமனு செல்லுபடிக் காலம் | விலைமனு பிணை தேவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை தொகை (ரூபா) | செல்லு படிக் காலம் |
| 1 | LDSP/ EP/AM/ AKP/MC PT-01/ 2022/01 | அக்கரைப்பற்று மாநகர பூங்காவினுள் உள்ளக வீதி மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் கட்டமைத்தல் | 6.21 | 60 Days | C8&C7 (சாலை கட்டுமானத் துறை) | 77 Days | 65,000.00 | 28.08.2022 |

**தவிசாளர் - பெறுகைக் குழு,**
**மாநகர சபை, அக்கரைப்பற்று.**
**23.05.2022**

---

## கூறுவிலை கோருதல் (IFB)

### போக்குவரத்து அமைச்சு

## பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம்

போக்குவரத்து அமைச்சின், கிரேட்டர் கொழும்பு நகராட்சி போக்குவரத்து திட்டத்தின், திட்ட கொள்முதல் குழுத் தலைவர், தகுதியான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரர்களிடமிருந்து இடத்தை வாடகைக்கு எடுத்தல் தொடர்பான சீல் செய்யப்பட்ட ஏலங்களை அழைக்கிறது.

| கொள்முதல் இலக்கம் | பொருள் விபரம் | கூறுவிலை பிணைப் பணம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ.) | கூறுவிலைக்கான இறுதித் தினம் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| MoT/GCUTDP/MMC/ BD/2022/G9.2 | பிரதான உணவகம் (452 ச.அ.) சிற்றுண்டிச் சாலை (80 ச.அ.) | 30,000.00 | 3000.00 | 13.06.2022, 2.00 பி.ப. |
| MoT/GCUTDP/MMC/ BD/2022/G9.9 | வெற்று விளம்பர பலகை (30'x50') | 30,000.00 | 3000.00 | 13.06.2022, 2.00 பி.ப. |
| MoT/GCUTDP/MMC/ BD/2022/G9.24 | துரிதவணிக நிலையம் (96 ச.அ.) | 30,000.00 | 3000.00 | 13.06.2022, 2.00 பி.ப. |
| MoT/GCUTDP/MMC/ BD/2022/G9.3 | குளிர்பான சாலை (194 ச.அ.) | 30,000.00 | 3000.00 | 13.06.2022, 2.00 பி.ப. |

1. தேசியப் போட்டி விலைமனு நடைமுறைக்கமைய விலைகூறுதல் இடம்பெறும்.
2. ஒப்பந்தம் தொடர்பிலான மீளளிக்கப்படாத கட்டணத்தினைச் செலுத்தி அலுவலக நாட்களில் 2022 மே 31ஆந் திகதிலிருந்து 2022 ஜூன் 23ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணிவரையிலான நேரத்தில், கருத்திட்டப்பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப்போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நகரக் குடியிருப்பு அபிவிருத்திக்கூறு, GB-01, அடித்தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்து மூலம் வேண்டு கோளினைச் சமர்ப்பித்து, சிங்கள மொழியிலமைந்த முழுமையான விலைமனு ஆவணத்தினை பரிசோதித்து கொள்வனவு செய்து கொள்ளமுடியும். பணம் மூலமான கொடுப்பனவு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
3. ஆர்வமிக்க விலைமனுதாரர்கள், கருத்திட்டப் பணிப்பாளர், பாரிய கொழும்பு நகரப்போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கூறு, GB-01, அடித்தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை, இலங்கை. தொ. இல.: 011-2186094 பெக்ஸ்: 011-2186096 என்ற முகவரியூடாக மேலதிக விளக்கங்களினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
4. கொட்டாவவிலுள்ள மாகும்புர பல்நோக்கு மையத்திலிருந்து 2022 மே 30ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு ஒரு தளவிஜயம் ஆரம்பிக்கப்படும் என்பதுடன், தளவிஜயம் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கூறுவிலைக்கு முன்னரான கூட்டம் நடாத்தப்படும்.
5. கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கொள்முதல் இலக்கம் மற்றும் விடயம் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், கருத்திட்டப் பணிப்பாளர், GB-01, அடித்தளம், செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை, இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோகையளிக்க முடியும்.
6. கூறுவிலையினை, 2022 ஜூன் 13ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ, கீழ்வரும் முகவரிக்கு துணைப்பிரதியுடன் சமர்ப்பிக்க முடியும். பிந்திக்கிடைக்கும் கூறுவிலைகள் நிராகரிக்கப்படும்.

விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**கருத்திட்டப் பணிப்பாளர்,**
(பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்தி கருத்திட்டம்),
GR-01 அடித்தளம் செத்சிறிபாய கட்டம் II பத்தரமுல்லை

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# கேள்விமனுக் கோரல்

## காணி அமைச்சு

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

## வருடாந்த தேவைகளுக்கான கொள்வனவு – 2022

**கேள்விமனு இலக்கம்: SD/III/2022**

1. நில அளவைத் திணைக்களத்தின் 2022ம் வருடத்துக்கான தேவைகளுக்கு பின்வரும் சேவையை கொள்வனவு விலைமனுவுக்குரிய முத்திரையிடப்பட்ட கேள்விமனுக் கோரல்களை வழங்குநர்களிடமிருந்து முன்வைப்பதற்கான அழைப்பு

| தொடர் இல. | விபரம் | விலைமனு காப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|
| 01 | நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தின் சுத்திகரிப்புத் சேவையைப் பெற்றுக் கொள்ளல் (ஒரு வருட காலத்துக்கு) | 100,000.00 |

2. கேள்விமனுக் கோரல் தேசிய போட்டியளவிலான கேள்விமனுக் கோரல் விதிமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.
3. இதற்காக அக்கறையுள்ள கேள்விமனு முன்வைப்பாளர்கள் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்) இடமிருந்து 011-2368106 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
4. சுத்திகரிப்புச் சேவைக்கான கேள்விமனுவுக்குரிய முழுமையான ஆவணங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் இரண்டாயிரம் ரூபா (ரூ. 2000.00) மீளளிக்கப்படாத தொகையை செலுத்தியதன் பின்னர் 2022.06.10ம் திகதி பி.ப. 2.30 மணி வரை அலுவலக நேரங்களில் கேள்விமனுக்களை முன்வைப்போர் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்) இடமிருந்து பெற்றுக் கொள்ள இயலும்.
5. சரியாகப் பூரணப்படுத்திய கேள்விமனுப் படிவத்தை (இரண்டு பிரதிகளில் இருத்தல் வேண்டும்) கொண்டுள்ள விலை மனுக்கள் அடங்கிய முத்திரையிடப்பட்ட கடித உறையை 2022.06.13ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்), நில அளவைத் திணைக்களம், 150, கிருள வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரியில் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். 2022.06.13ம் திகதி மு.ப. 11.05 மணியளவில் அனைத்து கேள்வி மனுக்களும் மேற்காட்டிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக் காப்புத் தொகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**நில அளவையாளர் நாயகம்,**
**நில அளவைத் திணைக்களம்,**
**இல. 150, கிருள வீதி,**
**நாராஹேன்பிட்ட, கொழும்பு -05.**
2022.05.20

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# கேள்விக்கான அழைப்பு

## சமூக சேவைகள் திணைக்களம்

## 2022/ 2023ஆம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட சுத்திகரிப்புச் சேவையை வழங்கும் நிறுவனமொன்றை தேர்ந்தெடுப்பதற்கான கேள்வி கோரல்

**பெறுகை இல: DSS/03/SERVICES/NCB/2022/01**

1. சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால், திணைக்களத்தின் கீழ் நடத்தப்படும் கீழ்க்காணும் 13 நிறுவனங்களுக்கு 2022/ 2023 ஆம் ஆண்டிற்கு குறித்த சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   i. தொழிற்பயிற்சி நிலையம், லியனகேமுல்ல, சீதுவ.
   ii. தொழிற்பயிற்சி நிலையம், தெலம்புயாய, அக்குனுகொலபெலேஸ்ஸ
   iii. தொழிற்பயிற்சி நிலையம், வாவின்ன, வத்தேகம, கண்டி.
   iv. தொழிற்பயிற்சி நிலையம், கெட்டவல, லெல்ல, கண்டி.
   v. சிறுவர் வழிகாட்டல் நிலையம், இல. 11, வெல வீதி, பதிரகொட நாவின்ன, மஹரகம.
   vi. “ஜயவிரு செவன” பாதுகாப்பு இல்லம், நோன் அம்பலம்வத்த, புவக்பிட்டி, அவிசாவளை.
   vii. “ஜயவிரு சமாதி” புனர்வாழ்வு நிலையம், நோன் அம்பலன்வத்த, புவக்பிட்டிய, அவிசாவளை.
   viii. “விஹதி” தொழிற்பயிற்சி நிலையம், மீபகம பஹல குக்குலேகம, கலவான.
   ix. தொழிற்பயிற்சி நிலையம், தேவால வீதி, பொதுவில, மாதம்பை.
   x. தொழிற்பயிற்சி நிலையம், அமுனுகும்புர, வத்துருகம, கம்பஹா.
   xi. “சித்திஜய, ஹம்பாந்தோட்டை மாவட்ட சிறுவர் வழிகாட்டல் நிலையம், மல்பெத்தாவ, அம்பலந்தொட்ட.
   xii. தொழிற்பயிற்சி நிலையம், கும்புரமூலை, வாழைச்சேனை, மட்டக்களப்பு.
   xiii. சிறுவர் திறமை அபிவிருத்தி நிலையம், அமரசேக்கர மாவத்த, அத்துருகிரிய வீதி, கொட்டாவ.
2. கேள்வி வைத்தல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் பிரகாரம் (NCB) மேற்கொள்ளப்படும்.
3. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்களுடனான சிங்கள மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை, 2022.05.23 முதல் 2022.06.09 வரை” அலுவலக நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையும் 2022.06.10ம் திகதி 09.00 மணி முதல் 12.00 மணி வரையும் இலங்கை ரூபா மூவாயிரத்து ஐநூறு (ரூ. 3,500.00) மீளளிக்கப்படாத தொகையை சமூக சேவைத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டுடன், சமூக சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்துமூல வேண்டுதலைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.
4. தகைமை தேவைப்பாடுகள் மற்றும் மேலதிக விபரங்களை கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
5. இரு பிரதிகளுடனான கேள்விகள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2022.06.10ம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் அல்லது இவ்விடயம் சம்பந்தமாக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம்.
6. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகளை, ஏற்றுக்கொள்ளும் காலம் முடிடைந்தவுடன் உருப்படி இல. 09இல் குறிப்பிடப்படும் இடத்தில் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் ஒரு பிரதிநிதிக்கு சமுகமளிக்க அனுமதி வழங்கப்படும்.
7. சகல கேள்விகளும் இலங்கை மத்திய வங்கியில் அனுமதிக்கப்பட்ட உள்ளூர் வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் இலங்கை ரூபா ஒரு இலட்சத்து எழுபதினாயிரம் (ரூ. 170,000.00) பெறுமதியுடைய கேள்விப் பிணையுடன் அனுப்புதல் வேண்டும். கேள்விப் பிணையானது 2022.08.25ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. கேள்விதாரர்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் கேள்வி ஆவணங்களை கட்டணங்களின்றி பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சமூக சேவைத் திணைக்களம்,**
**இரண்டாம் மாடி, கட்டம் II, செத்சிரிபாய, பத்தரமுல்ல. இலங்கை.**
**தொ.பே : +94112187058 பெக்ஸ் : +94112187060**
**ஈமெயில் : chiefacc.dss@gmail.com**

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு-07, பார்ன்ஸ் பிளேஸ், இல 76இல் வசிக்கும் தற்போது இராஜகிரிய, நாவல, கல்பொத்த வீதி, இல. 42 இல் வசிக்கும், கசுன் சந்தீப பதிரன ஆகிய நான், கொழும்பு பகிரங்க நொத்தாரிசு பி.எல். சிறிரத்ன பண்டாரவினால் உறுதி செய்யப்பட்ட கொழும்பு 07, பார்ன்ஸ் பிளேஸ், இல. 76 இல் வசிக்கும் தற்போது இராஜகிரிய, நாவல, கல்பொத்த வீதி. இல. 42 இல் வசிக்கும், கயந்த சம்பத் பதிரனவுக்கு வழங்கப்பட்ட 1997.10.15ம் திகதிய மற்றும் இல. 205 கொண்ட அட்டோர்னி தத்துவத்தை இன்றைய தினம் முதல் அமுலுக்கு வருமாறு என்னால் இரத்துச் செய்யப்படுவதாக மற்றும் அதனை மேலும் சட்டத்தின் முன் வலுவிழக்கப்படுவதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய தினம் முதல் அமுழுக்கு வருமாறு மேற்படி கயந்த சம்பத் பதிரனவினால் மேற்படி அட்டோர்னி அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த அல்லது ஏதேனும் செயற்பாட்டிற்கு என்னால் பொறுப்புக் கூறப்படமாட்டாது எனவும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கசுன் சந்தீப பதிரன**

## சிலாபம் பிரதேச சபை

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய வட மேல் மாகாண கௌரவ ஆளுநர் ராஜா கொள்ளுரே அவர்களினால் 2020.10.29 மற்றும் இலக்கம் 2199/15 உடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிஷேடம்) பிரசுரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பிரதேச சபை வரவு செலவு அறிக்கை தயாரித்தல் மற்றும் அமுலாக்கல் விதிமுறை இலக்கம் 6இன் பிரகாரம் சிலாபம் பிரதேச சபையின் தலைவராகிய நான், 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கைக்காக பொது மக்களின் முன்மொழிவுகளைக் கோருகின்றேன். இதற்கான உங்களின் முன்மொழிவுகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் 2022 ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியவாறு தபாலில் அல்லது நேரில் ஒப்படைக்குமாறு கேடடுக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**சிலாபம் பிரதேச சபை.**

2022.05.17ஆம் திகதி
**சிலாபம் பிரதேச சபையில்**

# கேள்வி அழைப்பு

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை கேகாலை

## துணி மற்றும் திரைச்சீலை கொள்வனவு செய்தல்

01. பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை மற்றும் அதன் கீழ் உள்ள ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு கீழ்க்காணுமாறு துணி மற்றும் திரைச்சீலை வழங்குதல் சார்பாக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து 2022.06.22ம் திகதி மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | விபரம் | அளவு |
|---|---|---|
| 1 | திரைச் சீலை தைத்து பலகை அலுமினியம் உதவியுடன் பொருத்துதல் | 2700 சதுடி அடி |
| 2 | Vertical Sliding Curtains பொருத்துதல் | 380 சதுர அடி |
| 3 | காரிக்கன் துணி | 600m |
| 4 | ஷிடின் துணி | 662m |
| 5 | கட்டில் விரிப்பு 6.5x5 | 54 |

| தொடர் இல. | விபரம் | அளவு |
|---|---|---|
| 6 | சதுர வடிவ துணி 6.5 x 5 அடி | 61 |
| 7 | தூசு துடைப்பான் 1.5 அடி | 160 |
| 8 | கை துவாய் 03 அடி | 155 |
| 9 | ரெக்சின் மெத்தை உறை 6x3 அடி | 47 |
| 10 | மெகின்டொஸ் | 10m |

கேள்வி ஆவணங்கள் கேகாலை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவிற்கு 2022.05.23 முதல் 2022.06.21 வரையான வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூபா 100.00 தொகையைச் செலுத்தி கொள்வனவு செய்யலாம்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையான கேள்விதாரர்களுக்கு வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) இடம் மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் கேள்வி கோரல் பத்திரங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**கேகாலை.**
**தொ.பே. 035-2222549/035-2222578/035-2222571**
**பெக்ஸ் 035-2221253**

# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண சபை

## தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

## (ஆரம்ப சுகாதார சேவை அமைப்பை வலுவூட்டும் செயற்றிட்டம் – (PSSP)

காலி தென் மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக 2022.05.23 முதல் 2022.06.21 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும். 2022.06.21 மு.ப. 10.30 இற்கு தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் கேள்விதாரர்கள் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

| தொடர் இல. | விபரம் | தேவைப் படும் பதிவு | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை ரூ. | மீளளிக்கப் படாத கேள்வி வைப்பு ரூ. | கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| 1 | வெளிநோயாளர் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மற்றும் மருந்துக் களஞ்சியம் பழுதுபார்த்தல் ஆரம்ப சிகிச்சை பிரிவு கல்பொக்க | C7 | 20000.00 | 1500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 2 | வெளிநோயாளர் பிரிவு பழுது பார்த்தல் ஆரம்ப சிகிச்சை பிரிவு கபுகம | C7 | 20000.00 | 1500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 3 | அவசர சிகிச்சை பிரிவு பழுதுபார்த்தல் ஆரம்ப சிகிச்சை பிரிவு மிரிஸ்ஸ | C7 | 20000.00 | 1500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 4 | ரன்ன பிரதேச வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல் | C7 | 20000.00 | 1500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |
| 5 | நாக்குளுகமுவ பிரதேச வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல் | C7 | 20000.00 | 1500.00 | தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் |

02. கேள்விப் பத்திரங்கள் 2022.06.17 பி.ப. 3.00 வரை தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேலே தரப்பட்டுள்ள தேவைப்படும் பதிவைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவைக் கொண்டுள்ள மற்றும் தென் மாகாண சபையின் கீழ் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

03. கேள்விப் பத்திரங்கள் சம்பந்தமான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளக் கூடிய தொ.பே. இலக்கங்கள் கீழ்க்காணுமாறு 091-2231620, 091-2224609, 091-2223839

04. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை வேறு வேறு உறைகளில் இட்டு அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டு வந்து அலுவலகத்தில் உள்ள கேள்விகப் பெட்டியில் உள்ளிடலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விகளை சமர்ப்பிப்பவர்கள் அல்லது அவர் சார்பாக அதிகாரம் அளிக்கப்படும் பிரதிநிதி ஒருவருக்கு சமுகமளிப்பதற்கு வேண்டப்படுகிறது. பூர்த்தியற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விப் பிணைத் தொகையும் அரசுடமையாக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்காத கேள்விதாரர்களின் கேள்விப் பிணை தொகையும் அரசுடமையாக்கப்படும்.

05. மேற்படி கைத்தொழில்களுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணைக் கட்டணம் தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு காசாகச் செலுத்தலாம். அல்லது அரச பெறுகை செயற் கோவையின் 5:3:13 மாதிரியின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட குறித்த பெறுமதியுடைய பிணை முறியொன்றை தென் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். காசாக சமர்ப்பிப்பதாயின் பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றை கேள்விப் பத்திரங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் 2022.06.21ம் திகதி முதல் 2022.09.21 வரையானதாக இருத்தல் வேண்டும்.

06. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம் 03 மாதங்களாகும்

07. சகல விலைமனுக்களையும் உள்ளடக்கிய கேள்விப் பத்திரத்திலும் அலகின் விலை மனுக்கள் மற்றும் குழுத் தொகையைக் குறிப்பிடும் நிரல் மற்றும் சுருக்கம் (கழிவைக் குறிப்பிடும் நிரல் உட்பட) தெளிவாகத் தெரிகின்ற (transparent) செலோடேப், செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

08. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு.**
**தென்மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் திணைக்களம்,**
**இல. 15ஏ, பஹல டிக்சன் வீதி, காலி.**
2022.05.23

## எரிசக்தி அமைச்சு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### நீடிப்பு அறிவித்தல்

**யாழ்ப்பாண விமான நிலையத்திற்கு 15,000 லீற்றர் கொள்ளளவுடைய 02 எண்ணிக்கையான எரிபொருள் நிரப்பிகளை வடிவமைத்தல் மற்றும் வழங்குதல்**

**B/25/2022**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இந்த விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதி முடிவுறுத்தல் நேரமான 2022-05-20ஆம் திகதி பி.ப. 2.00 மணியானது இப்போது 2022.06.10ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2022.09.09ஆம் திகதி வரை) மற்றும் விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (2022.10.07ஆம் திகதி வரை)

முன்னைய விளம்பரத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமிற்றி அவ்வாறேயிருக்கும்.

**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09,**
**தொலைபேசி: 0094 11-5455331**
**தொலைநகல்: 0094 11-5455424**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - சப்ரகமுவ

## உள்விழி வில்லைகள் மற்றும் நுகர்வுப்பொருட்களை (Intraocular Lenses & Consumables) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

கீழே விபரிக்கப்பட்டுள்ள உருப்படிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சப்ரகமுவ மாகாணத்தின் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| உருப்படி இல. | உருப்படி | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறி பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| 1 | Foldable Hydrophobic Intraocular lenses | 2000 | விலைக் கோரல் பெறுமதியின் 1% |
| 2 | Slit knife 2.6 mm and 2.2 mm single use | 2000 | |
| 3 | Methyl Cellulose for ophthalmic use 2.0 ml – 2.5 ml vials | 2000 | |
| 4 | Eye Drape with pouch | 2000 | |
| 5 | Balance Soult Solution (BSS) bottles - 500 ml | 200 | |
| 6 | Methylene Blue / Trypan Blue | 100 | |
| 7 | Sodium Hyaluronate – 1.8% | 300 | |
| 8 | Sodium Hyaluronate – 3 % | 200 | |

விலைமனுதாரர் இலங்கைக்கு உள்விழி வில்லைகள் மற்றும் அல்லது நுகர்வுப் பொருட்களை வழங்குவதற்கான அங்கீகரிக்கப்பட்ட வழங்குநராகவிருத்தல் வேண்டும்.

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் இரத்தினபுரி, இல. 75, தர்மபால மாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022 ஜூன் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   **பணிப்பாளர்,**
   **மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
   **இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.**

3 தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்
   அ. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   ஆ. உள்விழி வில்லைகள் மற்றும் அல்லது நுகர்வுப் பொருட்களை விற்பனை செய்வதில் 2022 ஜூன் 16ஆம் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர் கடந்த மூன்று வருடங்களில் ஒரு ஒப்பந்தத்திற்கான ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தகாரராகவிருத்தல் வேண்டும்.
   - மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்படும்.
4. இரத்தினபுரி, இல. 75, தர்மபால மாவத்தை, சப்ரகமுவ - மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2022 மே 23ஆம் திகதி முதல் 2022 ஜூன் 14ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மற்றும் 2022 ஜூன் 15ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையிலும் விலைமனுக்கள் வழங்கப்படும். வழங்கப்படும் ஒவ்வொரு விலைமனுவிற்கும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபா அறவிடப்படும். கொடுப்பனவுகளை சப்ரகமுவ - மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
5. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட தரப்பினருக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மேற்குறிப்பிடப்பட்ட (02ஆம் பந்தியில்) முகவரியில் 2022 ஜூன் 06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியான விலைமனுக்களை 2022 ஜூன் 16ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிமம்பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும். ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் தலைப்பு தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
9. மேலே குறிப்பிடப்பட்ட முகவரியானது: தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.**
2022-05-23.
**தொலைபேசி: 045- 2222322 / 045-2223270 தொலைநகல் : 045 - 2233830**

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 91/5, மிக்சிட்டி கிழக்கு, கலுவரிப்புவ கிழக்கு கட்டான மற்றும் தற்பொழுது இல. 58, யகிநாரங்கடுவ, ஏக்காலை எனும் முகவரியில் வசிக்கும் **வஜ்ஜக்கர கங்கானம்லாகே எட்மண்ட் அஜித் பிரசன்ன டயஸ்** மற்றும் **கலுகுலசூரியகே ஜெசிந்தா ரோஸ் ஸ்ரீயானி பெரேரா ஜயவர்தன** ஆகிய நாம் இருவரும் நாளேட்டு இலக்கம் 12472 மற்றும் தொகுதி இலக்கம் 281 மடிதாள் 130இன் கீழ் பதிவாளர் நாயகம் திணைக்களம், பத்தரமுல்லையில் 2019ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட **வஜ்ஜக்கர கங்கானம்கே அலெக்சாண்டர் சுசித்** மறுபெயர் **விக்ரமடயஸ்** என்பவருக்கு இல. 100, நீர்கொழும்பு வீதி, கந்தானை எனும் முகவரியில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிஸ் திரு. N.F. வேர்னன் குரே என்பவரினால் 2019ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09ஆம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 6792 உடைய விஷேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் வழங்கிய அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்து மீளப் பெற்றுக்கொள்கின்றோம். என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்

**வஜ்ஜக்கர கங்கானம்லாகே எட்மண்ட் அஜித் பிரசன்ன டயஸ்**
**கலுகுலசூரியகே ஜெசிந்தா ரோஸ் ஸ்ரீயாணி பெரேரா ஜயவர்தன**
2022ஆம் ஆண்டு மே மாதம் 08ஆம் திகதி

## வாரியப்பொல பிரதேச சபை

## 2023 ஆண்டிற்காக வரவு செலவுத் திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

1989 இல. 12 மாகாண (விளைவு விதிமுறைகள்) சட்டத்தின் இரண்டாம் பிரதிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 இல. 15 பிரதேச சபை சட்டத்தின் 184ஆம் பிரிவில் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2020.10.29ம் திகதி இல. 2199/15 இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் (அதி விசேட) வர்த்தமானியின் பிரகாரம் பிரதேச சபை வரவு செலவுத்திட்டம் மற்றும் அமுலாக்கும் விதிகள், இல. 06இன் பிரகாரம், வாரியபொல பிரதேச சபையின் தலைவரான என்னால் 2023ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கான மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்கு உத்தேசிக்கும் அபிவிருத்தி ஆலோசனைகள் பொதுமக்களிடமிருந்து கோரப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன்.

உங்களது 2023ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனைகளை 2022.06.30ம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்குமாறு தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

**2022.05.23**
**வாரியபொல பிரதேச சபை**
**037-2267275**

**தலைவர்,**
**டி.எம். அநுர சுதர்ஷன,**
**வாரியபொல பிரதேச சபை.**

## 2023 ஆண்டிற்காக வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

## ஆரச்சிகட்டுவ பிரதேச சபை

1987 இல. 15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாண கௌரவ ஆளுநரான ராஜா கொல்லுரே அவர்களால் 2020.10.29ம் திகதி மற்றும் இல. 2199/15 எனும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் அமுலாக்கும் விதி இல. 6 இன் பிரகாரம் ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் தலைவரான என்னால் 2023ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் பொதுமக்களிடமிருந்து கோரப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன். உங்களது 2023 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனை அல்லது ஆலோசனைகளை 2022 ஜுன் 30ம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்குமாறு தபாலில் அல்லது கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவித்துக்கொள்கிறேன்.

**கே. தட்சனாமூர்த்தி**
**தலைவர்,**
**ஆரச்சிகட்டுவ பிரதேச சபை.**

**2022.05.20ம் திகதி**
**ஆரச்சிகட்டுவ பிரதேச சபையில்**

### பெயர் மாற்றம்

குருநால் மாவட்டம் பாணகமுவ என்ற இடத்தைச் சேர்ந்த **மொஹமட் ரிழா** எனும் பெயரில் முன்பு அழைக்கப்பட்ட நான் எனது பெயரை மாற்றி **ஸைன் (ZAIN)** என்று வைத்துக் கொண்டேன் என இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**ஸைன் (Zain)**

**Repeat Your Ad For Better Offers**

## ஒன்றிணைத்தல் அறிவித்தல்

**2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கம் கம்பனிகள் சட்டத்தின் 244(3)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

### சன்ஷைன் கண்சியமர் லங்கா லிமிட்டட் (Sunshine Consumer Lanka Limited) ஆகிய நிறுவனம் டெயின் டீ லிமிட்டட் (Daintee Limited) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

சன்ஷைன் கண்சியுமர் லங்கா லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PB 3812) ஆகிய நிறுவனம் டெயின் டீ லிமிட்டட் (கம்பனிப் பதிவிலக்கம் PB 439) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)(அ) பிரிவின் நியதிகளின் கீழ் 2022 ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப, 2022 ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள், 2022 ஏப்ரல் மாதம் 02ஆம் திகதியில் இருந்து சன்ஷைன் கண்சியுமர் லங்கா லிமிட்டட் என தொடரும்.

**சபையின் கட்டளைப்படி,**
**கோபரேட் சேர்விசஸ் பிரைவேட் லிமிடட்,**
**கம்பனி செயலாளர்,**
**சன்ஷைன் கண்சியுமர் லங்கா லிமிட்டட்**

## கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### கமநல வங்கி மற்றும் கமநல அபிவிருத்தி நிர்வாகச் சபையின் முகாமைத்துவத் தகவல் அமைப்பொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு விலைமனு கோரல்

**DAD/FIN/PRO/5/15 OA & Acc. Software**

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பொருட்டு திணைக்களத்தின் பெறுகைச் சபையின் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் தமைமையுடைய விநியோக நிறுவனங்களிடமிருந்து கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கமநல வங்கி மற்றும் கமநல அபிவிருத்தி நிர்வாகச் சபையின் பொருட்டு முகாமைத்துவத் தகவல்கள் அமைப்பொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றது.

1. தேசிய போட்டி பெறுகை அழைப்பு முறையைக் கடைப்பிடித்து பெறுகை அழைப்பு மேற்கொள்ளப்படும் என்பதுடன், இதன் பொருட்டு **கமநல வங்கியின் மூலம் நிதி வழங்கப்படும்.**
2. பெறுகை தொடர்பில் விருப்பம் தெரிவிக்கும் தகைமையுடைய வழங்குநர்களுக்கு, பெறுகை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் இத்திணைக்களத்தின் கணக்காளர் (பெறுகைகள்) 011-2674480 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது ஆணையாளர் (அபிவிருத்தி) 011-2691070/077 8317443 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், 23.05.2022 ஆந் திகதி தொடக்கம் 13.06.2022 ஆந் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையில் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் அல்லது திணைக்களத்தின் இணையதளத்தில் (www.agrariandept.gov.lk) பெறுகை ஆவணைங்களைப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
3. பெறுகைக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத ரூபா 5,000.00 ஐத் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், 23.05.2022 ஆந் திகதி தொடக்கம் 13.06.2022 ஆந் திகதி வரையில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையில் எழுத்து மூலமான ஆவணத்தை, பிரதான கணக்காளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், சேர் மார்க்கஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்குச் சமர்ப்பித்ததன் பின்னர் பூரணப்படுத்தப்பட்ட பெறுகை ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.
4. பூரணப்படுத்தப்பட்ட ஆவணங்களை தலைவர், திணைக்களப் பெறுகைச் சபை, கமநல அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம் 42, சேர் மார்க்கஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு 15.06.2022 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் கணக்குப் பிரிவுக்கு நேரடியாக எடுத்து வந்து கையளித்தல் வேண்டும்.
5. தாமதமாகிக் கிடைக்கப்பெறும் பெறுகைப் பத்திரங்கள் பாரமேற்றுக் கொள்ளப்படமாட்டாது. 15.06.2022 ஆந் திகதி பி.ப. 2.05 மணிக்கு பெறுகைப் பத்திரங்களைத் திறந்து வைத்தல் மேற்படி முகவரியில் இடம்பெறும் என்பதுடன், இதன் பொருட்டு பெறுகை வழங்குநர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
6. பெறுகைக் கூட்டம் தொடர்பான முன்னறிப்பு திணைக்களத்தின் பெறுகைச் சபையினால் பின்னர் அறிவிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைச் சபை,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 42, சேர் மார்க்கஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு - 07.**
23.05.2022

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

### தோராயமாக 1000kw தொடர் வினைத்திறன் கொண்ட டீசல் மின் பிறப்பாக்கியின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கான தேசிய போட்டிரீதியான விலைமனு - (PR-7702)

செவனகல பிரிவுக்கு 1000kw தொடர் வினைத்திறன் கொண்ட டீசல் மின் பிறப்பாக்கியின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக 16,000.00 ரூபாவை செலுத்தி 2022 ஜுன் 15 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2022 ஜுன் 16 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், கைகளால் கொண்டுவந்து சேர்ப்பதன் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''தோராயமாக 1000kw தொடர் வினைத்திறன் கொண்ட டீசல் மின் பிறப்பாக்கியின் வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலுக்கான கேள்விமனு - (PR-7702)'' என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் இலங்கை ரூபா 1,350,000.00 (ஒரு மில்லியனே முந்நூற்று ஐம்பதாயிரம்) விலைமனு பிணையை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு மதிப்பிடப்பட்ட செலவும் 90 மில். இலங்கை ரூபாவாக அமையும்.
5. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு செவனகல கேட்போர்கூடத்தில் 2022 ஜுன் 9 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும்.
6. 1000kw தொடர் வினைத்திறனுக்கு நெருக்கமான உயர் செயல்திறனுடன் குறைந்த விலை அடிப்படையில் கூறுவிலை தேர்வுசெய்யப்படும்.
7. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 077 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04.**

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 மே 25ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 90,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122H261 | LKA18222K254 | LKA36423E267 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 45,000 | 22,500 | 22,500 | 90,000 |

ஏல விற்பனைத் திகதி : 2022 மே 25
தீர்ப்பனவுத் திகதி : 2022 மே 27
வழங்கப்படும் திகதி : 2022 மே 27
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 மே 25, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

### களனி பல்கலைக்கழகம் – இலங்கை

## வெற்றிடங்கள்

2020/2021 கல்வி ஆண்டிற்காக கீழ்க்காணும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் 2022.06.09ம் திகதி வரை என்னால் ஏற்கப்படும்.

- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்விளக்கம் காட்டுநர்
- கனிஷ்ட இணை அங்கத்தவர் (fellow)

**சமூக விஞ்ஞான பீடம்**

தொலைதொடர்பு கல்விப் பிரிவு/ காட்சிப்படுத்தல் கல்விப் பிரிவு/ நூலகம் மற்றும் விஞ்ஞான கல்விப் பிரிவு/ வரலாற்று கல்விப் பிரிவு/ சமூக விஞ்ஞான கல்விப் பிரிவு/ பூகோள விஞ்ஞான கல்விப் பிரிவு/ தொல் பொருளியல் கல்விப் பிரிவு/ பொருளியல் கல்விப் பிரிவு/ சமூக கல்விப் பிரிவு/ அரசியல் கல்விப் பிரிவு/ சர்வதேச கல்விப் பிரிவு/ விளையாட்டு மற்றும் உடற்கல்வி பிரிவு/ தகவல் மற்றும் தொலைத்தொடர்பு கல்விப் பிரிவு

**பீடாதிபதி அதி**

**மானிடவியல் பீடம்**
சிங்கள கல்விப் பிரிவு/ ஹிந்தி கல்விப் பிரிவு/பாலி மற்றும் பௌத்த கல்விப் பிரிவு/ ஆங்கில கல்விப் பிரிவு/ கலாசார மற்றும் கீழைத்தேய சாஸ்திர கல்விப் பிரிவு/ அழகியற்கலை கல்விப் பிரிவு/ (கலை, திட்டமிடல் மற்றும் அரங்கேற்றல் கலைப் பிரிவு, நாடகம் மற்றும் அரங்கேற்றக்கலை மற்றும் கலைப் பிரிவு) வாஸ்து சாஸ்திர கல்வி பிரிவு/ பிறமொழி கல்விப் பிரிவு/ மேலைத்தேய சம்பிரதாய கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ கலாசார கல்விப் பிரிவு/ஆங்கில மொழி கற்பித்தல் கல்விப் பிரிவு

**பீடாதிபதி அலுவலகம்**
**கல்விமாணி பட்டம் (B.Ed.)**

**வணிக மற்றும் முகாமைத்துவ கல்விப் பீடம்**
**மனித வள முகாமைத்துவ கல்விப் பிரிவு**

**விண்ணப்பிக்கும் முறை:**
மேற்படி பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுவது ஒன்லைன் முறையின் மூலமாகும். விண்ணப்பத்திற்கு பிரவேசித்தல் விண்ணப்பத்தை நிரப்புவதற்கான வழிகாட்டல்கள், கல்வித் தகைமைகள் சம்பளம் மற்றும் சலுகைகள் பற்றிய தகவல்கள். https://www.kln.ac./Vacancies என்ற இணையதளத்திற்கு பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒன்லைன் முறையில் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 09.06.2022ம் திகதி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்.**
2022.05.20

## பாவனையாளர் நெல் விற்பனைக்கான விலைமனுக் கோரல்

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின், விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்குச் சொந்தமான கீழ்க்காணும் அலகுகளில் உள்ள பாவணையாளர் நெல் தொகையை விற்பனை செய்வதற்காக பணிப்பாளர், பெறுகைக் குழுவினால் 2022.06.13ம் திகதி பி.ப. 2.00 வரை தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பி.வி.ப. பணிமனை பண்ணை | முழு நெல் தொகை (கி.கி) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|
| | | காசாக | வங்கிப் பிணை |
| அரச விதை உற்பத்தி பண்ணை பொலன்னறுவை | 82320 | 30,600.00 | 61,200.00 |
| பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) பணிமணை, பொலன்னறுவை | 76500 | 30,600.00 | 61,200.00 |
| விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணிமனை மஹஇலுப்பல்லம | 344045 | 21,300.00 | 42,600.00 |

02. மேற்படி (i) ஆம் நிரலில் குறிப்பிடப்படும் பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனை மற்றும் பண்ணைகள் பணியகத்தில் அலுவலக நேரங்களில் நெல்லை பரீட்சிக்க முடியும் அத்துடன் இல. 02 நிரலில் குறிப்பிடப்படும் நெல் தொகைகளின் அளவை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்து அல்லது மேற்படி பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத ரூ. 3500/- கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் அல்லது மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு காசாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம் அல்லது மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) பணியகத்திற்கு சமர்ப்பித்து பெற்றுக்கொண்ட கேள்விப் படிவத்தில் கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் 2022.05.23 முதல் 2022.06.10 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

04. கேள்வி அறிவுருத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளும் 'தலைவர், பிரதேச பெறுகைக் குழு, விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம். பேராதனை' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் கேள்விகள் மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும்.

05. கேள்விதாரர்களால் கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் அல்லது தபாலில் அனுப்பப்படும் கேள்விகள் 2022.06.13ம் திகதி பி.ப. 2.00 வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்**
**விவசாயத்திணைக்களம்**
**பேராதனை.**
**தொ.பே. 081-2388106/122**



# இலங்கையின் கால்பந்து முன்னேற்றத்திற்கு மூன்று வருட அபிவிருத்தி திட்டம்

கட்டார் கால்பந்து சங்கம் மற்றும் கத்தாரின் அஸ்பயர் அகடமி ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை கால்பந்து சம்மேளனம் மேற்கொள்ளவுள்ள கால்பந்து முன்னேற்றத்திற்கான 3 வருட அபிவிருத்தி திட்டமொன்று உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய கால்பந்து அணிக்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இந்த புதிய திட்டம் என்பவற்றை அறிமுகம் செய்யும் ஊடக சந்திப்பு வெள்ளிக்கிழமை (20) இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

எதிர்காலத்தில் விளையாடவுள்ள இலங்கை கால்பந்து வியூக முறைமையை உருவாக்கும் வகையில் மகளிர் அணி, இளையோர் அணிகள் உட்பட சகல தேசிய அணிகளும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட்டு ஒரே உத்திகளுடன் பயிற்சிகள் அளிக்கப்படும்.

புதிதாக நியமனம் பெற்று இந்த வாரம் இலங்கை வந்தடைந்த தேசிய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் அண்ட்ரூ மொர்ரிஸன் மற்றும் உதவிப் பயிற்றுவிப்பாளர் கெய்த் ஸ்டீவன்ஸ் ஆகியோர் தேசிய அணி வீரர்களைக் கண்காணித்து அவர்களது ஆற்றல்களை ஆய்வு செய்துள்ளதுடன் தற்போதைய தேசிய அணியின் பயிற்சி நிலையங்களையும் பார்வையிட்டனர். அணியைத் தயார் செய்யும் பணியில் அவர்கள் இருவரும் உள்ளூர் பயிற்றுவிப்பாளர் குழாத்துக்கு ஆலோசனை மற்றும் ஆதரவு வழங்கிவருகின்றனர்.

1995 தங்கக் கிண்ண வெற்றியின்போது இலங்கை அணியின் உடற்தகுதி பயிற்றுவிப்பாளராக இருந்த மார்க்கஸ் பெரெய்ரா, இந்த திட்டத்திலும் உடற்தகுதி பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




அவுஸ்திரேலியாவின் முன்னாள் உலகக் கிண்ண அணித் தலைவரான டிம் காஹில் இந்த திட்டத்தின் தலைமை கால்பந்து அதிகாரி மற்றும் திட்டப் பணிப்பாளராக செயற்படவுள்ளதுடன் முழுத் திட்டத்தையும் அஸ்பயர் அகடமி சார்பாக மேற்பார்வை செய்யவுள்ளார்.

தேசிய அணிகளின் மேம்பாட்டு மூலோபாயங்களில் பல கூறுகளை இந்தத் திட்டம் கொண்டிருக்கும். போட்டி கட்டமைப்பில் சீர்திருத்தங்கள், அதிசிறப்பு பயிற்சிக் கல்வி மற்றும் ஆலோசனை, அடிமட்ட மற்றும் இளையோருக்கான உறுதியான கால்பந்தாட்ட கட்டமைப்பை ஸ்தாபித்தல், மிகச் சிறந்த வீரர்களுக்கு வெளிநாட்டு லீக் போட்டிகளில் விளையாடுவதற்கான நிபுணத்துவ பரிமாற்றங்களையும் புலமைப்பரிசில்களையும் வழங்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

இடைக்கால ஏற்பாடாக போட்டிக்கான திட்டங்களை வகுத்தல், வீரர்கள் தொடர்பான மதிப்பீடுகள், போட்டிகளை ஆய்வு செய்தல் போன்ற உதவிகளும் உள்ளூர் பயிற்றுவிப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

உஸ்பெகிஸ்தானில் இடம்பெறவுள்ள ஏஎப்சி கிண்ண தகுதிகாண் சுற்று நிறைவுபெற்றதும் இரண்டு பயிற்றுவிப்பாளர்களும் தாங்கள் கண்டறிந்தவை தொடர்பான பூரண அறிக்கை ஒன்றை இலங்கை கால்பந்து நிருவாகத்திற்கும் கட்டார் கால்பந்தாட்ட சங்கத்திற்கும் சமர்ப்பிப்பார்கள். அதில் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளையும் அவர்கள் முன்வைப்பார்கள்.

சர்வதேச தரவரிசையில் தற்போது 205ஆம் இடத்தில் உள்ள இலங்கைக்கு குறுகிய காலத்தில் முன்னேற்றம் அடைய இந்தத் திட்டம் வழிவகுக்கும் என்று இலங்கை கால்பந்து சம்மேளனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் "எனது வாழ்நாளில் நான் நேசித்த விளையாட்டை மேம்படுத்தும் எனது கடப்பாட்டின் ஓர் அங்கமாக இலங்கை மக்களுக்கு இந்த விசேட திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் நான் மிகவும் பெருமை அடைகிறேன். இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய சகல செலவினங்களையும் ஏற்று உதவ முன்வந்துள்ள கட்டார் கால்பந்தாட்ட சங்கத் தலைவர் ஷெய்க் ஹமாத் பின் அல் கலீபா அல் தானி, அஸ்பயர் அகடமி மற்றும் அஸ்பயர் மன்றம் ஆகியவற்றின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிம் காஹில் ஆகியோருக்கு நான் நன்றி கூறுகிறேன். மிகவும் இக்கட்டான இந்த காலகட்டத்தில் இலங்கைமக்களுக்கு உதவி வரும் கட்டார் மக்களுக்கு எனது விசேட நன்றிகள்" என்று தெரிவித்தார்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 28-05-2022 இல. 09

STREAM LIKE A BOSS!
இலங்கையின்
முதன்மையான,
அதிவேகமான
மற்றும் விஸ்தரிக்கப்பட்ட
PREMIUM FIBRE வலையமைப்பு.
SLTMOBITEL
FIBRE
www.sltmobitel.lk

# இலங்கையின் முன்னணி கிரிக்கெட் வீரர் முத்துமுதலிகே புஷ்பகுமார

1978 ஆம் ஆண்டு ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஒஃப் தி இயர் போட்டி தொடங்கப்பட்டதிலிருந்து, மெகா ஷோ பாடசாலை கிரிக்கெட் வீரர்களால் மிகவும் எதிர்பார்க்கப்படும் நிகழ்வாக மாறியது. பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் மட்டுமின்றி அந்தந்த பள்ளிகளின் பழைய மாணவர்களாலும், விளையாட்டு ஆர்வலர்களாலும் இதை நாகரீகமாக மாற்றியுள்ளனர்.

கடந்த 15 வருடங்களாக தனது நிதியுதவியை வழங்கி வரும் SLT மொபிடெல் இந்த நிகழ்விற்கு அனுசரணை வழங்குகின்றது.

இலங்கையின் முன்னாள் வீரர் முத்துமுதலிகே புஷ்பகுமார, ஒப்சர்வர் பாடசாலை துடுப்பாட்டப் போட்டியின் மூலம் வெளிப்பட்ட மிக முக்கியமான பாடசாலை வீரர்களில் ஒருவராவார்.

1999 ஆம் ஆண்டு ஒப்சர்வர் பாடசாலை துடுப்பாட்டப் போட்டியில் பட்டம் பெற்ற புஷ்பகுமார தமிழ் யூனியன் கிரிக்கெட் மற்றும் தடகள கழகத்திற்காக விளையாடினார், பின்னர் ஆனந்தா கல்லூரியின் சகலதுறை ஆட்டக்காரர் இலங்கைக்காக விளையாடினார்.



புஷ்பகுமாராவின் செயல்திறனில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், அவர் மதிப்புமிக்க ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் விருதை வென்றது மட்டுமல்லாமல், 1999 இல் மற்ற இரண்டு பிரிவு ஒன்று பட்டங்களையும் வென்றார் சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் சிறந்த சகலதுறை வீரர். அவர் லும்பினியின் ரணில் தம்மிக்கவை இரண்டாவது இடத்திற்குத் தள்ளி சிறந்த பந்துவீச்சாளராக ஆனார், அதே நேரத்தில் அவர் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராகவும் ஆனார், இரண்டாவது இடத்தைப் பிடித்த அவரது ஆனந்த அணி வீரர் திலின கண்டம்பியை விட முன்னேறினார்.

செப்டம்பர் 26, 1981 இல் கொழும்பில் பிறந்த புஷ்பகுமார, 1999 ஆம் ஆண்டில் விரும்பத்தக்க ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் விருதை வென்ற ஆறாவது ஆனந்தியன் ஆனார்.

புஷ்பகுமார 20072008 இன் கிளப் பிரீமியர் லீக் சம்பியன்ஷிப்பில் போட்டியின் சிறந்த வீரர் விருதையும் வென்றார். பிக் டைம் கிரிக்கெட்டில் தமிழ் யூனியனுடன் தனது முதல் பருவத்தில், புஷ்பகுமார ஒரு சதம் மற்றும் நான்கு அரைசதங்கள் உட்பட 42.14 சராசரியில் 590 ஓட்டங்களை குவித்து, SSC மற்றும் Moors SC க்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தைப் பெறுவதற்கு சிறந்த பங்களிப்பை வழங்கினார். 34 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

2000 ஆம் ஆண்டில் பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் பருவத்திலும் அவர் ஏராளமான வெற்றிகளைப் பெற்றார். முத்துமுதலிகே புஷ்பகுமார, டிசம்பர் 2000 இல் நடைபெற்ற இலங்கை பாடசாலைகளின் வண்ண விருது வழங்கும் விழாவில் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

புஷ்பகுமார இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட 19 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டியின் நிறைவில் பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கிண்ணத்தை வழங்குவதற்காக மற்றுமொரு உயர் மட்ட விருதை பெற்றுக்கொண்டார்.

2000 ஆம் ஆண்டு முழுவதும் அவர் களத்தில் சிறப்பாக விளையாடியதைத் தொடர்ந்து, இந்த விருதுக்கு அவர் தானாகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கொழும்பில் நடைபெற்ற இளையோர் உலகக் கோப்பைப் போட்டியின் போது ஆல்ரவுண்டர் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தார், அங்கு இலங்கை இந்தியாவிடம் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. வேல்ஸ் இளவரசர் விருதை அப்போதைய இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் லின்டா டஃபீல்ட் அவருக்கு வழங்கினார்.

ஒப்சர்வர் SLT மொபிடெல் மிகவும் பிரபலமான பாடசாலை கிரிக்கெட் வீரர் வாக்களிப்பில் இது கடைசி இரண்டு மாதங்களில் வாக்களிக்கப் போகிறது. எனவே, உங்கள் அல்மா மேட்டரில் இருந்து உங்களுக்குப் பிடித்த கிரிக்கெட் வீரர்களுக்கான உங்கள் இறுதி வாக்கெடுப்பில் விரைந்து வாக்களிக்க வேண்டிய நேரம் இது.

# வலய மட்ட விளையாட்டுகளில் கல்முனை உவெஸ்லி சாதனை

*( காரைதீவு குறூப் நிருபர் )*

கிழக்குமாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை திணைக்களம் நடத்திவரும் கல்முனை வலயத்திற்குட்பட்ட பாடசாலைக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இவ் விளையாட்டுப் போட்டிகளில் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை சாதனை படைத்துள்ளது.

குறிப்பாக 20 வயதுக்கு கீழ்பட்டபெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் முதலிடத்தையும் 20 வயதுக்குட்பட்ட கீழ் பட்ட பெண்களுக்கான எல்லே போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று அதேவேளை 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது. இவ் அணியினரைப் பாராட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் செ.கலையரசன் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வலய பாடசாலைகளுக்கிடையிலான நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் நான்கு பாடசாலைகளும் எல்லே மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் தலா ஐந்து பாடசாலைகளும் பங்குபற்றின. இருபது வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் தீவிர சாதனை படைக்கப்பட்டு இருக்கின்றது.



இறுதிப்போட்டியில் கல்முனை உவெஸ்லி உயர்தர கல்லூரியும் கல்முனை ஆர் கே எம் மகா வித்தியாலய அணியும் போட்டியிட்டன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கல்முனை உவெஸ்லி கல்லூரி அணி 84 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை ஆர் கே எம் வித் தியாலயம் 30 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது அதன் காரணமாக 54 ஓட்டங்களால் உயர்தர பாடசாலையின் பெண்கள் அணி வெற்றி ஈட்டியது . மட்டஇதில் 65 ஓட்டங்களை தன்னந்தனியனாக நின்று வீராங்கனை செல்வி.வி.பிரசாந்தி அந்த ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

அவரையும் அவரது அணியினரையும்

அதிபர் செ. கலையரசன் பாராட்டினார் . மாகாணத்திற்கு தெரிவான ஏனைய குழுக்களையும் அதிபர் பாராட்டினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.